பொழிவு - 18
குவிப்பு - 12
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
டிசம்பர்- 2015
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 68 / News / 2015"

## கிறிஸ்மஸ் புதுவருட சிறப்புப் பொழிவு




"விண்ணில் இருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது"
(லூக் 1: 78)





## மன்னா அன்பு நெஞ்சங்களே!

வாசகப் பெருமக்களே, எழுத்தாளர்களே, பத்திரிகை விநியோகஸ்தர்களே, பத்திரிகை அபிமானிகளே! உங்கள் அனைவரையும் நெஞ்சார நினைக்கின்றோம்; அன்போடு நன்றி கூறுகின்றோம். அமைதியின் அரசராம் இயேசு கொண்டுவந்த அமைதி உங்கள் உள்ளங்களில் நிலைக்க வாழ்த்துகின்றோம்; ஆசிக்கின்றோம்; செபிக்கின்றோம். உங்களுக்கு எமது அன்பும் அருளும், அமைதியும் நிறைந்த கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

நிறைந்த ஆசீருடன்,
அருட்பணியாளர் தமிழ் நேசன், மன்னா பதிப்பாசிரியர்
மற்றும் அலுவலகப் பணியாளர்கள்

## திருத்தந்தையின் ஆபிரிக்கப் பயணம்





## புனித வளனார் சகோதரிகள் சபையின் மேனிலை முதல்வர் மன்னார் வருகை



மன்னார் மறைமாவட்டத்தின் உயிலங்குளம் பங்கின் நொச்சிக்குளம் கிராமத்தை வதிவிடமாகக்கொண்டு பணியாற்றுகின்ற லியோன்சின் புனித வளனார் சபை அருட்சகோதரிகளின் உலகளாவிய மேனிலை முதல்வர் (Superior General of the Congregation of the Sisters of St. Joseph of Lyons) அருட்சகோதரி கத்தரின் பரஞ், சபையின் பொருளாளர் அருட்சகோதரி செசிலி மற்றும் இந்திய மாகாணதலைவி அருட்சகோதரி எமிலி ஜோசப் ஆகியோர் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டு கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்திற்கு வருகை தந்தனர். தமது அருட்சகோதரிகள் ஆற்றும் பணிகளைப் பார்வையிட்டு அவர்களை ஊக்கப்படுத்துவதே இவர்களுடைய வருகையின் முக்கிய நோக்கமாக இருந்தது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## சிறப்பாக நடந்தேறிய புதிய யாழ் ஆயரின் அருட்பொழிவு



யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்ட மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளாரின் ஆயர் அருட்பொழிவு நிகழ்வு கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி யாழ் மரியன்னை பேராலயத்தில் சிறப்பாக இடம்பெற்றது. இத்திருநிகழ்வு பற்றிய விரிவான கட்டுரையை 4ஆம் பக்கத்தில் காணலாம்.

## அருட்சகோதரி றொசாறியோ இறைபதம்!



கார்மேல் சபை அருட்சகோதரியும் மன்னார் மறைமாவட்டத்தின் ஆட்காட்டிவெளிப் பங்கின் குமானாயன்குளம் கிராமத்தைச் சேர்ந்தவரும், அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் அதிபருமாகிய அருட்சகோதரி மரிய றொசாறியோ (வயது 59) கடந்த நவம்பர் மாதம் 8ஆம் திகதி ஞாயிறு அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் கார்மேல் சபைச் சகோதரிகளுக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர் குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினரின் ஆழ்ந்த அனுதாபங்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)



மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் சார்பாக யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயருக்கு வாழ்த்துக்களையும் செபங்களையும் 'மன்னா' தெரிவித்து மகிழ்கின்றது

## குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் ஜீவனதாஸ் (அமதி) அடிகளார்



அமலமரித்தியாகிகள் (OMI) சபையைச் சேர்ந்தவரும், மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலைப் பங்கு மகனுமாகிய அருட்பணியாளர் ஜீவனதாஸ் பெனாண்டோ அடிகளார் 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி தனது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளி விழாக் காண்கிறார்.

இவர் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் 9 ஆண்டுகளும் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் 13 ஆண்டுகளும் சிறப்பான கல்விப் பணி ஆற்றியுள்ளார்.

அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்டத் திருச்சபை நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது! (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ச்சியூட்டும் நாட்டு நடப்புக்கள்

## வடமாகாணத்தில் உள்ள 46 சிறுவர் இல்லங்களில் 2,694 சிறுவர்கள்

வடக்கு மாகாணத்தில் உள்ள 46 சிறுவர் இல்லங்களில் 2 ஆயிரத்து 694 சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சிறுவர் திணைக்களப் பணிப்பாளர் விஸ்வரூபன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் போர் உள்ளிட்ட பல காரணங்களால் பல சிறுவர்கள் மாகாணத்தின் 46 சிறுவர் இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதில் ஆயிரத்து 830 பெண்களும் 864 ஆண்களுமாக 2 ஆயிரத்து 694 பேர் சிறுவர் இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

இவ்வாறு தங்கியுள்ளவர்களில் அதிகமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 இல்லங்களில் 682 பெண்களும் 268 ஆண்களுமாக 950 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 210 பெண்களும் 43 ஆண்களுமாக 253 பேரும், வவுனியாவில் 342 பெண்களும், 134 ஆண்களுமாக 476 பேரும், கிளிநொச்சியில் 441 பெண்களும், 277 ஆண்களுமாக 718 பேரும், மன்னாரில் 155 பெண்களும், 142 ஆண்களுமாக 297 பேரும் என மொத்தமாக 2 ஆயிரத்து 694 சிறுவர்கள் பராமரிக்கப்படுகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

குறித்த சிறுவர்களைப் பராமரிக்கும் இல்லங்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் ஒருசில இல்லங்களில் அடிப்படை வசதிகள் போதாமல் உள்ளன. அவை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

வடமாகாணத்தில் இயங்கும் 46 சிறுவர் இல்லங்களில் 33 இல்லங்கள் மட்டுமே பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஏனைய 13 இல்லங்கள் பதிவுசெய்யப்படவில்லை. இவை தொடர்ந்து இயங்குவதானால் பதிவுசெய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்.

## இலங்கையில் தினமும் 650 இற்குமேல் கருக்கலைப்புகள்

இலங்கையில் நாளொன்றுக்கு 650 இற்கும் அதிகமான கருக்கலைப்புகள் இடம்பெறுவதாக சுகாதார அமைச்சின் குடும்பநல மருத்துவப் பிரிவு கூறியுள்ளது. இதேவேளை இலங்கையில் 77 வீதமான கருத்தரிப்புகள் எதிர்பாராத கருத்தரிப்புகள் என்று சம்பந்தப்பட்டவர்களால் கருதப்படுவதாகவும் தமது ஆய்வுகள் கூறுவதாக அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து பி.பி.சி.யிடம் பேசிய கிழக்கு மாகாண சமூகநல மருத்துவ நிபுணரான டாக்டர் எஸ். அருள்குமரன், கருக்கலைப்புக்கள் 1000 என்ற எண்ணிக்கையில் இருந்து தற்போது 650 ஆகக் குறைந்துள்ளதாகக் கூறினார்.

கருக்கலைப்புக்கள் மருத்துவ காரணங்களுக்காக மாத்திரமே அரசாங்க மருத்துவமனைகளில் நடப்பதாகவும், ஆனாலும் சில சட்டவிரோத நிலையங்கள் இதற்காகச் செயற்படுவதாகவும் அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## 18 வயதுக்குக் குறைந்த 600 பேர் ஓராண்டில் விபத்தில் உயிரிழப்பு

விபத்துக்களின் காரணமாக இலங்கையில் ஆண்டொண்டிற்கு 18 வயதிற்குக் குறைந்த 600 பேர் உயிரிழக்கின்றனர் என்று தெரிவித்தார் சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன. ஆண்டொன்றில் 18 வயதிற்குக் குறைந்த 27 ஆயிரம் பேர் விபத்துக்களில் சிக்குகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அறிவூட்டல்கள் மூலம் இளவயதினர் விபத்துக்களில் சிக்கிக்கொள்வதைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் பொலிஸாரும், சுகாதாரப்பிரிவினரும் ஒருங்கிணைந்து பெற்றோர்கள் மற்றும் சிறார்களுக்கு அறிவூட்டல்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். "சிறார்கள் பாதுகாப்பற்றவர்கள். அவர்களை அந்தப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்து மீட்டெடுக்கவேண்டும். இது தொடர்பாக கடுமையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். அடுத்த ஆண்டை அழகான வசந்தமாக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப் பெற ஏன் நீங்கள் வழிசெய்யக்கூடாது? -

**ஒரு வருடத்திற்கான**
உள்நாட்டுச் சந்தா ரூபா 800.00
வெளிநாட்டுச் சந்தா ரூபா 3,500.00

எம்மோடு தொடர்புகொள்ளுங்கள் -
077 - 7420811, 023 - 2250789, 023 - 3233276

## தேசிய மட்ட நாடகப் போட்டியில் அந்தோனியார்புரம் பங்கு சாதனை

அர்ப்பண ஆண்டை முன்னிட்டு அகில இலங்கை தேசிய மட்டத்தில் நடைபெற்ற விவிலிய நாடகப் போட்டியில் மத்திய பிரிவில் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அந்தோனியார்புரப் பங்கு மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்று முதல் தடவையாக சாதனை படைத்துள்ளார்கள்.

இந்நாடகத்தை நெறிப்படுத்திய பங்குத்தந்தை அருட்பணி. ரஜனிகாந்த் அடிகளாரையும், மாணவர்களை வழிப்படுத்திய புனித அமல உற்பவ மாதா அருட்சகோதரிகளையும், உற்சாகமூட்டி ஒத்துழைப்பு வழங்கிய மறையாசிரியர்களையும், மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அத்தோடு இவ்வாண்டு ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் அந்தோனியார்புரப் பாடசாலையின் மாணவர்களான அ. டிலைக்சன் 156 புள்ளிகளையும், வி. அபிசாந் 154 புள்ளிகளையும் பெற்று பங்குக்கும், கிராமத்துக்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளார்கள். இவர்களைப் பாராட்டுவதோடு, நூற்றுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும், இவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். எதிர்காலத்திலும் இதுபோன்ற சாதனைகளைப் படைக்க ஆசிக்கின்றோம்.

*தகவல் : அந்தோனியார்புரப் பங்கு மக்கள்*

## திருச்சிலுவைக் கன்னியர்களின் நித்திய அர்ப்பணம்

திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்த நான்கு அருட்சகோதரிகள் கடந்த நவம்பர் மாதம் 7ஆம் திகதி காலை 10.00 மணிக்கு வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியின்போது தமது நித்திய அர்ப்பணத்தை மேற்கொண்டனர்.

அருட்சகோதரி அனோஜா அல்விரட், அருட்சகோதரி ஜென்சி அல்போன்ஸ், அருட்சகோதரி கரோலின் அருள்தாஸ், அருட்சகோதரி மனோ இராமர் ஆகியோரே தமது நித்திய அர்ப்பணத்தை மேற்கொண்டிருந்தனர். மன்னார் மறைமாவட்டம் சார்பாக இச்சகோதரிகளுக்கு வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா மகிழ்ச்சியடைகின்றது.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். - **மன்னா நிர்வாகம்.**

## மன்னார் மறைமாவட்டம் திருவழிபாட்டு நாட்காட்டி - 2015

### மார்கழி

03 - புனித சவேரியார் திருவிழா - கீளியன்குடியிருப்பு, புளியங்குளம்.
- மன்னார் புனித சவேரியார் ஆண்கள், பெண்கள் கல்லூரிகளின் விழா.
- யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விழா

06 - புனித நீக்கிலார் திருவிழா - பட்டித்தோட்டம்

08 - தூய கன்னிமரியாளின் அமல உற்பவம் - கடன் திருநாள்
- தூய வெற்றிநாயகி திருவிழா - பேசாலை
- அ.ம.தி. குருக்களின் திருவிழா
- அமலோற்பவ மாதா அருட்சகோதரிகளின் விழா

13 - புனித லூசியா திருவிழா - பள்ளிமுனை

25 - கிறிஸ்து பிறப்புப் பெருவிழா - கடன் திருநாள்

27 - திருக்குடும்பத் திருவிழா

## உண்மை உறைக்கும் கமிலஸ்

அருட்தந்தையே, இவருக்கு ஒரு நல்ல குளியல் கொடுங்கள்.
எங்களுடைய நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.



(நன்றி - தி மெசஞ்சர்)



கடந்த செப்ரம்பர் மாதம் 24ம் திகதி மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரியும் துறவறசபைக் குருக்கள், அருட்சகோதர்கள், அருட்சகோதரிகள் ஆகியோருக்கு மன்னார் டிலாசால் ஆங்கிலமொழிப் பாடசாலையில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை "தொடர் உருவாக்கம்" (Ongoing Formation) எனும் தலைப்பில் அருட்பணி. செல்வரட்ணம் (அ.ம.தி) அவர்களின் வழிநடத்தலில் கருத்தமர்வு நடைபெற்றது.

இதில் பங்குகொண்ட இருபால் துறவியரை மேலே உள்ள படத்தில் காணலாம். இந்நிகழ்வுபற்றிய விரிவான செய்தியை 5ஆம் பக்கத்தில் காணலாம்.

## ஐந்தாம் புலமை பரிசில் பரீட்சை

### மன் /புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி சாதனை மன்னார் மாவட்டத்தில் முதல் மூன்று இடங்கள்

அண்மையில் வெளியாகியிருந்த 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளில் மன்னார் மாவட்டத்தில் மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளது.

இதன்படி ஐ. எரிக் கிறேஸ்மன் 183 புள்ளிகளையும், அதேபோன்று ஜே. ரைற்றஸ் அனோன் 183 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தினையும், என். அபிசேக் 182 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் வெளியாகியிருக்கும் இந்த 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் இப்பாடசாலையில் 22 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருப்பதுடன் மாவட்ட மட்டத்தில் முதல் 10 மாணவர்களில் 7 மாணவர்கள் இப்பாடசாலையைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முதலாம் இடத்தைச் சேர்ந்த மாணவன் எரிக் றேஸ்மன் மன்னார் பனங்கட்டுக்கொட்டைச் சேர்ந்த திரு. திருமதி. ஜங்கரன் சந்திரவதனி தம்பதியரின் புதல்வராவார். இதேபோன்று முதலாம் இடத்தைப் பெற்ற ரைற்றிஸ் அனோன் மன்னார் எமில்நகரைச் சேர்ந்த திரு. திருமதி ஜீவராஜ் அனுரா கல்யாணி தம்பதியரின் புதல்வராவார். மூன்றாம் இடத்தைப் பெற்ற அபிசேக் மன்னார் சாவற்கட்டைச் சேர்ந்த திரு. திருமதி. விமலநேசன் அனுசா தம்பதியரின் புதல்வர் ஆவார்.

இவர்களுக்கு மன்னாவின் நல்வாழ்த்துக்கள்!

## கலையருவியின் புத்தாக்கப் போட்டி முடிவுகள்

அர்ப்பண வாழ்வு ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவி நடாத்திய புத்தாக்கப்போட்டிகளின் முடிவுகளை ஜனவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள். - இயக்குனர்.

## வைகறை நல்லாயன் இல்லம், கணேசபுரம் நேர்முகத்தேர்வு

வவுனியா மாவட்டத்தில் கணேசபுரம் என்ற இடத்தில் இயங்கும் வைகறை நிறுவனத்தின் சுயதொழில் பயிற்சிதொடர்பாக கடந்த ஒக்ரோபர் மன்னாவில் விரிவான விளம்பரம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த சுயதொழில் பயிற்சிக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 16.01.2016 அன்று காலை 10.30 மணிக்கு கணேசபுரத்தில் உள்ள வைக்றை நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. பயிற்சிபெற விரும்புவோர் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

- பொறுப்பாளர்


## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வத்திக்கான் தூய பேதுரு பேராலயத்தின் புனிதக்கதவைத் திறந்துவைத்து
# இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை திருத்தந்தை ஆரம்பித்து வைத்தார்!





அன்னை மரியாளின் அமல உற்பவ விழாவாகிய டிசம்பர் 8ஆம் அகில உலக கத்தோலிக்கத் திருஅவைக்கு மிக முக்கியமான நாள். அன்றைய தினம் வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தின் புனிதக்கதவின் முன்நின்று, "நீதியின் கதவுகள் திறக்கட்டும்" என்று சொல்லி, புனிதக் கதவைத் தனது இரு கரங்களாலும் தள்ளித் திறந்துவைத்து இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை திருத்தந்தை பிரான்சிஸ் ஆரம்பித்து வைத்தார். "கடவுளுடைய நன்மைத்தனம் மற்றும் அன்புக்கு அருகில் இரக்கத்தின் யூபிலி நம் எல்லோரையும் அழைத்துச் செல்வதாக" என்ற செய்தியையும் அன்றைய நாளில் திருத்தந்தை வெளியிட்டார்.

அன்றைய தினம் உரோம் நேரம் காலை 9.30 மணிக்கு வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டுத் திருப்பலியை திருத்தந்தை பிரான்சிஸ் தொடங்கினார்.

திருப்பலியில் இறுதி ஆசிருக்கு முன்னதாக புனிதக் கதவு திறக்கும் திருவழிபாடு தொடங்கியது. "சகோதரர், சகோதரிகளே, நம் மீட்பர் யேசுவில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தால் வழிநடத்தப்பட்டு, அமல அன்னை மரியின் பாதுகாவலில் இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை ஆரம்பிக்கின்றோம். நம் முன்னால் புனிதக் கதவு திறக்கிறது. இப்புனிதக்கதவு கிறிஸ்துவே. நம் இதயங்களைத் தூய ஆவியார் செயலுக்குத் திறந்து வைப்போம். கிறிஸ்துவின் பெயரில் அமைதியின் புனிதக் கதவை நெருங்கிச் செல்வோம்" என்று ஒரு தியாக்கோன் முதலில் வளாகத்தில் வாசித்தார்.

பின்னர் பீடப்பணியாளர் குழுவைத் தொடர்ந்து அருட்பணியாளர்கள், துறவிகள், பொதுநிலையினர், பிரதிநிதிகள் குழுக்களும், ஆயர்களும், கர்தினால்களும் பவனியாகத் தூய பேதுரு பசிலிக்காவின் புனிதக் கதவின்முன் சென்று நின்றனர். அதன் பின்னர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் சென்று புனிதக் கதவின்முன் நின்றார். அங்கு ஏற்கனவே நின்றுகொண்டிருந்த முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்கட் அவர்களை வாழ்த்திய பின்னர் திருத்தந்தை பிரான்சிஸ் செபம் சொன்னார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னார் குருமுதல்வர் சபாநாயகர் சந்திப்பு

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு விக்ரர் சோசை மற்றும் மன்னார் ஆயரின் செயலாளர் அருட்திரு. முரளிதரன் ஆகியோர் கடந்த நவம்பர் மாதம் 25ஆம் திகதி பாராளுமன்றச் சபாநாயகர் கௌரவ கரு ஜெயசூரியாவை பாராளுமன்றச் சதுக்கத்தில் சந்தித்து உரையாடினர். இது மரியாதையின் நிமித்தம் இடம்பெற்ற சந்திப்பாகும். இச்சந்திப்பின்போது சபாநாயகர் அவர்கள் மன்னார் ஆயரின் உடல்நிலை தொடர்பாகவும், மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாகவும் கேட்டறிந்துகொண்டார்.

இதேவேளை இச்சந்தர்ப்பத்தில் வீடமைப்பு அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாசா, கல்வி அமைச்சர் கௌரவ அகில காரியவசம், உள்ளூராட்சி பிரதியமைச்சர் கௌரவ லன்சா ஆகியோரையும் இவர்கள் சந்தித்து மறைமாவட்டத்தின் வளர்ச்சியோடு தொடர்புடைய பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

## திருச்சிலுவைக் கன்னியர்களின் மேனிலை முதல்வர் இலங்கை வருகை




திருச்சிலுவைக் கன்னியர் சபையின் மேனிலை முதல்வர் (Congregational Leader) அருட்சகோதரி ரெல்மா மணிக்கரம்பரம்பில் மற்றும் சபையின் ஆசிய ஆலோசகர் அருட்சகோதரி இம்மாக்குளேற் ஜோசவ் ஆகியோர் கடந்த நவம்பர் மாதம் 7ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்தனர். இவர்களுடைய வருகையின் நோக்கம் இலங்கையில் உள்ள திருச்சிலுவைக் கன்னியர்களின் 21 குழுமங்களையும், இலங்கை மாகாணத்திற்கு உட்பட்ட பாகிஸ்தானில் உள்ள ஒரு குழுமத்தையும் சந்திப்பதாகும்.

இவர்களுடைய வருகையானது இங்குள்ள அருட்சகோதரிகளுக்கு உற்சாகமூட்டுவதாகவும், வளமூட்டும் அனுபவமாகவும் இருந்தது எனத் திருச்சிலுவைக் கன்னியர்களின் இலங்கை மாகாண முதல்வர் அருட்சகோதரி கிளயா தெரிவித்தார். இவர்கள் மாகாணக் குழுவினரையும், உருவாக்குனர்களையும், ஒவ்வொரு குழுமத்திலும் உள்ள அருட்சகோதரிகளைக் குழுவாகவும் சந்தித்தனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# சிகிச்சையின் பின் மன்னார் ஆயர் நாடு திரும்பினார்
## உலங்கு வானூர்தி மூலம் மன்னாரை வந்தடைந்தார்




உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் கொழும்பு மற்றும் சிங்கப்பூரில் மேலதிக சிகிச்சை பெற்று வந்த மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை 7 மாதங்களின்பின் கடந்த டிசம்பர் மாதம் 9ஆம் திகதி மன்னாரை வந்தடைந்தார்.

உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காகக் கடந்த மார்ச் மாதம் சிங்கப்பூர் சென்ற மன்னார் ஆயர், சிகிச்சை முடிந்து டிசம்பர் 9ஆம் திகதி காலை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார். விமான நிலையத்தில் திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி மேதகு வன் ரொட் ஆண்டகை வரவேற்றார். அங்கிருந்து விசேட உலங்குவானூர்தி மூலம் ஏ-32 வீதியில் அமைந்துள்ள மன்னார் தள்ளாடி விமானத்தளத்தை வந்தடைந்தார். ஆயருடன் ஆயரின் செயலாளர் அருட்தந்தை ஏ. முரளிதரன் மற்றும் அருட்தந்தை எமில் எழில்ராஜ் ஆகியோரும் சிங்கப்பூரில் இருந்து வருகை தந்திருந்தனர்.

தள்ளாடி விமானத்தளத்துக்கு வந்த ஆயரை மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அன்ரனி விக்ரர் சோசை மற்றும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் ஆகியோர் வரவேற்றனர். இதனையடுத்து தள்ளாடி விமானத்தளத்தில் இருந்து அம்புலன்ஸ் மூலம் மன்னார் ஆயர் இல்லத்துக்குச் சென்றார்.

## மன்னார் குருமுதல்வர் மாகாண சுகாதார அமைச்சர் சந்திப்பு



வடமாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் அவர்கள் கடந்த நவம்பர் 22ஆம் திகதி மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அவர்களை மன்னார் ஆயர் இல்லத்தில் சந்தித்து மன்னார் மாவட்ட சுகாதார மற்றும் ஏனைய நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

## மன்னார் ஆயர் இல்லத்துக்கு வடமாகாண ஆளுநர் வருகை




மன்னாருக்கு வருகைதந்த வடமாகாண ஆளுனர் கௌரவ எச். எம். ஜி. எஸ். பளிகக்காரவிற்கும் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ஏ. விக்ரர் சோசை அடிகளாருக்கும் இடையில் கடந்த நவம்பர் மாதம் 23ஆம் திகதி மதியம் மன்னார் ஆயர் இல்லத்தில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக்கூட்டம் வடமாகாண ஆளுனர் தலைமையில் நவம்பர் 23ஆம் திகதி காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து வடமாகாண ஆளுநர் மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று குருமுதல்வர் மற்றும் ஆயரின் செயலாளர் அருட்தந்தை ஏ. முரளிதரன் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

இதன்போது சிங்கப்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மன்னார் ஆயரின் உடல்நலம் குறித்தும் அருட்தந்தையர்களிடம் அவர் விசாரித்தறிந்தார்.

## யாழ் மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக
# அருட்திரு. ஜெபரெட்னம் அடிகளார் நியமனம்



யாழ் மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக பத்திநாதன் ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் யாழ்ப்பாணத்தின் புதிய ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் குருமுதல்வராக பணியாற்றிய ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் மறைமாவட்டத்தின் ஆயராக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நியமனத்தை புதிய ஆயர் தனது முதலாவது உத்தியோகபூர்வ நியமனமாக அறிவித்திருக்கின்றார்.

நவம்பர் மாதம் 09ம் தேதி இறந்த ஆயர், குருக்கள், துறவியருக்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியின் இறுதியில் இந்நியமனத்தை ஆயர் அறிவித்தார். "அருட்பணியாளர் ப. ஜோ. ஜெபரட்ணம் அடிகளாரின் ஆற்றல்களும், ஆழமான அனுபவங்களும் அவரது புதிய பணிப்பொறுப்பினைச் சிறப்புள்ளதாக்கும்" என புதிய ஆயர் அங்கு தெரிவித்தார்.

புனித சவேரியார் குருமடத்தின் உப அதிபராக இதுவரை கடமையாற்றிய புதிய குருமுதல்வர் மேய்ப்புப்பணியிலும், திருவழிபாட்டிலும், இறையியலிலும், நிர்வாகத்துறையிலும் சிறந்த ஆளுமை கொண்டவர். சாந்தமான அதேவேளையில் கம்பீரமான அவரின் தோற்றம் அவரது சிந்தனைத் திறனின் வெளிப்பாடுகளாகும்.

2012ஆம் ஆண்டில் இறையியலில் கலாநிதிப்பட்டத்தை உரோமையில் பெற்றுக்கொண்ட இவர் ஓர் சிறந்த கல்விமானும், ஆசானமாவார். இவர் பதினைந்து வருடங்களுக்கு மேலாக புனித சவேரியார் குருத்துவக்கல்லூரியின் விரிவுரையாளராக, உருவாக்குனராக, உப அதிபராக, பொறுப்பாளராக கடமையாற்றி ஆழமான அனுபவங்களுடன் குருமுதல்வர் ஆகின்றார்.

இருபத்தெட்டு வருடங்களாக குருத்துவப்பணியை செவ்வனே ஆற்றிவரும் அடிகளார் இறைதியான வழிபாடுகளிலும், மறையுரைகளிலும், இறைவனின் கொடைகளை நிறைவாகப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராவும் இவர் கடமையாற்றியுள்ளார். புதிய குருமுதல்வரின் பணி சிறக்க மன்னா தனது வாழ்த்துக்களையும், செபங்களையும் மகிழ்வுடன் தெரிவித்து நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மறைமாவட்டத்தில் 47 ஆண்டுகளின் பின்னர் நடைபெற்ற ஆயரின் திருநிலைப்படுத்தல்

**அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை**

யாழ் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் திருநிலைப்படுத்தல் சடங்கு கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

நவம்பர் மாதம் 28ஆம் திகதி யாழ் மறை மாவட்டத்தின் பேராலயமான புனித மரியன்னை பேராலயம் விழாக்கோலம்பூண்டு ஒரு சரித்திர முக்கித்துவம் வாய்ந்த நிகழ்வைக் கோலகலமாக நிகழ்த்தி முடித்த மகிழ்ச்சியில் திளைத்து நிற்கிறது.

47 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்ற மேற்படி திருநிலைப்படுத்தற் சடங்கில் ஏறக்குறைய 5 ஆயிரம் மக்கள் திரண்டு நிற்க, 500 குருக்கள் புடைசூழ, பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி மேதகு வான் றொட் ஆண்டகை, இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் கருதினால் மேதகு மல்க்கம் றஞ்சித் ஆண்டகை ஆகியோருடன் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் 13 ஆயர்கள் கூடிநிற்க, இழைப்பாறும் யாழ் மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திருநிலைப்படுத்தும் தலைமை ஆயராகவும், இளைப்பாறிய திருகோணமலை ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையும், கண்டி மறைமாவட்ட ஆயர் வியன்னி பெர்ணாண்டோ ஆண்டகையும் திருநிலைப்படுத்தும் துணை ஆயர்களாகவும் இணைந்து நின்று மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை ஆயராகத் திருநிலைப்படுத்தினர்.

இதமான மெல்லிய மழைத் தூறலின் மத்தியில் காலை 8.30 மணியளவில் யாழ். மறை மாவட்டப் பங்குகளின் பிர்திநிதிகள் தமது பங்குக்கொடிகளுடன் பேராலயம் நோக்கிய தம் பவனியை ஆரம்பித்தினர். குருக்கள் திருவுடை தரித்துப் பக்தியாக பேராலயம் நோக்கி நகர்ந்தனர். இறுதியாக ஆயர்கள், பாப்பரசரின் பிரதிநிதி, கருதினால் ஆகியோர் இணைந்து மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை பேராலயம் நோக்கி பவனியாக அழைத்து வந்தனர்.

திருப்பலிப் பீடத்தின் படிகளில் சிறுமியர் நடனமாடி தமிழ் மணம் கலந்த வரவேற்பளித்தனர். அனைவரும் ஆலயத்தை அடைந்ததும் தலைமை திருநிலைப்படுத்தும் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருப்பலி ஆரம்பமாகி மறையுரைவரை சென்றது. தமிழ் மறையுரையை நீ. மரிய சேவியர் அடிகளாரும் ஆங்கில மறையுரைய கண்டி ஆயரும் ஆற்றிய பின்னர் புதிய ஆயரைத் திருப்பொழிவு செய்யும் நிகழ்வு ஆரம்பமானது.

## தெரிந்துகொள்ளப்பட்ட ஆயரை அறிமுகம் செய்தல் சடங்கு

யாழ் மறை மாவட்டத்தின் மூத்த குருவான நீ. மரிய சேவியர் அடிகளார் புதிய ஆயரைத் திருநிலைப்படுத்துமாறு திருநிலைப்படுத்தும் தலைமை ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்குப் பரிந்துரைத்தார். அதற்கு மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இதற்கான அப்போஸ்தலிக்க ஆணை வத்திக்கானில் உள்ள திருத்தந்தையிடம் இருந்து கிடைத்துள்ளதா? அதனைப் பகிரங்கமாகப் படியுங்கள் என வேண்டினார்.

## பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஆணை வாசிப்பு:

பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி, திருத்தந்தை பிரான்சிஸ் பாப்பரசரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற அப்போஸ்தலிக்க ஆணையை வாசித்தார். "உலகளாவிய தந்தையாகிய நாம் தேவையான தகுதியும் உள்ளூர் திருஅவை அலுவல்களில் அனுபவமும் கொண்ட அன்பு மகனாகிய மேதகு ஜஸ்ரின் பேணாட் ஆண்டகை யாழ் மறைமாவட்டத்தை ஆளுவதற்குத் தகுதியானவர் என எண்ணுகிறோம். எனவே எமது அதி உயர் அப்போஸ்தலிக்க அதிகாரத்தின் நிமித்தம் நாம் உம்மை ய்ாழ்ப்பாண மறை மாவட்டத்தின் ஆயராக எல்லா உரிமைகளோடும், கடமைகளோடும் நியமிக்கின்றோம்" என்பதே அந்த ஆணையின் முக்கிய பகுதியாக இருந்தது. பின்னர் அப்போஸ்தலிக்க ஆணை மடலை இறை மக்களுக்கு உயர்த்திக் காட்டியபோது முதல் தடைவையாக வானதிரக் கரகோசித்து இறைமக்கள் எல்லோரும் "இறைவா உமக்கு நன்றி" என ஆர்ப்பரித்தனர்.



## புதிய ஆயரின் உரிமை மற்றும் கடமை பற்றிய மறையுரை:

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தம் மறையுரையில், ஆயர்நிலை என்பது மகிமையன்று. அது பணியைக் குறிக்கின்றது. ஆள்வதைவிடப் பணிபுரிவதே ஆயரின் மேலான கடமையாகும். வாய்ப்பிருந்தாலும் இல்லாவிட்டாலும் தேவவார்த்தையை அறிவியும். குற்றம் கடிந்து மிகுந்த பொறுமையோடு போதித்துக்கொண்டிரும் எனத் தெரிவித்தார்.

## பதிய ஆயரிடம் ஆய்வு:

பின்னர் புதிய ஆயரிடம் ஆயருக்குரிய மேய்புப்பணி குறித்தும், நற்செய்திமீதான ஆர்வம் குறித்தும், திருச்சபையின் மரபைப் பாதுகாப்பது குறித்தும், திருத்தந்தைக்குக் கீழ்ப்படிவது குறித்தும், எல்லாவற்றிற்கும் மேலாக ஏழைகள்மீதான ஆயனுக்குரிய அன்பு குறித்தும் மனவுறுதியை சோதித்து ஆய்வு நடத்தினார். அதற்குப் புதிய ஆயர், "விரும்புகிறேன், இறைவன் துணையை நம்பி விரும்புகிறேன்" எனத் தெரிவித்து தரையில் முகம் குப்பற வீழ்ந்து இறைவனிடம் சரணடைய, இறைமக்கள் எல்லோரும் ஒரே குரலாய் சகல புனிதர்களின் மன்றாட்டு மாலையைப் பாடினர். பின்னர் புதிய ஆயரின் தலைமீது திருநிலைப்படுத்தும் தலைமை ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கை வைத்துச் செபிக்கத் தொடர்ந்து ஏனைய ஆயர்களும் புதிய ஆயரின் தலைமீது கைவைத்துச் செபித்தனர். இது அருட்பொழிவின் அடையாளமாகும். இதன் பின்னர் புதிய ஆயரின் தலைமீது நற்செய்தி நூலை வைத்து அர்ச்சிப்புச் செபத்தைத் திருநிலைப்படுத்தும் தலைமை ஆயர் செபிக்க, மற்றய ஆயர்களும் இணைந்து செபித்தனர். பின்னர் புதிய ஆயரின் தலைமீது திருநிலைப்படுத்தும் தலைமை ஆயர் கிறிஸ்மா தைலத்தைப் பூசினார். இதனால் தீமைகளுக்கும் பொய்மைக்கும் எதிரான போரில் வெற்றிபெறுவதற்கான உடல் வலிமையையும், ஆவியானவரின் வரங்களையும் புதிய ஆயர் பெற்றார். பின்னர் நற்செய்தி நூல் புதிய ஆயருக்கு வழங்கப்பட்டது.

## ஆயர் பணிக்கான சின்னங்கள் வழங்கல்கள் :

ஆயர் பணிக்கான சின்னங்களான மோதிரம் நம்பிக்கையின் முத்திரையாகவும், தலைச்சீரா புனிதத்தின் பேரொளியின் அடையாளமாகவும், மேய்ப்புப்பணிக் கோல் திருச்சபையை ஆண்டு வழிநடத்தும் ஆயர் பணியின் அடையாளமாகவும் வழங்கப்பட்டது. பின்னர் திருநிலைப்படுத்தும் தலைமை ஆயர் புதிய ஆயரை சம்பிரதாயபூர்வமாக அழைத்துச் சென்று பேரா்லய ஆசனத்தில் அமர்த்தி சமாதான முத்தம் வழங்கினார். இப்போது இரண்டாவது தடவையாக வானதிரக் கரகோசித்து இறைமக்கள் மகிழ்ந்தனர். மற்றைய ஆயர்களும் புதிய ஆயரின் உறவினர்களும் ஆயரின் சிம்மாசனம் அருகே வந்து, சமாதா்னம் முத்தம் வழங்கினர்.

திருப்பலி முடிவில் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் கருதினால் மேதகு மல்கம் றஞ்சித் ஆண்டகை புதிய ஆயரை வரவேற்று உரையாற்றினார்.

தொடர்ந்து புதிய ஆயர் தமது நன்றியுரையில் யாழ் மறைமாவட்டத்தில் இருந்தும் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வந்து வாழ்த்துச் சொன்ன அனைவருக்கும் நன்றி செலுத்தினார். திருப்பலி முடிவில் புதிய ஆயர் பீடத்தைவிட்டு இறங்கி இறைமக்களிடையே பவனிவந்து தமது முதல் ஆசீரை வழங்கினார். தொடர்ந்து புதிய ஆயரின் திருப்பொழிவு நிகழ்விற்கு வருகைதந்த பிரமுகர்கள், துறவிகள், இறைமக்கள் ஆகியோர் புதிய ஆயரை வாழ்த்தி அவரின் மோதிரத்தை முத்தமிட்டு ஆசீர் பெற்றனர். இவரின் ஆயர்த்திருப்பொழிவு நிகழ்விற்கென பிரத்தியேகமாக வெளிநாடுகளில் இருந்து வருகைதந்த ஆயரின் குடும்ப அங்கத்தவர்களும் நண்பர்களும் மறுதினமே திரும்ப இருந்தமையால் ஆயர் திருப்பொழிவு நிகழ்ந்த அன்றைய தினமே இராப்போசன விருந்தொன்றை வழங்கி மகிழ்ந்து தமது அன்பையும் நன்றியையும் தெரிவித்தனர்.

## புதிய ஆயர் மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் முதற் திருப்பலி:

தமது தற்போதைய பங்கான யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயப் பங்கில் புதிய ஆயர் முதற் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். "மரியன்னை வழி இயேசுவிடம்" என்ற விருதுவாக்கை எடுத்துள்ள இவர், தம் முதற் திருப்பலியை இங்கு நிறைவேற்றியதும் பொருத்தமானதே.

தமது பணி விளக்கச் சின்னத்தில் அன்னையைப் பொறித்திருப்பதையும் மாதம்தோறும் மடுப்பதி செல்லும் அன்னையின் பக்தர் இவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தமது கழுத்தில் தாம் அணிந்திருக்கும் திருச்சிலுவையில் ஆண்டவர் மட்டும் சிலுவையில் அறையப்படவில்லை. அன்னை மரியாளும் அருகிருக்குமாறு அச்சிலுவை அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த ஆயர், அன்னை மரியாளே மனுக்குல மீட்பின் இணை இரட்சகியாக இருக்கின்றாள் எனத் தெரிவித்து, அந்த மரியன்னை வழியே தாம் யாழ் மறை மாவட்டத்தை வழிநடத்தப் போவதைக் கோடிட்டுக் காட்டினார். இன்னுமொரு முக்கிய விடயத்தை அங்கு இறைமக்கள் மத்தியில் தெரிவித்து தமது குருக்கள்மீது தாம் கொண்டுள்ள நம்பிக்கையை வெளியிட்டார். இலங்கையிலுள்ள 12 மறைமாவட்டங்களில் யாழ் மறை மாவட்டமே அதிக ஆளுமை, ஆற்றல் உள்ள குருக்களைக் கொண்டுள்ளது எனத் தெரிவித்து, யாழ் மறை மாவட்டம் புதுப் பொலிவு பெறப்போகிறது எனச் சொல்லாமற் சொன்னார்.

## கென்றியரசர்,பத்திரியார் கல்லூரியில் வரவேற்பு

பதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தமது குருத்துவப்பணியில் கல்விப்பணியாற்றிய கென்றியரசர் கல்லூரியும் பத்திரியார் கல்லூரியும் அவர் திருப்பொழிவு பெற்ற மறுதினமே அழைத்து வாழ்த்துத் தெரிவித்து மகிழ்ந்தன. தூர நோக்கும், துணிந்த முடிவும், நிறைந்த ஆற்றலும், அபார நிர்வாகத் திறனும், கல்விப்பணியில் முழு அனுபவமும் கொண்ட புதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மறைமாவட்டத்தின் கல்விப்பணிக்குத் தாம்
நிகழ்த்தவிருக்கும் கல்வித்திட்டத்தை முன்வைத்தார். மூன்று தசாப்த போரினால் துவண்டு போயிருக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களுக்குத் துணைபுரியும்விதமாக புனித பத்திரிசியார் கல்லூரியின் கிளைக் கல்லூரியை கிளிநொச்சியில் ஆறாம் வகுப்பில் இருந்து உடன் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு கல்லூரி அதிபர் ஜெறோ செல்வநாயகம் அடிகளாருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

## புதிய ஆயரின் பணி ஏற்பு

கார்த்திகை மாதம் 30ஆம் திகதி யாழ் மறை மாவட்டத்தின் புதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை சம்பிரதாயபூர்வமாக யாழ் மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்கும் நிகழ்வு 160 குருக்கள் புடைசூழ குருமுதல்வர் அருட்திரு கலாநிதி பி. ஜே. ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.

ஆயர் தமது சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க, குருக்கள் அனைவரும் தனித்தனியாகச் சென்று முழந்தாட்படியிட்டு திருக்கர மோதிரத்தை முத்தமிட்டுத் தமது பணியையும் ஒத்துழைப்பையும் முழுமையாக வழங்குவதாக உறுதிவழங்கினர். ஆயர் இல்லத்தில் இராப்போசன விருந்தை வழங்கி மகிழ்ந்த யாழ் ஆயர், மறைமாவட்ட நிதியாளராக எஸ். நேசநாயகம் அடிகளாரை நியமித்து மற்றைய மாற்றங்களும் மறைமாவட்டத்தில் தொடரப்போவதை வெளிச்சம்போட்டுக் காட்டினார்.

## ஒரு புதிய பாதையில் யாழ் மறை மாவட்டம்

யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை புதிய குருமுதல்வராக நியமித்துள்ள அருட்திரு கலாநிதி பி. ஜே. ஜெபரட்ணம் அடிகளாரின் இனிமையான பேச்சும், இதமான அணுகுமுறையும், பண்பான செயற்பாடும், அனைவரையும் கவரும் பன்முக ஆளுமையும் துணைகொடுக்க ஒரு புதிய பாதையில் யாழ் மறைமாவட்டத்தை அழைத்துச் செல்ல இறைவன் துணை புரிவாராக.









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரியும் துறவிகளுக்கான ஒருநாள் கருத்தமர்வு



2015ம் ஆண்டு அர்பண வாழ்வு ஆண்டாக பரிசுத்த பாப்பரசர் பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து, மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரியும் துறவறசபைக் குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் கடந்தவருட இறுதியில் ஒன்றிணைந்து, 2015ம் ஆண்டைச் சிறப்பானமுறையில் தமது அர்ப்பண ஆண்டாக நினைவுகூரவும், தம்மைப் புதுப்பித்துக்கொள்ளும் வகையிலும், 'மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க துறவற சங்கம்' எனும் அமைப்பை ஏற்படுத்தினர். மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையின் அனுமதியுடன் ஒரு வருடத்திற்கான நிகழ்வுகளைத் தயாரித்து, இவ்வருடம் தை மாதம் தொடக்கம் பல புதுப்பித்தல் நிகழ்வுகளை துறவறத்தாருக்கும், பொதுநிலையினருக்கும் வழங்கிவருகின்றனர்.

அந்தவகையில் கடந்த செப்ரம்பர் மாதம் 24ம் திகதி மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரியும் துறவறசபைக் குருக்கள், அருட்சகோதர்கள், அருட்சகோதரிகள் ஆகியோருக்கு மன்னார் டிலாசால் ஆங்கிலமொழிப் பாடசாலையில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை "தொடர் உருவாக்கம்" (Ongoing Formation) எனும் தலைப்பில் அருட்பணி. செல்வரட்ணம் (அ.ம.தி) அவர்களின் வழிநடத்தலில் கருத்தமர்வு நடைபெற்றது. பல துறவற சபைகளைச் சேர்ந்த குருக்களும், அருட்சகோதர்களும், அருட்சகோதரிகளும் இக்கருத்தமர்வில் பங்குபற்றினார்கள். இதில் துறவறத்தாரின் வாழ்வு, பணி, அவர்கள் எவ்வாறு கிறிஸ்துவின் பணியைத் தமது துறவற வாழ்வினூடாக மக்களுக்குப் புரிவது, தாம் வாழ்கின்ற மறைமாவட்டத்தில் ஆயரோடும், குருக்களோடும் எவ்வாறு இணைந்து பணியாற்றுவது, தற்காலத்தின் இறைவாக்கினர்களாக நீதிக்கும், உண்மைக்கும் எவ்வாறு சான்றாக வாழ்வது போன்ற என்ற சிந்தனைககள் முன்வைக்கப்பட்டன.

இக்கருத்தமர்வில் வளவாளராகக் கலந்துகொண்ட அருட்பணி. செல்வரட்ணம் (அ.ம.தி) அவர்களுக்கும், இந்நிகழ்வை ஒழுங்குபடுத்திய மறைமாவட்ட கத்தோலிக்க துறவற சங்க நிர்வாக உறுப்பினர்களுக்கும், குறிப்பாக தலைவர் அருட்பணி. போல் (சலேசியன் சபை) அவர்களுக்கும், அருட்சகோதரி சாந்தி (திருக்குடும்பக் கன்னியர் சபை) அவர்களுக்கும் இக்கருத்தரங்கை நடாத்த உதவிய அருட்சகோதரர் யோகன் (டிலாசால் சபை) அவர்களுக்கும், பங்குபற்றிய அனைத்து துறவறகுருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*தகவல் : அருட்சகோதரர் ச. இ. றெஜினோல்ட் (FSC), செயளாளர், மன்னார் மறைமாவட்ட துறவற சங்கம்.*

## மன்னார் சிறிய குருமடத்தின் வருடாந்தத் திருவிழா

மன்னார் மடு அன்னையின் பெயரைத் தன்னகத்தே தாங்கிய மடுமாதா சிறிய குருமடமானது தன்னுடைய 26வது வருடாந்த விழாவை கடந்த ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடி மகிழ்ந்தது.

திருவிழாத் திருப்பலியை காலை 11.00 மணியளவில் திருகோணமலை மறைமாவட்டத்தின் ஓய்வுபெற்ற ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களுடன், மன்னார் மறைமாவட்டக் குருமுல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளாரும், இன்னும் பல குருக்களும் இணைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

அழைப்பு என்பது இறைவனிடமிருந்து வரும் ஒரு உன்னத கொடை. அழைக்கப்பட்ட நாம் அனைவரும் இறைவனுடைய அழைப்பிற்குப் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்றும், கலப்பையில் கைவைத்தபின் திரும்பிப்பார்ப்பவன் எவனும் இறை ஆட்சிக்குத் தகுதியற்றவன் என்றும் அன்றைய மறையுரையின் சாராம்சமாக வழங்கப்பட்டது.

திருப்பலியைத் தொடர்ந்து குருமடத்தின் கடந்த ஒரு வருட கால ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து மதியபோசனம் வழங்கப்பட்டது. விருந்தினர்களும் பெற்றோர்களும் மனம்நிறைந்த நல்வாழ்த்துக்களோடுகூடிய ஆசீர்களையும் கூறிச்சென்றனர்.

*தகவல் : குருமட மாணவர்கள்*

## ஓமந்தையில் மாணவன் கௌரவிப்பு



ஓமந்தை பங்கின் மாணவன் செல்வன் மேரி பஸ்ரியன் கிறிஸ்தவமத அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட விவிலியப் பேச்சுப்போட்டியில் மன்னார் மறைமாவட்ட ரீதியில் முதலிடம் பெற்று, அகில இலங்கை தேசிய ரீதியிலான போட்டியில் கலந்துகொண்டு இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இதனை முன்னிட்டு கடந்த நவம்பர் 01ஆம் திகதி அன்று மாலை அவருக்கு சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டு, திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின்னர் குறிப்பிட்ட மாணவர்களையும் பங்குத்தந்தையையும் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வுகளுக்கு மன்னார் மறைமாவட்ட விவிலிய ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. நெவின்ஸ் யோகராஜ் அடிகளாரும், அருட்பணி. ஞானராஜ் குரூஸ் அடிகளாரும், விமலநாதன் அ.ம.தி. அடிகளாரும் பிரசன்னமாகியிருந்தனர். மாணவன் பஸ்ரியனை பலரும் வாழ்த்தி உரையாற்றியதுடன், ஏனைய மாணவர்களும் இவரைப்போல முயற்சிகள் எடுத்து முன்னேற வேண்டுமென்றும் வாழ்த்தினர்.

வெற்றியீட்டியதன் மூலம் பங்குக்கும், மறைமாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த மாணவனுக்கும் பங்குத்தந்தைக்கும் பங்கு மக்களால் ஞாபகச் சின்னமும் மாணவனுக்கு பரிசில்கள் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

*தகவல் : செல்வன் ஜெயநேசன், ஓமந்தைப்பங்கு*

## ஜோசப்வாஸ் நகரில் சிறுவர் முதியோர் தினங்கள்

தோட்டவெளிப் பங்கில் உள்ள யோசப்வாஸ் நகரில் கடந்த ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது. இத்தினத்தையொட்டி பங்குத்தந்தை அருட்பணி. றொக்சன் குரூஸ் அடிகளாரினால் காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி முடிவில் குழந்தைகள் ஆசீர்வதிக்கப்பட்டனர். காலை 9.30 மணிக்கு முன்பள்ளி சிறார்களுக்கு விளையாட்டுக்கள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

கடந்த ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி அன்று ஜோசவ்வாஸ் நகரில் மாலை 6.00 மணிக்கு முதியோர் தினம் கொண்டாடப்பட்டது. பிள்ளைகள் பேரப்பிள்ளைகளால் முதியவர்களுக்கு மாலை அணிவித்தும், பூச்சொண்டு கொடுத்தும் ஆலயத்திற்குள் பவனியாக அழைத்துவரப்பட்டனர்.

திருப்பலியை அருட்பணி. கரன்ஸ் (அ.ம.தி) அடிகளாரும் பங்குத்தந்தையும் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். மறையுரையின்பின் முதியவர்களிடம் எல்லோரும் சென்று முழந்தாளிலிருந்து ஆசீர்வாதம்பெறும் நிகழ்வு உள்ளங்களை மகிழவைத்தது. தொடர்ந்து முதியவர்களுக்கான சிறப்புத் திருப்பலியும் ஆசீரும் வழங்கப்பட்டு திருப்பலி நிறைவெய்தியது.

*தகவல்: எ.அற்புதராணி, யோசவ்வாஸ்நகர், தோட்டவெளி.*

## பேசாலையில் திருக்குடும்ப ஸ்தாபகரின் பிறந்தநாள் விழா

திருக்குடும்ப சபை ஸ்தாபகர் பியன்வெனு அடிகளாரின் பிறந்தநாளையொட்டி கடந்த ஒக்ரோபர் மாதம் 27ம் திகதி மாலை 5.00 மணியளவில் பேசாலை வெற்றிநாயகி ஆலயத்தின் உதவிப் பங்குத்தந்தை பெயிலன் குரூஸ் அவர்களால் சிறப்பான திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

அதன்பின்பு கூட்டம் ஆரம்பமானது. இதில் தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலய பங்கைச் சேர்ந்த திருக்குடும்ப பொதுநிலையினரும், பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தைச் சேர்ந்த திருக்குடும்ப பொதுநிலையினரும், மன்னார் பேராலயப் பங்கைச் சேர்ந்த பொதுநிலையினரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்போது அருட்சகோதரிகளான அமலி அவர்களும், கொஸ்கா அவர்களும் சிறப்புரை ஆற்றினர். கூட்டத்தின் வளர்ச்சி பற்றியும், பணியாளர்களின் சேவை பற்றியும், சேவை எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும் இவ்வுரைகளின்போது கூறப்பட்டது. பின்பு சிறிய விருந்துபசாரத்துடன் விழா இனிதே முடிவுற்றது.

*தகவல்: திருமதி. அம்புறோஸ் மலர் பீரீஸ், பேசாலை.*


## நானாட்டானில் முதியோர் தின விழா


கடந்த ஒக்ரோபர் மாதம் 03ஆம் திகதி அன்று முதியோர் தின விழா நானாட்டான் பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலையில் திருப்பலியினைத் தொடர்ந்து முதியோருக்கான சிறப்பு நிகழ்வுகள் பாடசாலையில் இடம்பெற்றன.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்க இயக்குனர் அருட்பணி. அல்பன் இராஜசிங்கம் (அமதி) அடிகளார் கலந்து சிறப்பித்தார். நானாட்டான் பங்குத்தந்தை அருட்பணி. அருள்ராஜ் குரூஸ் அவர்களும், கல்லூரி அதிபர் அருட்சகோதரர் S.E றெஜினோல்ட் அவர்களும் இணைந்து இந்நிகழ்வினைச் சிறப்புற ஒழுங்கமைத்திருந்தனர்.

*தகவல் : திரு. சூசைநாயகம், செயலாளர், பங்கு அருட்பணிப்பேரவை.*

# கறிற்ராஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் மாபெரும் இரத்ததான நிகழ்வு





மன்னார் கறிற்ராஸ் வாழ்வுதயத்தின் 'உதவிக்கரம்' பிரிவினால் (Centre For Disabled) நடைபெற்ற இரத்ததான நிகழ்வு கடந்த ஒக்ரோபர் 23ஆம் திகதி வெற்றிகரமாக நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு கறிற்ராஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. ம. ஜெயபாலன் அடிகளாரினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்நிகழ்வில் மன்னாரில் இயங்கிவரும் பின்வரும் அமைப்புக்கள் மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்து மொத்தமாக 52 நன்கொடையாளர்கள் இரத்ததானம் செய்யத் தங்களை அர்ப்பணித்திருந்தனர்:

1. கறிற்ராஸ் வாழ்வுதயம், 2. Motivation Sri Lanka, 3. Cooperatve Insurance, 4. LC - Mannar, 5. சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி , 6. கிறின் பீல்ட் விளையாட்டுக் கழகம் , 7. Good Friend Making, 8. Ceylinco Insurance General, 9. ஏனைய பொது நலன் விரும்பிகள்.

இந்த இரத்ததான நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் கறிற்ராஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி ம. ஜெயபாலன் அடிகளார் தமது மனமார்ந்த நன்றிகளை 'மன்னா' பத்திரிகையூடாகத் தெரிவிக்கின்றார். இத்தொண்டு நிறுவனம் மனித நேயப்பணி மட்டுமல்ல உயிர் காக்கும் உன்னதமான சேவையிலும் முன்னின்று உழைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

*தகவல் : திரு. A. M. அல்மேடா, நிர்வாக அலுவலர், கறிற்ராஸ் வாழ்வுதயம், மன்னார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்மஸ் சிறப்புக் கட்டுரைகள்



## மறு மனுவுருவாகிட அழைப்பு!

ஜெராட் டீ ரொசய்ரோ அ.ம.தி



இன்றைய சூழமைவில், இயல்பு வாழ்வு நோக்கிய நம் பயணத்தில் நசரேத்தூர் இயேசுவின் பிறப்பு நிகழ்வை நினைவுகூர்கின்றோம். கிறிஸ்தவ விசுவாசிகள் எங்கள் வாழ்வில் இயேசுவின் பிறப்பு மிகவும் அடிப்படையான நிகழ்வாகும். கிறிஸ்தவ விசுவாச வாழ்வுக்கு அது அகர நிகழ்வாகும்.

கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒளியில் இன்றைய சூழமைவில் இயேசுவின் பிறப்பு நிகழ்வை எப்படி நோக்குவது? நசரேத்தூர் இயேசு பிறந்த சூழல் நமக்குத் தரும் செய்தி என்ன? இவ்வினாக்களுக்கு விடையாக வளர்கிறது இக்கட்டுரை.

### குடிசையில் மனுவுரு

இயேசுவின் பிறப்பு ஓர் எளிமையான சூழலில் நிகழ்ந்தது. அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத, கதவு யன்னல் இல்லாத குடிசையில், பாதுகாப்பற்ற கொட்டிலில் நிகழ்ந்தது. அன்றைய அரசியல் ஆதிக்க அச்சுறுத்தலில் இடப்பெயர்வும், பாதுகாப்பின்மையும் கொண்ட சூழலில் நிகழ்ந்தது. பிறந்த குழந்தை பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டிய இடறல் நிறைந்த சூழல் அது. மனுவுருவானவருக்கு ஏற்பட்ட அவ்வனுபவம் இன்னும் மானிடம் பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டும் என்பதை உணர்த்திநிற்கின்றது.

பாதுகாப்பின்மையில் நாம் காணும் மனுவுருவானவர் தாய் மரியாள், நேர்மையாளர் சூசை போன்ற மானிடரின் பராமரிப்பைப்பெற்று வளரும் பாங்கு, நம் சூழமைவில் மானிடம் காப்பது நம் அறக்கடன் என்பதை உணர்த்துகின்றது. நம் இறை நம்பிக்கையில் நாம் விசுவசிக்கும் கடவுளின் பிரசன்னத்தை, இருப்பை இடர்பாடுகள், பாதுகாப்பின்மை, அச்சுறுத்தல் என்பன மத்தியில் கைவிடப்பட்ட 'குழந்தை' உருவில் காண அழைக்கப்படுகின்றோம். மனுவுருவான இயேசுவின் பிறப்பு 'கடவுளை' நம் குடிசைகளில் கொட்டில்களில் தவழும் 'குழந்தை' உருவில் கண்டு விசுவாசிக்க, எதிர்நோக்குடன் ஐயப்பாடின்றி 'மானிடம்' பேண, வளர்க்க நம்மைத் தூண்டுகின்றது.

### குடிகொண்ட 'மனுவுரு'

பாதுகாப்பற்ற கொட்டிலில் பாதுகாக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட இயேசு நம் மக்களிடையே குடிகொண்டார் (யோவா 8:14). தம் மக்கள் ஆயனில்லா ஆடுகள்போல் அலைக்கழிக்கப்படுவதைக் கண்டார் (மத். 9:35...) அச்சமும் அங்கலாய்ப்பும் கொண்டவர்களாய், எதிர்காலத் தெளிவு அற்றவர்களாய், புலம்பி அழுவோராய், ஏளனம் செய்யப்பட்டவராய், அடக்கி ஒடுக்கப்பட்டவராய், புறம்தள்ளப்பட்டோராய், வாழ்வுக்காய் ஏங்கி நிற்போரைக் கண்டார் (லூக். 6:20.... மத். 5:3 – 10). மக்களின் இந்த நிலை இறைவனின் விருப்பு அல்ல எனத் திடமாக நம்பினார் இயேசு. இறைவன் நாடும், விரும்பும் மானிட வாழ்வு நிறைவானது, மாண்புமிக்கது. சுதந்திரமும், சுயநிர்ணயமும் கொண்டது. நிகழ்கால உறுதிப்பாடும், ஏற்றுக்கொள்ளுதலும் உடையது. எதிர்கால நம்பிக்கை ஊட்டுவது. இறைவன் நாடும் மானிட வாழ்வின் தன்மையை ஆழ உணர்ந்த இயேசு வாழ்வைத் தரவந்தேன், அதை நிறைவாகவே தரவந்தேன் (யோவா 10:10) என ஐயம் திரிபற அறிக்கையிட்டார். தம் சூழலில் மானிடம் பேணி வளர்க்கப்பட தம்மையே அர்ப்பணித்தார் (யோவா 10:17-18). இயேசுவின் 'குடிகொண்ட' பிரசன்னமும், மானிடம் பேணும் பணியும், வாழ்வும் "மானிட ஈடேற்புக் கடமையில் தவறுபவர்கள் தம் மீட்பின் பாதையிலிருந்தும் தவறுகிறார்கள்" என்பதையே உணர்த்துகின்றது.

இன்று கருவில் கலையும் மனிதம், கல்விக்கூடத்தில் கதறும் மனிதம், கைக்கெட்டாத வளங்களுடன் கண்ணீர்வடிக்கும் மனிதம், கடல்கடந்தும் கரைகாணாத மனிதம், கடவுள் பெயரைச் சொல்லியே ஏமாற்றப்படும் மனிதம், கல்லறைகளிலும் நிம்மதியில்லாத மனிதம் இப்பட்டியல் நீண்டது. இது 'மனிதம்' பாதுகாக்கப்பட வேண்டியது, சமுதாயம் புதுப்பிக்கப்பட வேண்டியது என்பதையே உணர்த்துகிறது. இந்த அறக்கடனை நிறைவேற்ற இயேசுவின் பிறப்புச் சூழலும், அவரது குடிகொண்ட மனுவுருவும், சரியானது எது எனத் தீர்மானிக்க உங்களால் ஏன் முடியவில்லை (லூக். 12:57) என்ற வினாவை எழுப்புகின்றது. இயேசுவின் மனுவுருவான நிகழ்வில் நம்பிக்கை கொண்டவர் இங்கு பதில் காண்பது அவரது விசுவாசக் கடப்பாடாகும்.

### மறு மனுவுருவாகிட அழைப்பு

இன்றைய சூழமைவில் இயேசுவின் பிறப்பு நிகழ்வில் நம்பிக்கை வளர்க்கும் நாம் மறுமனுவுருவாகிட வேண்டும். இயேசுவை இரவில் சந்தித்த நிக்கதேமுவிடம் மீண்டும் பிறக்க வேண்டும் என்ற செய்தியை இயேசு அளித்தார் (யோ. 3:1). இந்த அழைப்பு இயேசுவின் மனுவுருவில் பங்குகொள்ள வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

இயேசுவின் மனுவுரு பராமரிப்பும், பரிவும் கொண்ட இறைவனை, பாதுகாப்பின்மையில் கைவிடப்பட்ட பலம்மிக்க இராணுவத்தினர் மத்தியில் காணப்படும் குழந்தை உருவில் இறைவனை வெளிப்படுத்துகிறது. அவ்விறைவனின் ஆட்சிக்குள் வர வல்லமையால் ஆட்கொள்ளப்படுவதே மறு மனுவுருவாதலாகும், மீண்டும் பிறத்தலாகும். புனித பவுல், "கடவுளின் ஆவியால் வழிநடத்தப்படுபவர்களே கடவுளின் பிள்ளைகள்" (உரோ 8:14) என்பார். மறுமனுவுவாதல் இயேசுவின், கடவுளின் ஆவியில் பிறத்தலாகும். அதன் விளைவாக ஒருவர் உள்ளக புத்தியுடன் வாழ்வார். கடவுளுக்கு ஏற்புடையதை நாடுவார். இறையரசு விழுமியங்களை வாழ்வாக்குவார், இதனால் மனித நேயம், மனித மாண்பு பேணப்படும். அது மறுவுருவான நிகழ்வின், மனுவுருவானவர் குடிகொண்ட நிகழ்வின் நோக்கமாகும்.

இசேுவின் மனுவுரு கிறிஸ்தவ விசுவாசியை மீண்டும் பிறக்கத் தூண்டுகிறது. அதாவது இயேசுவின் கடவுளின் உருவை நமக்குள் கருக்கொள்ளவும், குடிகொள்ளவும் செய்வதாகும். வீடு திரும்பிய மகனை அரவணைத்து, பாதணி அணிவித்து, மோதிரம் அணிவித்து, ஆடை போர்த்தி, விருந்தளித்து அவனுக்கு வாழ்வளிப்பவர் இயேசுவின் கடவுள் (லூக்கா15:11). தொலைந்த மானிடத்தை மீட்பது அப்படித்தான் என்கிறார். அரவணைப்பு, பாதுகாப்பு, அடையாளப்படுத்தல், சமத்துவ சுயநிலையை உறவுக்கு வழிசெய்தல் அம்மீட்கும் வழியாகும். மேலும் வழியோரத்தில் கைவிடப்பட்ட காயப்பட்டவன், உடைமைகளை இழந்தவன், உயிருக்காகக் காத்திருந்தவன், இயேசுவின் கடவுள் அத்தகையவர்களைத் தூய்மைப்படுத்தி, திடப்படுத்தி, புதுவாழ்வளித்து பாதுகாப்பும் பராமரிப்பும் அளிக்கும் நல்ல சமாரித்தன்.

இத்தகைய கடவுளின் உருக்கள் நமக்குள் பிறந்தால் நாமும் நம்மவர் மத்தியில் மானிடம் காப்பவராய்ப் பிறப்போம். இயேசுவின் மனுவுருவாக நாமும் நம்மவர் மத்தியில் குடிகொள்ளலாம்.

மனுவுருவாகி குடிகொண்ட இயேசு, நம்மைச் சீடத்துவ வாழ்வுக்கு அழைக்கிறார். பெயரளவில் கிறிஸ்தவர்கள் என்ற நிலையிலிருந்து விடுபட்டு இயேசுவின் ஆண்டவரால் ஆட்கொள்ளப்பட்ட அனுபவத்துடன் வாழ இயேசுவைப்போல் நம் சூழமைவில் குடிகொள்ள அனைத்துக்கும் மேலாக இறைவனையும், இறைவனுக்கு ஏற்புடையதையும் நாட (மத் 6:33), உண்மைக்கு சாட்சியம் பகரவே வந்தேன் (யோவான் 18:37) என்ற இயேசுவின் நிலைப்பாட்டை, பொய்மை நிறைந்த சூழமைவில் வாழ, யாரும் - யாவரும் என்னைவிட்டுப் போனாலும் நான் தனிமையில் அல்ல தந்தை என்னோடு இருக்கின்றார் (யோவா 16:32) எனத் துணிவுகொள்ள, வேதனை வரும்போது இயேசுவைப்போல் உயிரையும் துறக்க தயாராய் இருப்பது சீடத்துவ வாழ்வு. இது இயேசுவின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு மீண்டும் பிறப்பதால் விளைவதாகும்.

மீண்டும் பிறப்பது கிறிஸ்தவனுக்கு இன்றும் அறக்கடனாகிறது. இறையரசின் அறம், அதற்கு முரணான நம் சிந்தனைப் போக்கு, வாழ்க்கைப் பாங்கு, நாம் செய்யும் முடிவுகளுக்கு தூண்டுதலாயிருப்பவை, நம் விழுமியங்களுக்கு அடிப்படையாய் இருப்பவை, நம் தொடர்பாடல்கள் என இன்னும் பலவற்றிலிருந்து மாற்றமடைந்த வாழ்வு வாழ அடிப்படையாகின்றது. இத்தகைய் அடிப்படையான மனமாற்ற வாழ்வே 'மீண்டும் பிறப்பது', 'மறுவுருவாதல்' ஆகும்.

முடிவாக, இயல்பு வாழ்வு இன்றைய நம் பயணத்தில் இயேசுவின் பிறப்பு நிகழ்வின் நினைவில் வளர்ந்த எண்ணக்கருவாகும். இயேசுவின் பிறப்பு நிகழ்வு மானிடம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. மானிடத்தைப் பாதுகாப்பதன் வழியாகவே இயேசுவின் கடவுள் காண விரும்பும் பண்புமிக்க, சுதந்திரமும், சமத்துவமும், சுயநிர்ணயமும் கொண்ட மானிடத்தைப் பிறக்கச் செய்யலாம். புதிய சமுதாயத்துக்கு வித்திடலாம். புதிய சமுதாயத்தை எதிர்நோக்கலாம் (உரோ 14:17). இயேசுவின் குடிகொள்ளும் பாங்கு அவரது மனுவுருவுக்கு, மனுவுருவான நிகழ்வுக்கு முழு வடிவமளிக்கின்றது. பல்வேறு வழியில் பேசிய கடவுள்..... தம் மகன் வழியாகப் பேசும் (எபி 11:1) குரலைக் கேட்க அழைக்கிறது. அக்குரல் பாரபட்சங்களைக் களைந்துவிட்டு, எரியும் புதரில் அவரது குரல் கேட்டு, வழிநடக்க (மாற் 3:1) மீண்டும் விடுதலைப் பயணத்தைத் தொடர அழைக்கிறது. இது மனுவுருவான இயேவுவைப் பின்செல்லும் பயணமாகும்.

## சமாதானப் பரிசு

பி. ஏ. சி. ஆனந்தராஜா

ஆதாம், ஏவாள் நாட்களில் சமாதானம் தொலைந்து போனது (தொடக்க நூல் 3:12-13). அவர்கள் விலக்கப்பட்ட கனியை புசித்தபொழுது தங்கள் நிர்வாணத்தை உணர்ந்தவர்களாய், ஒருவர்மேல் ஒருவர் பழிசுமத்த ஆரம்பித்து, இந்தச் சமாதானப் பூமியில், முரண்பாடுகளைத் தொடக்கிவைத்தார்கள். இதில் கவலையான விடயம் யாதெனில் அவர்களைப் பின்தொடர்ந்த சந்ததியினரும் - நாம் உட்பட - அவர்கள் காண்பித்ததன் - மாதிரியைப் பின்பற்றி வருகின்றோம்.

எங்கள் பிழையான தெரிவுகளுக்குப் பிறர்மேல் பழிசுமத்தி, அந்தக் குற்றங்களை (guilt) யாருமே ஒப்புக்கொள்ள முன்வராத வேளைகளில் ஆத்திரமடைகின்றோம். எங்களுடைய சந்தோசமின்மைக்குரிய காரணிகளை பிறர்மேல் சுமத்துவதால் குடும்பங்களில், ஆலயங்களில், சமூகங்களில், நாடுகளில் முரண்பாடுகளும், பிளவுகளும் உருவாகின்றன. குறைகண்டு, பிழை பிடிப்பதில் மூழ்கியிருக்கும் மனங்களால் சமாதானத்தை உருவாக்க முடிவதில்லை.

நத்தார் பண்டிகை சமாதானத்தின் காலமாகும். 'சமாதானத்தின் அரசரை' (எசாயா 9:6) உலகிற்கு அறிமுகப்படுத்த இறைவன் எத்தகைய அரங்கை அமைத்தார் என்பதை எசாயாத் தீர்க்கதரிசி அழகாகக் குறிப்பிடுகிறார். பழி சுமத்தல், குற்றங்காணல், பாவங்கள் என்ற தீய சக்கரத்தை உடைத்து "சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலைநாட்டவும் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர்வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார்" (கொலோ 1:20). நாம் உண்டுபண்ணும் குழப்பங்கள், பிரிவினைகள், துன்பங்களால் நாம் குற்ற உணர்வுக்குள்ளாகி துவண்டுபோகாமல் இயேசுதாமே அந்தப் பழிகளை ஏற்றுக்கொண்டார்.

இறைவனின் மன்னிப்பைப் பெற்றவர்கள் மற்றவர்களும் அவ்வாறு பெற்று வாழ உதவும் சீடர்களாக இயங்க இயேசு இப்போது அழைத்து நிற்கின்றார். நாம் இறை மன்னிப்பை மனமுவந்து ஏற்றுக்கொள்ளும்போது பிறரும் அவ்வாறு பெறுவதற்கு தடையாயிருக்கும் எமது எதிரிடையான மனப்பாங்குகள் அகன்றுபோகின்றன.

இறைவனோடு சமாதானமாக ஒன்றுபட்டிருத்தல் என்பது மற்றவர்களோடு சமாதானமாக வாழும் ஆர்வத்தைத் தூண்டுகிறது.

எனவே இந்த நத்தார் பண்டிகைக் காலம் 'சமாதானப் பரிசை' மற்றவர்களுக்குக் கொடுத்தும் வாங்கியும் பரிமாறிக் கொள்ளும் பெருமகிழ்ச்சிக்குரிய பொழுதாக அமையட்டும்.

## இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்

*செபமாலைக் கன்னியர், பட்டித்தோட்டம்*

"பாலைவனத்தில் ஒரு கூக்குரல் ஒலிக்கிறது, உங்கள் பாதைகளைச் செம்மையாக்குங்கள்!" அன்று எசாயாவின் கூக்குரலாக இருந்த இந்த ஆற்றல்மிக்க தொனி, திருமுழுக்கு யோவானை உந்தித்தள்ளி மெசியாவின் நெருங்கிய வருகையை அவசரமாகவும், பகிரங்கமாகவும் அறிக்கையிடச்செய்து மக்களை மனமாற்றத்திற்கு அழைத்தது.

திருவருகைக்காலம் மெசியாவின் இரண்டாவது வருகைக்கு ஆயத்தப்படுத்த எம்மைத் தூண்டி மனம் மாறும் காலமாகும். ஒளி உலகிற்கு எவ்வாறு இன்றியமையாததாக இருக்கின்றதோ அதேபோன்று எம்முடைய அகம் ஒளிபெற எமது உள்ளத்திலே உறைந்து மண்டிக்கிடக்கும் இருளாகிய எமது பலவீனங்கள், பாவச்சார்பான எண்ணங்கள், சிந்தனைகள் யாவும் எம்மிடமிருந்து விலகும்போதுதான் எம்மால் இயேசுவாகிய மெசியாவைக் காணமுடியும். இதனால் எமது ஆன்மா புத்துயிர் பெறவேண்டும். அப்போதுதான் எமது நம்பிக்கை இறைவனில் வலுப்படும்.

இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றத் துடித்தவர்களில் முக்கியமானவராகக் கணிக்கப்படும் திருமுழுக்கு யோவான் மக்களாலே மெசியாவென்று ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு அவருடைய போதனையும், வாழ்வும் ஒன்றாய் இருந்தன. ஆனால் அவர் மெசியாவிற்காகத் தன்னை இழந்தார். மெசியா இறைவனால் எமக்குக் கொடுக்கப்பட்ட மேலான கொடை.

விழித்திருந்து, தனித்திருந்து, எம்மை இனம்கண்டுகொண்டு, புதிய தளிர்களாக இயேசுவுடன் சேர்ந்து நாமும் பிறந்திடுவோம். புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்ப நமது அன்றாட வாழ்வில் ஒருவருக்கொருவர் ஊக்கமளிப்போம், உட்சாகம் கொடுப்போம்.

இறைமகன் பிறப்பதற்குமுன், தன்னை இழந்து மெசியாவின் வருகைக்காக ஆயத்தம் செய்த திருமுழுக்கு யோவானின் முழக்கம் எம்முள் எந்த வேளையும் ஒலித்துக்கொண்டே இருக்கட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறுகதைகள்

## மன்னவன் தந்த மறுவாழ்வு

அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்

அந்தி மாலைப் பொழுதில் ஆதவன் மறைந்து ஆலய மணி ஒலிக்க அனைவரையும் அன்னையின் பாதத்தில் ஒப்படைத்து செபமாலைத் தியானத்தில் மூழ்கினாள் ஆனந்தி. ஆண்டவன் பாதத்தில் அனைத்து அங்கலாய்ப்பையும் அழுகையோடு அர்ப்பணித்தாள். ஆண்டுகள் ஆறாகியும் அன்போடு தழுவிய ஆசை முகம் காணாமல் அங்கலாய்த்துக்கொண்டிருந்தவள், ஆண்டவன் அடியில் "இதோ அடிமை" என்று தன் வலியையும், வேதனையையும் கொட்டித்தீர்த்துக்கொண்டிருந்தவள் தன் கடந்த கால வாழ்வுக்குள் மூழ்கிப் போனாள்.

இறுதிக்கட்டப் போரின் கடைசி நாட்களில் தன் கையால் தானே இராணுவத்தினரிடம் ஒப்படைத்த தன் கணவன் நிமலன் பற்றிய எந்தவொரு தகவலும் இல்லாதநிலையில் கடந்த ஆறு ஆண்டுகளாக அவள் பல்வேறு இடங்களுக்கும் அலைந்துகொண்டிருக்கிறாள். இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட தன் அன்புக் கணவன் நிமலன் ஆறு ஆண்டுகள் கடந்துசென்றும் உயிருடன் இருக்கின்றாரா, இல்லையா என்ற நிலவரமே தெரியவில்லை. ஆசைக்கு ஒரு மகனையும் ஒரு மகளையும் தந்துவிட்டு அந்தரவழியில் தவிக்கவிட்டுச்சென்ற கணவனின் நிலை என்னவோ ஏதோ என்று துடித்துக்கொண்டிருக்கின்றாள். என்ன துன்பம் வந்தாலும் தன் மகனைக் கல்வியில் பெரியவனாக வளர்க்க வேண்டும் என்ற தன் கணவனின் ஆசையை நிறைவேற்ற அரும்பாடுபடுகிறாள் ஆனந்தி.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு, அந்த நேரத்தில் அனாதை மடம் ஒன்றிற்குச் சென்று சமையல் வேலைகளைப் பார்த்துவிட்டு வருவாள். அதில் கிடைக்கும் பணத்தைக்கொண்டு தன் காலத்தை ஓட்டி வந்தாள்.

பெரியவன் படித்து புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த சந்தோசத்தில் அன்று ஒருநாள் அவளை அறியாமல் வாய்விட்டு அழுதுவிட்டாள். அவள் போட்ட அழுகைச் சத்தத்தில் அக்கம் பக்கத்தில் உள்ளவர் அனைவரும் என்னவோ ஏதோ என்று பதறியடித்துக்கொண்டு வீட்டைச் சூழ்ந்துவிட்டனர். விடயம் அறிந்த சுற்றத்தவர் அவளைத் தேற்றி, "இத்தனை துன்பத்தின் மத்தியிலும் உன் மகன் பரீட்சையில் வெற்றி அடைந்தது ஆண்டவன் செயல். கலக்கமடையாமல் ஆண்டவருக்கு நன்றி கூறு" என்று அவளைத் தேற்றிவிட்டுச் சென்றனர்.

ஆசை மகனிடம் காணப்பட்ட திறமைகள் வளரவேண்டுமெனில் அவனைப் பெரிய பாடசாலை ஒன்றில் படிக்க வைக்கவேண்டும் என்ற தனது ஆசையை மகனுக்குக் கூற, மகனும் மறுபேச்சின்றி தாயின் கட்டளையை ஏற்று பெரிய பாடசாலை ஒன்றில் கல்வியை தொடர்வதற்காகச் சென்று அங்குள்ள விடுதிச்சாலையில் தங்கினான்.

அங்கு சென்றவனுக்கு தன்னைப்போல் தந்தையை இழந்து நிற்கும் பலரின் சோகக்கதைகள் தெரியவந்தன. இதனைத் தாயிடம் கூறி, தாயைச் சமாதானப்படுத்த முயன்றான். ஆனால் அவனால் அது முடியவில்லை.


இவ்வாறு தன் கடந்த காலத்தை எண்ணிப்பார்த்த ஆனந்தி, "அம்மா பசிக்குது" என்ற ஆசை மகளின் அனுங்கல் குரல் கேட்டு சுயநிலைக்கு வந்தாள்.

அன்றொரு நாள் காணாமற் போனவர்களை விசாரிக்கும் ஆணைக்குழு முன்பாக இவளும் தன் கணவன் பற்றிய விபரங்களை எடுத்துச்சொன்னாள். ஆனந்தியின் அழுகையைப் பார்த்த ஆணைக்குழு உறுப்பினர்களின் கண்களிலும் நீர் நிறைந்தன.

வீடு வந்தவளுக்கு அன்றைய பொழுது முழுவதும் தன் கணவனின் நினைவாகவே இருந்தது. "ஆலய வேலைகளை அர்ப்பணிப்போடு செய்யும் என் கணவனுக்கு இந்நிலையா? இறைவா ஏன் என் கணவனை என்னிடமிருந்து பிரித்தாய்?" என்று தனிமையின் வெறுமையில் புலம்பிக் கொண்டிருந்தவள் கைத்தொலைபேசி அழைப்பு மணியின் சத்தம் கேட்டு சுயநினைவுக்கு வந்தாள். கைத்தொலைபேசியை எடுத்து, "ஹலோ! யாரது?" என்று கேட்டவள் மறுபக்கத்தில் பாடசாலை அதிபர் பேசுவதாகப் பதில் வந்தது. சற்று அதிர்ச்சி அடைந்தவள், என்னவோ ஏதோ என்ற பயத்துடன், "சொல்லுங்கோ, என்ன விடயம்?" என்று பரபரப்புடன் கேட்டாள். "ஏ.எல். பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற ஐந்து மாணவர்களுக்கு வெளிநாட்டில் கல்வி பயிலும் சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது. அதில் உங்கள் மகனும் தெரிவாகியுள்ளார்" என்று அவர் கூறியதும், ஆனந்தி மகிழ்ச்சிவெள்ளத்தில் மூழ்கிப்போனாள். ஆயினும் கணவன் இன்றி தவிக்கும் அவள் ஒரே மகனையும் பிரிந்து எப்படி வாழ்வது என்று தடுமாற்றம் அடைந்தாள். "அவசரம் இல்லை, இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கு. ஆறுதலாக யோசித்து உங்கள் முடிவைச் சொல்லுங்கள்" என்று அதிபர் கூறிவிட்டுத் தொலைபேசியை வைத்துவிட்டார். ஆனந்தி கனத்த நெஞ்சுடன் கதிரையொன்றில் சாய்ந்து சிந்திக்கத் தொடங்கினாள்.

அன்று வழமைபோல் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு மகளையும் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு தனது வேலைக்காகப் புறப்பட்டவேளை வாசலில் ஓர் கார் வந்து



நின்றதும் ஒரு கணம் நெஞ்சு திக்கென்று இருந்தது. வந்தவர்கள் பெரிய பதவியில் இருப்பவர்கள்போல் தெரிந்தது. வந்தவர்களை வரவேற்று இருக்கையில் அமரவைத்து விடயம் என்னவோ என்று புரியாமல் நின்றவளைப் பார்த்து ஓர் அதிகாரி, "உங்கள் கணவர்பற்றி மேலதிக விடயத்தை அறிந்துகொள்ளவே நாம் வந்தோம்" எனக்கூறி தேவையான விபரங்களை அவளிடம் கேட்டுக்கொண்டிருந்தனர். விபரங்களைப் பெற்றுக்கொண்டு சென்றவர்களையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள் ஆனந்தி. எப்படியும் தன் கணவன் கிடைத்துவிடுவான் என்ற நம்பிக்கையில் தினமும் கோவிலுக்குச் செல்வதற்கும், வீட்டில் நாளாந்தம் செபமாலை சொல்வதற்கும் அவள் மறப்பதே இல்லை.

ஒவ்வொரு வருடமும் நத்தார் தினமென்றால் ஆனந்தியின் உறவுகள் அனைத்தும் ஒரு கிழமைக்கு முன்பே ஒன்றுகூடி விடுவார்கள். அவர்களின் பூரிப்பில் வருடத்தில் சில நாட்களாவது அவள் சந்தோசத்தில் திழைப்பாள். அன்று நத்தார் தினத்தைக் கொண்டாட அவளின் உறவுகள் முன்கூட்டியே அவளின் விட்டிற்கு வந்திருந்தனர்.

அவர்களோடு உரையாடி மகிழ்ச்சியில் திழைத்து உருசியான உணவுப் பண்டங்களை தயாரித்து அனைவருக்கும் கொடுத்து சந்தோசத்தில் திழைத்திருந்தாள். என்றாலும் மாலை ஆறு மணிக்கு அனைவரையும் அழைத்து அன்னையின் பாதத்தில் அமர்ந்து செபமாலை செபிக்க அவள் மறப்பதில்லை. என்னதான் சந்தோசமாக இருந்தாலும் செபமாலை வேளையில் அவள் விடும் கண்ணீரைப் பார்த்து அவள் உறவுகளும் அவளோடு சேர்ந்து கண்கலங்கி அன்னையிடம் அவளுக்காகச் செபிக்க மறப்பதில்லை.

அன்று இரவு டிசம்பர் 24ஆம் திகதி. இரவு நத்தார் பூசைக்காக வீட்டில் அனைவரும் காத்துக்கொண்டிருந்தனர். ஆனந்தியும் அவள் உறவுகளும் வெளி முற்றத்தில் பாய் விரித்து அமர்ந்திருந்து சந்தோசமாகப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது பெரிய கார் ஒன்று வெளியில் நின்று கோண் அடிக்கும் சத்தம் கேட்டு அனைவரும் பதட்டமடைந்தனர். "இரவு 9.00 மணி. இந்த வேளையில் யார் வருவார்கள்?" என்று பரபரப்படைந்தனர். ஆனந்தி வெளி வாசலுக்கு வந்து பார்த்தாள். அப்போது காரில் இருந்து இருவர் இறங்கி, "நிமலனின் வீடு இதுவா?" என்று கேட்டதும் ஆனந்தி, "ஆம் இதுதான் அவரின் வீடு. அவருக்கு என்ன நடந்தது? சொல்லுங்கள் ..." என்று படபடத்தாள். "அவருக்கு எதுவும் நடக்கவில்லை. அவர் உயிருடன்தான் இருக்கின்றார். இதோ அவரை அழைத்து வந்துள்ளோம்" என்று கூறி காரின் கதவைத் திறந்துவிட நிமலன் மெதுவாக இறங்கினான்.

தன் கணவன் நிமலனைக் கண்ட ஆனந்தி அவனைக் கட்டியணைத்து ஓவென அழுதாள். "இத்தனை காலமாக என்னைத் தவிக்கவிட்டு எங்க சென்றீர்கள்? என்ன நடந்தது சொல்லுங்கள்?" என்று புலம்பினாள். வீட்டிலிருந்து ஏனையவர்கள் அவளைச் சமாதானப்படுத்தி வீட்டிற்குள் அழைத்துவந்தனர்.

தன் கணவரை அழைத்துக்கொண்டு தன் வீட்டிற்குள் சென்றவள். அன்னையின் பாதத்தில் விழுந்து கண்ணீர்ப் பூக்களை நன்றியாகப் படைத்துக்கொண்டிருந்தாள். தன் கணவனை மீண்டும் தந்த மாதாவை நன்றியோடு பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது அவளின் கணவன் மெதுவாக நடந்து வந்து அவளருகே அமர்ந்து அவளைக் கட்டியணைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டான்.

அப்போது ஆனந்தி, "இன்று இரவு நத்தார் பூசை அல்லவா! வாருங்கள், நாம் ஒற்றாகச் சேர்ந்து பாலனுக்கு நன்றிப்பலியை காணிக்கையாக்குவோம்" என்று கூறித் தன் மகளையும், கணவனையும் அழைத்துக்கொண்டு தன் உறவுகளோடு ஆனந்தி நத்தார் பூசைக்காக ஆலயத்தை நோக்கிச்சென்றாள்.

## நத்தார் பரிசு

பி. ஜே. ரி. திலிப் குமார்
எமில் நகர், மன்னார்

"அம்மா எனக்கு பத்து ரூபா தாங்களன்....." என்று தூங்கி எழுந்ததிலிருந்து ரூபி அவளது அம்மாவை தொந்தரவு செய்துகொண்டிருந்தாள். "ரூபி கொஞ்சம் சும்மா இரு, உனக்கு ஒவ்வொரு நாளும் பத்து ரூபா என்னத்துக்கு.......!!! அம்மாவைச் சமைக்க விடு" என்று அதட்டவே அவள் அப்பாவிடம் ஓடிச் சென்று, "அப்பா அப்பா........ பத்து ரூபா தாங்களேன்" என்று சிணுங்கினாள். "ஏன் பிள்ளை..... பிள்ளை என்ன வேண்டப்போறிங்க?" என்று அந்தோனிதாஸ் தனது ஏழு வயது நிரம்பிய மகளைத் தூக்கி அணைத்துக்கொண்டு அவள் பிஞ்சு விரலைச் செல்லமாகக் கடிக்கவே, "நான் பரிசு வேண்டப்போறன்" எனக் கூறியபடி நெளிந்தாள் ரூபி. ரூபியின் வயதுமீறிய பேச்சையும், அவள் செயற்பாடுகளையும் காணும்போதெல்லாம் தன்னையே மறந்து ஓர் குழந்தைபோல் ஆகிவிடுவார் அந்தோனிதாஸ். நேரம் போவதுகூட தெரியாமல் அவளுடன் கதைத்துக்கொண்டே இருக்கலாம்.

பொதுநிறம், சுருண்டமுடி, எப்போதும் ஆண் பிள்ளைபோல் வெட்டப்பட்டு சீவப்பட்ட தலைமுடி. இரண்டு கிளிப் அவளது நீண்ட கூந்தலைத் தாங்கிக்கொண்டு இருக்கும். சிறிய சட்டை அணிந்து அங்குமிங்கும் ஓடித்திரிவாள் அவள்.

ரூபியோ விடுவதாக இல்லை, "அப்பா பத்து ரூபா......" என்று இழுக்க, தனது சட்டைப்பையினுள் இருந்து காசை எடுத்தார். இருபது ரூபாய்த் தாள் ஒன்று இருந்தது. அதனை அவளின் கைகளில் நுழைக்கவே அதை அவசர அவசரமாய் வாங்கிக்கொண்டு "யாருக்கம்மா பரிசு வாங்கப் போறாய்?" என்று அப்பா கேட்டதையும் காதில் வாங்கிக்கொள்ளாமல் தந்தையின் கைகளில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு படுக்கையறையை நோக்கி ஓடினாள் ரூபி.

"இங்கப்பா....... கொஞ்சம் வாங்க, என மேரி அழைக்கவும் குசினிக்குச் சென்ற அந்தோனிதாஸ் தன் மகள் படுக்கையறையின் கட்டிலின்கீழ் புகுந்து எதையோ எடுப்பதையும் அதனுடன் எதேதோ கதைப்பதையும் அவதானிக்காமல் இல்லை.

"அப்பா சாப்பிடுறீங்களா? சாப்பாடு ரெடி" என புட்டையும் கோழிக்கறியையும் போட்டுக்கொடுத்து விட்டு ரூபியை அழைத்தாள் மேரி. ரூபி சாப்பிட மறுக்கவே "அப்பா ரூபிக்கு நீங்க தீத்திவிடுங்க. அவள் என்னட்ட சாப்பிடுறாளில்ல" என்று சொல்லிவிட்டு, "கெதியா சாப்பிடு....... நித்திரையா போயிராத......" என்று கூறவும் ஒருவாறு சாப்பிட்டு முடித்தாள் ரூபி.

"என்னப்பா இந்தமுறை கிறிஸ்மஸ் என்னமாதிரி, எனக்கு செலவுக்கு எவ்வளவு தருவீங்க! நிறையச் செலவு வேற இருக்கு......" என்று தாஸின் முகத்தைப் பார்த்தாள் மேரி.

"நத்தார் வருசம் என்டா செலவுதானே...... இந்தமுறை எனக்கு ஒண்டும் வேண்டாத......." என்று தாஸ் இழுக்கவும் மேரி இடைமறித்தவளாய் "சும்மா இருங்கப்பா உங்களுக்கு இரண்டு ஜீன்ஸ் மூன்று சேட்டாவது வாங்கணும்" உங்கட்ட புதுசு ஒன்றுகூட இல்லை, ரூபிக் குட்டிக்கும், எனக்கும் இந்தியாக்காரனிட்ட வேண்டுரன். பலகாரம் சுடனும், வாற தொட்ட பிள்ளைகளுக்கு, உங்கட தங்கச்சிட பிள்ளைகளுக்கு கைவியளம் கொடுக்கணும்........, என்று அடுக்கிக்கொண்டே போன மேரி.

திடீரென ஏதோ ஞாபகம் வந்தவளாய், "அப்பா உங்கட்ட கடன் வேண்டின துரை அண்ணன் எப்ப அதத் தாராராம்? பத்தாயிரம் என்டா சும்மாவோ...... அவர் நல்ல ஆள், எத்தன வருசமா உங்கள ஏமாத்துரார், விட்டா சரிவராது கஸ்ரப்பட்டதுகள் என்டு இரக்கப்பட்டதுக்கு அவர் செய்யிற வேலை சரியா.......?" என்று தொடர, "மேரி சும்மா இரு, அவனுக்கு ஏதோ கஸ்டம்போல. நத்தார் வருசம் என்டா அவனுக்கும் காசு தேவப்படும்தானே...... கொஞ்சம் விட்டுப்பிடிப்பம். அவனுக்கும் ரெண்டு சின்னனுகள் இருக்குது....... உடுப்பு, சாப்பாடு என்டு செலவு இருக்கும்." என தாஸ் சொல்லவும் மேரி சற்றுக் கடினமான குரலில், "நீங்க காசு விசயத்தில இப்படித்தான். என்னட்ட மட்டும் ஆயிரத்த தந்திட்டு இரண்டாயிரத்துக்கு கணக்கு கேப்பீங்க......." என்றாள்.

"இஞ்ச ரூபி அப்படியே நித்திரையாயிட்டாள் பாருங்க, என்று அவளைக் கண்ணால் காட்ட, அந்தோனிதாஸ் ரூபியைத் தூக்கி கட்டிலில் நித்திரைக்குப் போட்டுவிட்டு திரும்பும்போது கட்டிலின்கீழ் பார்த்தார். வெள்ளை நிற பிளாஸ்ரிக் டப்பா ஒன்று அங்கும் இங்குமாய் உறுண்டு நின்றது. அதனை திறந்து பார்த்தார். அதனுள் சில பத்து ரூபாய் தாள்களும், தாஸ் கொடுத்த இருபது ரூபாய்த்தாளும், சில சில்லறைக்காசுகளும் இருந்தன. அத்தோடு ஓர் மடித்த காகிதத்துண்டும் காணப்பட்டது. அதனை எடுத்து மேரி, "இங்கப்பா இதில ஏதோ எழுதியிருக்கு பாருங்க" என நீட்ட, "யேசப்பாவுக்கு எனது நத்தார் பரிசு" என அப்பிஞ்சு விரல் எழுதிய வரிகள் காணப்பட்டன. இருவரும் சிலையாக நின்றனர். கண்கள் கண்ணீரால் நிறைந்தன. ரூபியோ புன்முறுவலுடன் தூங்கிக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண வாழ்வின் ஆண்டு

## இலங்கையில் பணியாற்றும் துறவற சபைகள்

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள துறவற சபைகள் பற்றிய விரிவான கட்டுரை இப்பகுதியில் இடம்பெறும்.

# மதுரை புனித அமலோற்பவ மாதா கன்னியர் சபை (CIC)

### சபையின் ஆரம்பம்

1898ஆம் ஆண்டில் அருட்தந்தை ஜூலியஸ் லார்மே (சே.ச.) அடிகளார் தமிழ்நாடு மாநிலம், திண்டுக்கல் நகரிலிருந்து தென்மேற்கு திசையில் 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு சிறு கிராமமாகிய பஞ்சம்பட்டியில் பங்குத் தந்தையாக இருந்தார். தூத்துக்குடியில் பெரைரா குடும்பத்தில் பிறந்த அகுஸ்தீன் பெரைரா (22 வயது) அவரது சீடராக இருந்தார். இவர்கள் இருவரும் மறைக்கல்வி, புனிதர்களின் வரலாறு, இறைபணி பற்றிய விளக்கங்களை மக்களுக்கு எடுத்துரைத்தனர்.

தென் தமிழகம் முழுவதிலும் ஏற்பட்ட தாது வருட பஞ்சம் பஞ்சம்பட்டியிலும் பரவியது. பசியினாலும், நோயினாலும் மக்கள் துன்பத்திற்கு உள்ளான நேரத்தில் மனித நேயம் கொண்டு "சேற்றில் மலர்ந்த செந்தாமரையாய்" இளம் பெண்கள் நால்வர் அருட்தந்தையுடன் இணைந்து இறைபணியாற்ற முன்வந்தனர். இவர்கள் விசுவாசம், வியாகம்மாள், அன்னம்மாள், சவிரியம்மாள், ஆவர்.

கன்னிமை வாழ்வை மேற்கொண்டு ஆண்டவருக்கு ஊழியம் புரியும் துணிவுடன் இவர்கள் பங்குத்தந்தையான அருட்தந்தை ஜூலியஸ் லார்மேயிடம் வந்தனர். அவரும் அவரது சீடரும் இவர்களை சிலகாலம் பயிற்றுவித்தபின் "அமலோற்பவ அன்னையின் சிறுபிள்ளைகள்" என இவர்களுக்குப் பெயரிட்டனர். இவர்களைக்கொண்டே ஒரு சிறு வீடு கட்டி அதனை 'அமலோற்பவியின் வீடு' என்று அழைத்து, 1899ஆம் ஆண்டு பெப்ரவரி 2ஆம் நாள் இந்த வீட்டில் குடிபுகுந்தனர். அவர்கள் "பெயாத்தஸ்," (பேறுபெற்றோர்) என அழைக்கப்பட்டனர்.

இவர்களது குழுவில் புதுப்புது உறுப்பினர்கள் சேர்ந்து கொண்டேயிருந்தனர். அவர்களை அறிவிலும், ஞானத்திலும், புனிதத்திலும் வளர்ப்பதில் ஆர்வமாய் இருந்தார் சகோதரர் அகுஸ்தின் பெரைரா. இவரின் மேலான வாழ்வைக் கண்டு அருட்தந்தை லார்மே அவர்கள் திருச்சி ஆயர் மேதகு ஜான்மேரி பார்த் ஆண்டகை அவர்களிடம் பரிந்துரைக்க, சகோதரர் அகுஸ்தின் 1900ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

தந்தை லார்மே மறைந்தபின் அப்பங்கின் பொறுப்பினை அருட்தந்தை யூஜின் நெஸ்புளுஸ் (சே.ச) அவர்கள் ஏற்றார்கள். மேதகு ஆயர் பார்த் அவர்களின் ஆலோசனைக் குழுவினருடன் தனிச்சபை உருவாக்கம்பற்றி பேசப்பட்டு, 1911 ஜூலை 2ஆம் நாள் ஏழு பெண்கள் நவத்துறவு நிலைக்கு மதுரை தூய வளனார் சபைக்கு அனுப்பப்பட்டு பயிற்சிபெற்றனர்.

அருட்தந்தை அகுஸ்தின் பெரைரா அவர்களின் மறைவுக்குப்பின் அருட்தந்தை நெஸ்புளுஸ் பொறுப்பேற்ற காலத்தில் 03.02.1914 இல் 'அமல உற்பவ மாதா சபை' என்னும் பெயரில் திருச்சி மறைமாவட்ட ஆயரின் மேற்பார்வையில் துறவற சபையாக உறுதிசெய்யப்பட்டது. சபையின் முதல் அதிபராக அன்னை அகுஸ்தின் மேரி அவர்கள் 08.09.1914இல் பொறுப்பேற்றார்கள். 08.12.1921ல் துறவற சபையாக அங்கீகாரம் பெற்று, புதிய ஒழுங்குப் புத்தகம் அச்சிடப்பட்டது.

பஞ்சம்பட்டியிலிருந்து 23.12.1923ல் மதுரைக் கீழ்வாசல் இல்லம் அமலவையின் தலைமையகமாகியது. முதலில் சென்னிறச் சேலை அணிந்த சகோதரிகள் பின்னர் 1924ல் முக்காடு அணிந்து, அதன்பின் 08.12.1932ல் அமல அன்னையின் நீலக்கச்சை போன்ற நீலநிற உடையை அணிந்தனர். அன்றுமுதல் மதுரை நீலச் சகோதரியர் (Madurai Blues) எனும் பெயர் வழங்கப்படலாயிற்று.

1969ல் வத்திக்கான் சங்கத்துக்குப்பின் சபை மறுமலர்ச்சி பெற்றது. ஒழுங்குகளில் சில மாற்றம் செய்யப்பட்டு சகோதரிகள் வெண்ணுடைக்கு மாறினர். சபை அதிபராக சகோதரி மேரி ஜோசபா அவர்கள் இருந்தபோது 1986ஆம் ஆண்டு ஜனவரியில் நடந்த புதுப்பித்தல் பேரவையில் சபையின் தனிவரம் கண்டறியப்பட்டது. அதே ஆண்டு மே திங்கள் 7, 8 ஆகிய நாள்களில் சபையின் பவள விழா கொண்டாடப்பட்டது.

02.07.1986ல் தென்னிந்தியாவிலிருந்து வட இந்தியாவிற்கும் தென்மேற்குப் பகுதிக்கும் சகோதரிகள் பணிபுரிய அனுப்பப்பட்டனர். 19.01.1993ல் திருஆட்சிப்பீடத்திற்குட்பட்ட சபையாக உயர்த்தப்பட்டது. 14.02.1994ல் ஸாம்பிய நாட்டிலும், அதனைத் தொடர்ந்து 12.03.1998ல் தென் ஆப்ரிக்கா நாட்டிலும், 08.10.1998 இத்தாலியிலும், 02.07.2004ல் இலங்கையிலும், 21.07.2012ல் ஜெர்மனியிலும் பணித்தளங்கள் விரிவாக்கப்பட்டன.

பங்குப்பணியோடு நற்செய்திப்பணி செய்யத் தொடங்கிய அமலவை தற்போது கல்வி, மருத்துவம், சமூகம் என பல துறைகளிலும் தனது பணியைச் சிறப்பாகக் காலத்தின் மாற்றங்களுக்கேற்ப செய்துவருகிறது.

இலங்கை மண்ணில் பங்குப்பணிகளுடன் தனது பணியைத் தொடங்கிய அமலவை இன்று கல்விப்பணி, ஆற்றுப்படுத்தல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது. உள்ளார்ந்தவிதத்தில் மன்னார் மறைமாவட்டத்துடன் இணைந்து மூன்று இல்லங்களில் 8 சகோதரிகள் மண்ணின் மைந்தர்களையும் உள்வாங்கிப் பணியாற்றி வருகின்றனர்.

தியாக உள்ளம் கொண்ட நால்வரின் ஆர்வத்தில் ஆரம்பமான அமலவை 24.05.2011ல் தனது நூற்றாண்டு விழாவினைச் சிறப்பித்து மகிழ்ந்தது. சபை நிறுவுனர் அருட்தந்தை அகுஸ்தின் பெரைரா அவர்களுக்கு 26.03.2015 அன்று 'இறை ஊழியர்' பட்டம் கொடுக்கப்பட்டது. இறையாசீரால் ஆரவாரமின்றியும், ஆடம்பரமின்றியும் ஒரு நூற்றாண்டுக்குமுன் அமலவையைத் தோற்றுவித்த நிறுவுனர்கள், அருட்தந்தையர்கள், முதல் அன்னையர்கள் போன்றோரின் பாதந்தொட்டு வணங்கி, தூய ஆவியார் தரும் துணிவுடன் புதியதோர் உலகு படைக்க அடுத்த நூற்றாண்டை நோக்கிய அமலவையின் இறையரசுப்பயணம் அருள்சகோதரி அந்தோனி சேவியர் அவர்களை பதினொராம் சபை அதிபராகக் கொண்டு தொடர்கின்றது. மொழி, இனம், நாடு, என்ற வேற்றுமைகள் நீக்கி, நல்லுள்ளம் கொண்டவர்களின் உதவியினால் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் அமலவையின் இலட்சியப்பயணம் அமலியின் அன்பு வழியில் தொடரும்.



### ஒரே பார்வையில்

**சபையின் பெயர்** : மதுரை புனித அமலோற்பவ மாதா சபை. CIC (Congregation of Immaculate Conception)

சுருக்கமாக 'அமலவை' சகோதரிகள் என்றும் இச்சகோதரிகள் அழைக்கப்படுகின்றனர்.

**நிறுவுனர்கள்** : அருட்பணி, ஜூலியஸ் லார்மே (சே.ச), இறை ஊழியர் அருட்பணி. அகுஸ்தீன் பெரைரா, அருட்பணி. யூஜின் நெஸ்புளுஸ் (சே.ச).

**முதல் நான்கு கன்னியர்கள்** : விசுவாசம், வியாகம்மாள், அன்னம்மாள், சவிரியம்மாள்.

**தோற்றம்** : பஞ்சம்பட்டி, 02.02.1899

**நிறுவன அமைப்பு** : மதுரை, 02.07.1911

**மறை மாவட்ட அங்கீகாரம்** : 08.12.1921

**வட்டாரங்கள்** : 25.03.1984 (மதுரை, பரமகுடி, பாளயங்கோட்டை)

**திரு ஆட்சிப்பீட அங்கீகாரம்** : 19.01.1993 திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல்.

மாநிலங்கள் : 1997 ஏப்ரல் (மதுரை, சிவகங்கை, பாளையங்கோட்டை)

**நோக்கம்** : அமலியின் அன்பு வழியில்

**தனிவரம்** : எளிமை அன்பு வழியில் எளியோர்க்கு நற்செய்தி அறிவித்தல்.

**பணிகள்** : கல்விப்பணி, மருத்துவப்பணி, சமூகப்பணி, நற்செய்தி அறிவிப்புப்பணி, பங்குப்பணி மற்றும் சிறப்புப்பணிகள்.

**மறைப்பணித் தளங்கள்** : தென் மற்றும் வட இந்தியா, ஸாம்பியா, தென்ஆப்ரிக்கா, இத்தாலி, இலங்கை, ஜெர்மனி.

**சகோதரிகளின் எண்ணிக்கை** : 795 பேர்கள்

**பயிற்சி நிலையினர்** : 51 பேர்கள்

**இலங்கை மறைப்பணித் தளத்தில் பணிபுரியும் சகோதரிகள்** : 8 பேர்கள்

**கன்னியர் இல்லங்கள்** : 169

**கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்** : 03

**கல்வியியல் கல்லூரி** : 01

**ஆசிரியர் பயிற்சி நிறுவனம்** : 01

**சமுதாயக் கல்லூரிகள்** : 02

செவித்திறன்குறைந்தோர், மனவளர்ச்சி குன்றியோர், பாடசாலை உட்பட **மொத்தப் பாடசாலைகள்** : 80

**மாணவியர் விடுதிகள்** : 38

**பெண்கள் விடுதிகள்** : 11

**வைத்தியசாலைகள்** : 04

**மருந்தகங்கள்** : 19

**சமூகப்பணித் தளங்கள்** : 06

**முதியோர் இல்லங்கள்** : 02

**தெருவோர சிறுவர் இல்லங்கள்** : 02

**நற்செய்திப்பணி மையங்கள்** : 03

**தியான இல்லம்** : 01

**உருவாக்க இல்லங்கள்** : 04

### எம்மோடு இணைந்து செயற்படும் குழுக்கள் :

1. அமலவைத் தோழர்கள் (ஆண், பெண்)
2. நற்செய்திப்பணியாளர்கள் (ஆண், பெண்)
3. அமலவைப் பெண்கள் இயக்கம் (பள்ளி மாணவியர்களுக்கு)
4. அமலவைப் பெண்கள் இயக்கம் (குடும்பப் பெண்களுக்கு)


### எமது சிறப்புப்பணிகள்:

1. உடல் ஊனமுற்றோர்
2. செவித்திறன் குறைவு, வாய் பேசாதவர்
3. மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு சிறப்புப்பள்ளிகள் நடத்துதல், பராமரித்தல்.
4. திருநங்கையர்கள் பராமரிப்பு
5. சிறைக்கைதிகளைச் சந்தித்து அறிவு மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவுதல், அவர்களை ஆற்றுப்படுத்தல்.
6. இலவசமாக கண் மருத்துவம் செய்தல்

*"எளிமை எங்கள் வலிமை, அன்பு எங்கள் ஆற்றல்*
*எளியோர்க்கு நற்செய்தி அறிவித்தல் எங்கள் இலக்கு"*

## தரித்திரத்தின் ரூபம் கொண்ட
# தேவன் வாழ்க

*திருமதி. சுபாஸ்கரன் மேரி சுஜிவா டபரேரா,*
*மறையாசிரியர், முத்தரிப்புத்துறைப் பங்கு*



இன்றைய இருபத்தொராம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞான விருத்தியினால் இறைவனையும், இறை பராமரிப்பையும் கண்டுணர சந்தர்ப்பம் அமைவது சற்றுக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனடிப்படையில் தரித்திரத்தினையே உருவமாகவும், வாழ்வாகவும் கொண்ட மாபரன் இயேசுவைப்பற்றி இங்கு விளக்கிச் சொல்லுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இன்னும் உயிர் வாழும் ஆதவனாக மண்ணில் உதித்த எம் அன்புத் தேவன் இயேசுவின் பிறப்பிலிருந்து இறப்புவரை அவர் தரித்திரத்தையே குறையற நேசித்தவராகக் காணப்படுவது வெள்ளிடைமலை போன்ற வெளிப்படை உண்மையாகும்.

பரமன் இயேசுவின் தாயாக ஏழை மரியாளே தேர்ந்தெடுக்கப்படுகின்றாள். இயேசு பிறப்பதற்கு மாட மாளிகையா, பஞ்சு மெத்தையோ கொடுக்கப்படவில்லை. மாறாக மாட்டுத்தொழுவமதில் வைக்கோல் படுக்கையில் வந்துதித்த அவரது பிறப்பு நிகழ்வே அவர் தரித்திரத்தின் செம்மலாக அவதாரம் எடுத்ததைக் கட்டியம்கூறி நிற்கின்றது.

அடுத்து அவரது வளர்ச்சிப்பருவ நிகழ்வுகளை ஒவ்வொன்றாகப் பார்க்கும்போது அவர் ஏழைகளையும், பாவிகளையுமே அன்பு செய்தார். சாதாரண ஏழைக் குடும்பங்களுடனே நட்புடன் உறவாடினார், உணவைப் பகிர்ந்துகொண்டார். மீனவத்தொழில் புரிந்தவர்களையே பெரும்பாலும் தம் சீடராகத் தேர்ந்தெடுத்தார். இவ்வாறு அவரது வாழ்க்கைப் பதிவுகள் முழுவதுமே தரித்திரத்தினைவிட்டு விலகாத செயற்பாடுகளாக நம்மால் இனங்காண முடிகிறது.

தூய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் கூறுவதுபோல, "கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதாமல் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவம் ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றிய அவர் சாவை ஏற்குமளவிற்கு - அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குத் தம்மையே தாழ்த்திக்கொண்டார்." என அவரது தாழ்ச்சியையும், தரித்திரத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் மிகத்துல்லியமாகக் கூறவிழைகின்றார்.

எனவே அவரது பிறப்பு, வளர்ச்சி, இறப்பு அனைத்துமே துயர் நிறைந்தவையாகவே காணப்படுகின்றது. அங்கு போலிக் கவர்ச்சிகளோ, உலகக் களியாட்டங்களோ, இலௌகீக மாயைகளோ சற்றேனும் காணப்படவில்லை.

இன்றுகூட தரித்திரத்தின் ரூபம் கொண்ட தேவனின் வழிவந்த பல மனிதர்களை நாளாந்தம் நம் வாழ்வில் சந்திக்கின்றோம். இறைவனுக்காகவே தம்மை முழுமையாக அர்ப்பணித்த துறவற சபைகள் நம் மத்தியில் ஏழ்மையின் இலக்கணமாகக் காட்சி தருகின்றன.

ஏழ்மை, தரித்திரம், கற்பு எனும் வார்த்தைப்பாடுகளை கொண்ட திருக்குடும்பக் கன்னியர் சபையினர், தம் ஆயுள் முழுவதும் ஏழைகள், அனாதைகள், நோயாளர்களுடன் தம் வாழ்வையே இணைத்துக்கொள்ளும் அன்னை திரேசா துறவற சபையினர் மற்றும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் எனக் கூறிக்கொண்டே போகலாம். இவர்கள் முழுவதுமாக தியாக சிந்தையுடன் கடவுளுக்காகத் தம்மை அர்ப்பணித்து யேசுவை முன்மாதிரிகையாகக் கொண்ட தவமுயற்சிகளிலும், தியானங்களிலும், ஒறுத்தல்களிலும் யேசுவைப்போல தரித்திரத்தை வாழ்வாகக்கொண்டு வாழ்ந்துவருவது மனிதம் இன்னும் இம்மண்ணில் நிலைத்திருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

இயேசுவின் தரித்திரத்தைப்பற்றி அலசும்போது இன்னுமொரு விடயமும் மறக்கமுடியாமல் நம் மனக்கண்முன்னே நிழலாய் விரிகிறது. தமிழினத்துக்காய் தமிழின் விடிவிற்காய் போராடி விதைக்கப்பட்ட வித்துக்கள்கூட தரித்திரத்தை மட்டுமே வாழ்வாக வாழ்ந்து மரணித்துப் போனவர்கள்தான். இயேசுபிரான் மக்களை அன்புசெய்து, அவர்களை மீட்பதற்காக அடிமையின் சின்னமாகச் சிலுவையைச் சுமந்து, நமக்கு மீட்பைப் பெற்றுத்தந்தது போலவே தமிழினத்தின் விடிவிற்காய் போராடி இரத்தப்பலியாகிய எம் உறவுகள்கூட தரித்திரத்தின் ரூபம் கொண்ட தேவனையே நமக்கு நினைவுபடுத்துகின்றனர்.

எனவே தரித்திரத்தின் ரூபமான எம் அன்பு இயேசு அவனியில் ஆடம்பரத்தை அடியோடு விட்டொதுக்கி அமைதியின் தூதனாய் அன்னை மரியின் மடியில் அன்பு மகனாய் வந்து பிறந்தார். அவர் எம் பாவம் போக்க, தரித்திரத்தின் தக்க மகனாய் தரித்திரத்தின் மொத்த ரூபமாய் வந்து பிறந்து, வாழ்ந்து, இறந்து, உயிர்த்தார்.

நாமும் அவர்வழி சென்று ஆடம்பரத்தையும், பகட்டு வாழ்வையும், பக்குவமாகக் கிள்ளி எறிந்து, ஆன்மீகப் பயணத்தில் பக்தியோடு வீறுநடை பயின்று விசுவாச வாழ்வில் இறுதிவரை நிலைத்திருப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகத் திருச்சபைச் செய்திகள்**

# திருத்தந்தையின் ஆபிரிக்கப் பயணம்!

## மூன்று நாடுகளுக்கான ஆறு நாள் பயணம்



பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு மத்தியில் உலகில் பல நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் பாதுகாப்பை வலுப்படுத்திவரும் இந்நாள்களில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அமைதி மற்றும் ஒப்புரவுச் செய்தியுடன் வன்முறைகளால் பாதிக்கப்பட்டுள்ள கென்யா, உகாண்டா, மத்திய ஆபிரிக்கக் குடியரசு ஆகிய ஆபிரிக்க நாடுகளுக்கு தனது 11வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணத்தை கடந்த 24.11.2015 அன்று தொடங்கினார்.

அரசு மற்றும் திருஅவை அதிகாரிகள் வழியனுப்ப, விமானப் பணியாளர்களைக் கைகுலுக்கி, வழக்கம்போல தனது கறுப்புநிறப் பையுடன் A 330 ஆல் இத்தாலியா விமானத்தில் திருத்தந்தை ஏறினார். உள்ளூர் நேரம் காலை 7.45 மணிக்கு விமானம் கென்யா நாடு நோக்கிப் புறப்பட்டது.

தான் வழியில் கடந்து சென்ற கிரீஸ், எகிப்து, சூடான், மற்றும் எத்தியோப்பியா நாடுகளின் அரசுத் தலைவர்களுக்கு செபமும், நல்வாழ்த்தும் நிறைந்த தந்திச் செய்திகளையும் திருத்தந்தை அனுப்பினார். 7.00 மணி 15 நிமிடங்கள் கொண்ட இந்த விமானப் பயணத்தில் தன்னோடு பயணம் செய்த பன்னாட்டு பத்திரிகையாளர்களை ஒவ்வொருவராகக் கைகுலுக்கி வாழ்த்தினார். கென்யத் தலைநகர் நைரோபியின் Jomo Kenyatta அனைத்துலக விமான நிலையத்தை திருத்தந்தை சென்றடைந்தபோது உள்ளூர் நேரம் மாலை 5 மணியாகும்.

விமான நிலையத்திலிருந்து 19 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற அரசு மாளிகைக்கு திருத்தந்தை காரில் சென்றபோது, வழியெங்கும் ஆரவாரத்துடன் மக்கள் அவரை வரவேற்றனர்.

நைரோபி அரசு மாளிகையில் 21 துப்பாக்கிகள் முழங்க அரச வரவேற்பைப் பெற்றார் திருத்தந்தை.

ஆறு நாள்களைக் கொண்டதான இந்த 11வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணத்தில் கென்யா, உகாண்டா, மத்திய ஆபிரிக்க குடியரசு ஆகிய மூன்று நாடுகள் ஒவ்வொன்றிலும் திருத்தந்தை இரு நாள்கள் செலவிட்டார். இத்திருத்தூதுப் பயணத் திட்டங்களை நிறைவுசெய்து நவம்பர் 30ஆம் திகதி திங்களன்று உரோம் நேரம் மாலை 6.45 மணியளவில் திருத்தந்தை பிரான்சிஸ் உரோம் வந்து சேர்ந்தார்.

## கடவுள் பேசுகின்ற ஒரு புத்தகமாக விவிலியத்தை வாசிக்க வேண்டும்

### – திருத்தந்தை –

திருவிவிலியத்தை தலைசிறந்த ஓர் இலக்கியப் படைப்பாக நோக்காமல், கடவுள் பேசுகின்ற ஒரு புத்தகமாக நோக்கி அதனை வாசிக்க வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் இளையோரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இளையோருக்கென ஜேர்மன் மொழியில் கடந்த ஒக்ரோபரில் பிரசுரமான திருவிவிலியத்தின் புதிய பதிப்பிற்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய அணிந்துரைப் பகுதியின் இத்தாலிய மொழி பெயர்ப்பு Civilta Cattolica என்ற இயேசு சபை மாத இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

உண்மையான இறைமைச் செய்தியைக் கொண்ட திருவிவிலியத்தில் கடவுள் பேசுகிறார் என்ற உணர்வுடன் வாசிக்க வேண்டும். இது புத்தக அலுமாரியில் வைக்கப்பட வேண்டிய புத்தகமாக எழுதப்படவில்லை என்று திருத்தந்தை இளையோரிடம் கூறியுள்ளார்.

தொடக்ககாலத் திருஅவையில் துன்புறுத்தப்பட்டதைவிட இக்காலத்தில் இன்னும் அதிகமாகக் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர் என்றும், விவிலியம் சில நாடுகளில் ஆபத்தான புத்தமாக உள்ளது, அந்நாடுகளில் விவிலியத்தை வைத்திருப்பவர்கள் தங்கள் அறைகளில் ஏதோ வெடிகுண்டுகளை மறைத்து வைத்திருப்பவர் போன்று நடத்தப்படுகின்றனர் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் எழுதியுள்ளார்.

இளையோரே, நீங்கள் எனது விவிலியத்தைப் பார்த்தீர்களானால் அது உங்கள் கவனத்தை ஈர்க்காது. "இதுவா திருத்தந்தையின் விவிலியம்?" என்றுகூட நீங்கள் கேட்கலாம். அவ்வளவு பழையதாக, கிழிந்த புத்தகமாகத் தெரியும். ஆயிரம் யூரோக்கள் விலையுடைய ஒரு புதிய விவிலியத்தை ஏற்க மாட்டேன்; நான் எனது விவிலியத்தை அன்புகூர்கிறேன். இது எனது மகிழ்வு மற்றும் கண்ணீரால் நனைந்துள்ளது. இது எனது விலைமதிப்பற்ற சொத்து என்றும் திருத்தந்தை எழுதியுள்ளார்.

மகாத்மா காந்தி அவர்கள் விவிலியம்பற்றிச் சொன்னபோது, அனைத்துக் கலாச்சாரங்களையும் தூள் தூளாகத் தகர்ப்பதற்குப் போதுமான வெடிமருந்தைக் கொண்டிருக்கும் ஓர் ஏட்டை கிறிஸ்தவர்களாகிய நீங்கள் ஓர் இலக்கியம் போன்று நோக்குகின்றீர்கள் என்று கூறியதைக் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கத்தோலிக்க திரு அவைக்கு இளையோர் திருவிவிலியம் என்ற தலைப்பில் ஜெர்மன் மொழியில் வெளியாகியுள்ள புதிய பதிப்பில் திருத்தந்தை எழுதியுள்ள அணிந்துரை பிற மொழிகளில் 2016ம் ஆண்டில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மும்பாய் தேசிய நற்கருணை மகாநாட்டில் நடைபெற்ற அற்புதம்

அண்மையில் இந்தியாவில் உள்ள மும்பாயில் நடைபெற்ற தேசிய நற்கருணை மாநாட்டின் இறுதியில் நடைபெற்ற திருப்பலியில் திருத்தந்தையின் பிரதிநிதியாகக் கலந்து சிறப்பித்த கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர் கர்தினால் அதிமேதகு மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை சென்றிருந்தார்.

இந்நிகழ்வில் பங்கேற்ற 81 வயதான அருட்பணி. மைக்கல் மார்டிர்ஸ் இயேசுவின் பிரசன்னத்தை தன்னில் உணர்ந்ததோடு தனது நோயில் இருந்து குணமாக்கப்பட்டதையும் உணர்ந்துள்ளார். இவர் கடந்த 2 மாதங்களாக இரத்தக்கொதிப்பு நோயினால் துன்பப்பட்டு ஒவ்வொரு நாளும் புனித எலிசபெத் வைத்தியசாலைக்குச் சென்று வருவது வழக்கம். அவரால் நித்திரை கொள்வதுகூட கடினமாக இருந்தது.

அவர் நற்கருணை மாநாட்டுத் திருப்பலியில் கலந்துகொண்டிருந்த வேளையிலே இந்த அற்புதம் நடைபெற்றிருக்கின்றது. இந்த அற்புதமானது எம்மாவுஸ் சீடர்கள் அப்பத்தைப் பிட்டு உண்ணுகையிலேதான் இயேசு யார் என்பதை உணர்ந்து கொண்டார்கள். அதேபோன்று தான் இவரும் இயேசுவின் தொடுகையையும், குணமாக்கலையும் உணர்ந்திருக்கின்றார்.

இதன் பிற்பாடு இவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் இவர் பூரணமாகக் குணமாகி இருக்கின்றார் என்றும் இதற்கு வைத்தியர்களின் முயற்சி அல்ல மாறாக. ஏதோ அற்புதம் நிகழ்ந்திருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

*தமிழில் அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்*

## மூளைக் கட்டியால் பாதிக்கப்பட்டிருந்த குழந்தை குணமடைந்த அதிசயம்

அமெரிக்க பென்சில்வேனியா மாநிலத்தைச் சேர்ந்த ஒரு வயதுக் குழந்தையொன்றுக்கு ஏற்பட்டிருந்த உயிராபத்தான மூளைக் கட்டி பாப்பரசர் பிரான்சிஸ் தலையில் முத்தமிட்டு ஆசீர்வாதமளித்ததையடுத்து அதிசயிக்கத்தக்க வகையில் குணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த செப்டெம்பர் மாதம் அமெரிக்க பிலடெல்பியா பிராந்தியத்துக்கு விஜயம் செய்து, ஊர்வலமாகச் சென்றபோது குறிப்பிட்ட கியன்னா என்ற சிறுமியின் தலையில் முத்தமிட்டு ஆசீர்வாதமளித்திருந்தார்.

இந்நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் பாப்பரசர் வருவதற்கு முன்பு மேற்படி குழந்தையின் மூளையை எம்.ஆர்.ஐ. ஊடுகாட்டும் கருவிப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது எடுக்கப்பட்ட படங்களுடன் ஒப்பிடுகையில் இந்த நவம்பர் மாதம் எடுக்கப்பட்ட படங்களில் அந்தக் குழந்தையின் மூளைக் கட்டியின் அளவு கணிசமான அளவில் குறைந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது அந்தக் குழந்தையின் உடல்நலம் ஆரோக்கிய நிலைக்குத் திரும்பியுள்ளதாக அந்தக் குழந்தையின் தாயான கிறிஸ்டன் மஸ்சியன் தோனியோவும் தந்தையான ஜோயும் தெரிவித்தனர்.

பாப்பரசர் தமது குழந்தையின் தலைமையில் முத்தமிட்டதாலேயே இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

கியன்னாவுக்கு ஏற்பட்டிருந்த மூளைக் கட்டியை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றுவது சாத்தியதில்லை என மருத்துவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆப்ரிக்கப் பயணத்தின் இறுதித் திருப்பலியில் திருத்தந்தையின் மறையுரை

திருத்தந்தை பிரான்சிஸ் தனது ஆபிரிக்கப் பயணத்தின் நிறைவுத் திருப்பலியை பாங்கி நகரின் Barthelemy Boganda விளையாட்டுத்திடலில் நிறைவேற்றினார். அங்கு அவர் வழங்கிய மறையுரையின் சாரம் :

துயரங்களும், போராட்டங்களும் நிறைந்து, எதிர்காலம் உறுதியில்லாததுபோல் தோன்றும் வேளைகளில், இறைவனின் பிரசன்னத்தில் கூடிவருவது ஆறுதல் தருகிறது. "மறுகரைக்குச் செல்வோம் வாருங்கள்" என்று இறைவன் நம்மை அழைக்கிறார் (காண்க. லூக்கா 8:22).

நாம் இன்னும் நமது இலக்கை அடையவில்லை. நம் பழைய பாவநிலையை விடுத்து, புதுவாழ்வை நோக்கிச் செல்ல தொடர்ந்து அழைக்கப்படுகிறோம்.

புனிதம் நோக்கிச் செல்லும் பாதையில் கிறிஸ்தவ சமுதாயம் இன்னும் நெடுந்தூரம் செல்லவேண்டியுள்ளது என்பது நமக்குத் தெரியும். உங்கள் நாட்டில் துவங்கியுள்ள இரக்கத்தின் யூபிலி, இந்த ஒப்புரவுப் பயணத்தை மேற்கொள்ள உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு வாய்ப்பு.

மறுகரை அருகில் உள்ளது. இயேசு நம்முடன் இருக்கிறார். மத்திய ஆப்ரிக்க கிறிஸ்தவர்களே, நம்பிக்கையில் உறுதியாக நிலைத்து, உங்கள் நாட்டின் மறுமலர்ச்சிக்கு உழைக்க நீங்கள் அழைக்கப்பட்டுள்ளீர்கள்.

# புனிதர்களின் பாதையில்

## புனித தோமஸ் பெக்கட்

*ஆயர், மறைசாட்சி*

*(கி.பி. 1119 - 1170)*



**மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்**

இலண்டனில் ஒரு வாணிகரின் குடும்பத்தில் தோமஸ் பிறந்தார். சொந்த நகரிலும் பாரிசிலும் பயின்றார். இவர் இளவரசனின் தோழராக விளங்கினார். தோழனே, அரசன் 2ஆம் ஹென்றியான பிறகு அரசவையில் துணைவேந்தராக உயர்வுபெற்றார். கி.பி 1126ஆம் ஆண்டு கான்டர்பரி பேராயரானார். அப்போதுமுதல் திருச்சபையின் நிர்வாகத்தில் அரசனுக்கு இடமே இல்லை என்ற கொள்கையை நிலைநாட்டினார். கோயிலின் சொத்துக்களை மன்னன் தொடக்கூடாது என்றார். அதனால் சிறையிலிடப்பட்டு, நாடு கடத்தவும்பட்டார். இறந்தபின் 3 ஆண்டுகளில் இவருக்கும் புனிதர் பட்டமும் அளிக்கப்பட்டது. இவரது கல்லறை புகழ்வாய்ந்த திருத்தலமாகவும் மாறியது. இவரைக் கொல்லச் சதிசெய்த அரசனே இவரது கல்லறைக்குத் திருப்பயணமாக வந்து பரிகாரம் செய்தான்!

பேராயராக நியமனம் பெற்றதும் துணைவேந்தர் பதவியை வேண்டாமெனத் தள்ளிவிட்டார். ஹென்றி அரசன் மீண்டும் மீண்டும் ஆலயக் கடமைகளில் தலையிடத் தொடங்கவே, வாக்குவாதம் முற்றியது. பிரான்சுக்குப் போய்விட்டார். மீண்டும் அழைக்கப்பட்டுத் திரும்பிவந்தார். இந்நிலையில் ஒருமுறை அரசன், "இந்தத் தொல்லை பிடித்த குருவை ஒழித்துக்கட்ட யாருமில்லையா?" என்று முழங்கினான்.

இதைக் கேட்ட படை அலுவலன் ஒருவன் கோயிலில் திருப்பலி நிறைவேற்றிக்கொண்டிருந்த தோமசை வெட்டி வீழ்த்தினான்.

பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்த இறுதி நாட்களில் தம் பழைய பாவங்களை நினைத்துக் கடுந்தவம் புரிந்தார். இவர் கொல்லப்பட்டு இரத்த வெள்ளத்தில் வெட்டுண்டு மரமாகக் கிடந்தபோது இவர் பயன்படுத்திய முள் ஒட்டியாணம், முன்பு இருந்தே இவரது உடலைக் குத்திக்கொண்டிருந்த நிலையில் பிரித்தெடுக்கப்பட்டது.

"இயேசுவின் பெயரைக் குறித்தும், திருச்சபையின் பாதுகாப்பை முன்னிட்டும் நான் சாவைப் பெற்றுக்கொள்கிறேன்" பணிப்பொறுப்பை ஏற்கும் முன்னால் இவர் கூறியது, "ஹெர்பர்ட்! இதுமுதல் உமது வேலை என்னவெனில், மக்கள் என்னைப்பற்றி என்ன குறை கூறுகிறார்கள் என்பதைக் கேட்டு என்னிடம் சொல்ல வேண்டும். நீரும் என்னிடம் குற்றம் கண்டுபிடித்தால் இதையும் என்னிடம் கூற வேண்டும். ஏனெனில் இனிமேல் மக்கள் என்னிடம் கூறமாட்டார்கள். ஆனால் என்னைப் பற்றிக்கூறுவார்கள்." தம்மையே திருத்திக்கொள்வதற்காகத் தாழ்ச்சியினால் இவ்வாறு இப்புனிதர் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக் கூறல் இல்லாமல் நல்லிணக்கம் சாத்தியமில்லை!

**புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், யாழ் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வரும் உலகத் தமிழர் பேரவையின் தலைவருமான**

## அருட்தந்தை எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளாருடனான செவ்வி



"உண்மையான நல்லிணக்கத்தை அடைவதற்குப் பொறுப்புக்கூறலும், உண்மையும் நீதியும் தவிர்க்க முடியாத படிகளாகும். பொறுப்புக்கூறல் இன்றி ஒருவரால் நல்லிணக்கத்தை நோக்கி நடைபோட முடியாது. போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி தேவை"

இவ்வாறு உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் தெரிவித்தார். பழைய சம்பவங்களை மூடிமறைத்து அல்லது நடந்த துயரங்களின் உண்மைக்கு முகம்கொடுக்கப் பயந்து நடப்பவர்கள் தப்பிக்கொள்ள முயல்பவர்களாகவே நோக்கப்படுவர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மின்னஞ்சல் மூலமாக உதயன் நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில் அவர் தெரிவித்ததாவது:

**நீங்கள் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?**

2014இல் வந்த எனது 60ஆவது பிறந்த நாளுடன் ஜேர்மனியிலுள்ள மியூயென்ஸ்டர் என்ற மறைமாவட்டத்தில் எனது திருச்சபைப் பணிகளிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டேன். 1983முதல் இரு வருடங்கள் மியூயென்ஸ்டர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இருந்தேன். 1997 தொடக்கம் நேரடியாகவும் வெளியில் இருந்துகொண்டும் ஹேக்ன்பேர்கில் பத்து வருடங்கள் போதகராகவும் பின்னர் கடந்த எட்டு வருடங்களாக பிரித்தானியாவிலுள்ள தேவாலயம் ஒன்றில் உதவியாளராகவும் இருந்துவருகிறேன்.

திருச்சபைப் பணிகளுக்கு மேலதிகமாக நான் பல்வேறு ஊடகங்கள் மூலம் தொடர்புகொண்டு பொதுவாக இலங்கையில், குறிப்பாக, தமிழ் மக்களுக்கு என்ன நடக்கிறது என்பதை ஆராய்ந்து வருகின்றேன். சர்வதேச மட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பில் நடந்துவரும் அரசியல் முன்னேற்றங்களை அவதானித்து வருகின்றேன். உலகத் தமிழ்ப் பேரவையின் தலைவர் என்ற முறையில் இலங்கையிலுள்ள தமிழர்களின் நிலைமை தொடர்பில் உலகம் முழுவதும் பரந்துள்ள புலம்பெயர்ந்த தமிழர்களின் நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் அவதானித்து வருகின்றேன்.

இலங்கைத் தேர்தலின்பின் அரசில் ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து உலகப் பேரவையின் சார்பில் நாங்கள் இலங்கை அரசுக்கு ஆதரவு திரட்டி வருகின்றோம். புதிய ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சரும் எங்களை ஒரு சந்திப்புக்கு அழைத்து நான் நாட்டில் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். என்னால் எப்போது வரமுடியுமென அவர்கள் வினவியபோது, எனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள பொய்களும், போலிக்குற்றச்சாட்டுக்களும், தடைகளும் களையப்பட்ட பின்னரே எனது பயணத்தைப்பற்றித் தீர்மானிக்க முடியும் எனவும் உண்மை, நீதி, நல்லிணக்கம் ஆகியவற்றிற்கு எனது பங்களிப்பு உண்மையிலேயே முக்கியம் வாய்ந்தது எனக் கருதப்பட்டால் மட்டுமே என்னால் இலங்கைக்கு வரமுடியுமெனவும் கூறியிருக்கின்றேன்.

தற்சமயம் இலங்கை அரசு ஜெனிவாத் தீர்மானத்தின் சவால்களையும் உள்நாட்டிலுள்ள தமிழ்க் கைதிகளது கோரிக்கைகளையும் சந்திக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நான் அரசின் முயற்சிகளையும், சிங்கள அரசியல் தலைமைகளினது நிலைப்பாடுகளையும் உன்னிப்பாக அவதானித்து வருகிறேன். அதன் பிரகாரம் எனது உதவிகளை தொலைபேசி மூலமாக தேவைப்படும்போது தருவேன்.

**நீங்கள் இலங்கையைவிட்டு எப்போது சென்றீர்கள்? ஏன்?**

1967 தொடக்கம் 1996 வரை நான் பங்குத்தந்தையாக, பேராசிரியராக, அதிபராக மற்றும் குருமுதல்வராக என கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் பல்வேறு பதவிகளை வகித்திருக்கிறேன். ஒக்ரோபர் 1995இல் ஐந்து இலட்சம் மக்கள் யாழ் குடாநாட்டிலிருந்து வெளியேறிய அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவத்தில் அவர்களுடன் நானும் இருந்தேன்.

1996ஆம் ஆண்டில் ஐக்கிய இராஜ்ஜியத்துக்கு 6 மாதம் விடுப்பில் வந்தேன். எனினும், கொழும்பு ஊடகங்கள் நான் ஒரு விடுதலைப்புலிகள் ஆதரவாளன் எனப் பொய்க்குற்றஞ்சாட்டித் தங்களது பரபரப்புக்களைத் தொடர்ந்தன.

1986வரை கண்டியில் சிங்கள, தமிழ் கிறிஸ்தவக் குருமட மாணவர்களுக்குக் கற்பிக்கும் பேராசிரியராகப் பணி புரிந்தேன். 1986 முதல் நான் துயரப்பட்ட மக்களின் நேரடிச் சாட்சியாகிப் பாதிக்கப்பட்டவன் என்ற முறையிலும், சாட்சியாளன் என்ற முறையிலும் அவர்களுக்காகக் குரல் கொடுத்தேன். யாழ் புனித ஜேம்ஸ் தேவாலயம், நவாலி புனித பீற்றர்ஸ் தேவாலயம், நாகர் கோயில் பாடசாலை போன்றவற்றின்மீது குண்டுத் தாக்குதல்கள் நடந்தபோது நான் ஒரு குருமுதல்வராக அவர்கள் சார்பில் குரல் கொடுத்தேன். மற்றவர்கள் அச்சத்தால் மௌனிகளாக இருந்தார்கள். எனது இந்தச் செயற்பாடுகள் அனைத்தையும் வைத்துக்கொண்டு நான் ஒரு புலி ஆதரவாளன் எனவும் அரசுக்கு எதிரானவன் எனவும் திரித்துக் கூறப்பட்டது.

எந்தவொரு தமிழ்த் திருச்சபைத் தலைமையும் அச்சமயத்தில் என்னை காப்பாற்ற வரவில்லை. அதன்பின் சிங்கள ஆயரான (இப்போது கருதினால்) மல்க்கம் ரஞ்சித், ஆயர்கள் மாநாட்டுச் செயலாளர் என்ற ரீதியில் எனது கருத்துக்கள் திருச்சபையின் கருத்துக்கள் அல்ல என்று ஒரு பத்திரிகை அறிக்கையை வெளியிட்டார். அதன்மூலம் நான் திருச்சபையிலிருந்து தள்ளிவைக்கப்பட்டேன். திருச்சபை ஒரு புறமும், அரசும் ஒருபுறமும் என்மீது இவ்வாறான பொய்க்குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசியதால் நான் வெளிநாட்டிலேயே தொடர்ந்து தங்க முடிவு செய்தேன்.

**உங்களது அமைப்பு தமிழர் பிரச்சினைக்காக முன்வைக்கும் தீர்வு என்ன?**

முள்ளிவாய்க்கால் அசம்பாவிதத்தின்பின் பல நாடுகளின் வலையமைப்புடன் உருவானதே உலகத் தமிழர் பேரவை. இலங்கையிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகளுடன் இணைந்து இனமுரண்பாட்டுக்கான தீர்வொன்றைப்பெற முயல்கின்றோம். எல்லாத் தமிழ் அமைப்புக்களையும் ஒரு பொதுவான இலக்கை நோக்கி நகர்த்துவதற்காகவும், இலங்கையிலுள்ள முற்போக்கு சிங்கள சக்திகளுடன் தொடர்பாடல்களை முன்னெடுக்கவும், தமிழர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதியையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துவதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கான மனிதாபிமானத் தேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் என நான்கு முனைத்திட்டங்களை வகுத்து உலகத் தமிழர் பேரவை செயற்பட்டு வருகின்றது.

தற்போது புதிய அரசு மேலும் சிறந்ததொரு எதிர்காலத்துக்கான சமிக்ஞைகளைக் காட்டிவருவதுடன் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் போன்றவற்றை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாலும், நாங்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து நம்பிக்கையுடனும், அதே சமயம் எச்சரிக்கையுடனும் இன முரண்பாட்டிற்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ளவும், அதன் மூலம் நல்லிணக்கத்தை எட்டவும் முயற்சிசெய்து வருகின்றோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒருமுறை அறிவித்ததைப்போல ஐக்கிய இலங்கைக்குள் சகல மக்களும் சமமாக நடத்தப்படுகிறதும், தமிழர்கள் தாங்களே தங்களை ஆண்டுகொள்வதற்கான அதிகாரம் வழங்கப்படுவதுமான தீர்வு ஒன்றே எங்களது எதிர்பார்ப்பாகும்.

**இந்த இலக்கை எட்டுவதற்குப் புலம்பெயர்ந்த தமிழர்கள் எவ்வாறு உதவமுடியும்?**

உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் இதில் நிறையப் பங்களிப்புக்களை வழங்க முடியும். முதலில் தாய்நாட்டில் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் தங்களது உறவுகளுக்கு பொருளாதார ரீதியிலும் ஏனைய வழிகளிலும் அவர்களால் உதவமுடியும்.

ஏராளமானவர்கள் பேசுவதும், விமர்சிப்பதும் மற்றவர்களின் சொகுசுகளைப்பற்றி குறைகூறுவதுமாகக் காலத்தைக் கழிக்கின்றார்களே தவிர எவ்வித உதவியையும் செய்வதில்லை. தாய் நாட்டிலுள்ள, பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவது எமது கடமையாகும். அதன் மூலமே நாம் எமது மக்களுக்கான உண்மையான ஆதரவாளர்கள் என்பதைக் காட்ட முடியும்.

இரண்டாவதாக சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புக்களுக்கு அமைவாகத் தத்தமது நாடுகளிலுள்ள அமைப்புக்கள் மூலம் சம்மந்தப்பட்ட அரசுகள் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கான நீதி, நியாயம், பொறுப்புக்கூறல் போன்ற கடமைகளைச் சரியாகச் செய்யவேண்டுமென அவர்கள் நிர்ப்பந்தம் செய்ய வேண்டும். இலங்கைத் தமிழர்கள் தங்களது உரிமைகளுக்காகப் போராடி வருவதால் புலம்பெயர்ந்த அமைப்புக்கள் அவர்களது முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் முகவர்களாகச் செயற்பட முடியும்.

**இலங்கையில் நியாயமானதொரு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் காணப்படும் பிரதான தடைகள் யாவை?**

கடந்த 60 வருடங்களாக நடந்துவரும் இன முரண்பாட்டிற்கு நேர்மையான வழியில் உண்மையைக் கண்டறிவதே நல்லிணக்கத்திற்கான சரியான வழியாகும். சட்டத்தைத் தைரியமாக எதிர்கொண்டு, குற்றமிழைத்தவர்களை இனங்கண்டு, பழிவாங்கும் தண்டனைகளை விலக்கி, அத்தகைய குற்றச்செயல்கள் மீண்டும் நிகழாமல் பார்த்துக்கொண்டு, போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்டரீதியாக சரியான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதே முதன்மையானதும் முக்கியமானதுமான கடமையாகும்.

அரசியல்வாதிகள் தங்களது சுயநலத்துக்காகப் பரப்பிவரும் பொய்ப்பரப்புரைகளும், தப்பபிப்பிராயங்களுமே நல்லிணக்கத்துக்குப் பெரும் இடையூறுகளாக இருக்கின்றன. வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழ்மக்கள் தெற்கிலுள்ள பெரும்பான்மையினருக்கு ஓர் அச்சுறுத்தல் இல்லை. எனினும் தமிழ் நாட்டிலுள்ள ஆறுகோடி தமிழர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழர்களுடன் சேர்ந்து இலங்கையிலுள்ள சிங்கள பௌத்தர்களை முன்னேற விடமாட்டார்கள் என்ற தவறான அபிப்பிராயம் நிலவி வருகின்றது. அதன் காரணமாக சிங்களப் பெரும்பான்மையினரும் அவர்களது அரசுகளும் தமிழர்களை அச்சுறுத்தி அவர்களை இரண்டாம்தரக் குடிமக்களாக்கி அவர்களது மொழி, கல்வி, தொழில் வாய்ப்புக்கள் மற்றும் ஆளுமை போன்ற விடயங்களில் படிப்படியாக பாகுபாடு காட்டிவந்துள்ளன.

சுருக்கமாகக் கூறப்போனால் தமிழ் மக்கள் பெரும்பான்மையினரின் முக்கிய எதிரிகளாகக் கருதப்படுகிறார்கள். தமிழர்கள் எவ்வாறு நீதிக்குப் புறம்பான வழிகளில் பாகுபடுத்தப்பட்டார்கள்? அவர்கள் அரசின் பயங்கரவாதத்திற்கு எதிரான ஆயுதங்களை ஏந்த வேண்டியதற்கான காரணங்கள் என்ன? என்பதை சிங்கள அரசியல்வாதிகளும் ஏனைய தலைமைகளும் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறவேண்டும்.

புதிய அரசின்கீழ் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் நேர்மையான, சகலருக்கும் பொதுவானதுமான வழியில், ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, பல்வேறு சமூகங்களுக்கிடையில் சமாதானத்தைக் கட்டியெழுப்ப இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**இலங்கைக்கான உங்களது பயணத்தின் மூலம் நீங்கள் சாதிக்க விரும்புவது என்ன?**

எனது பயணத்தில் பெரிதான எதிர்பார்ப்போ இலட்சியமோ என்னிடமில்லை. நான் இங்கிருந்துகொண்டு ஊடகங்கள் மூலம் செய்ய முயல்வதை அங்கு நேரடியாக, தீவிரமாகச் செய்ய முடியுமென நினைக்கின்றேன். நான் வயது முதிர்ந்த கத்தோலிக்க குரு என்ற முறையில் பல திருச்சபைத் தலைவர்களுக்கும் எனது முன்னாள் குருமாணவர்களுக்கும் நன்கு பரிட்சயம் உள்ளவன். எனது கடந்தகால அனுபவங்களைக்கொண்டு அனைத்துத் தரப்பினரையும் நல்லிணக்கத்தைநோக்கி முன்னேற வலியுறுத்த முடியும்.

தமிழர்கள் உண்மையைக் கண்டறியவும் நீதி, பொறுப்புக்கூறல் போன்றவற்றை பழிவாங்கும் நோக்கில்லாமல் முன்னெடுத்துச் செல்லவும், அதன் மூலம் நல்லிணக்கத்தை நோக்கி அடியெடுத்து வைக்கவும் முயலவேண்டும்.

நீண்டகாலமாக வேரூன்றி நிற்கும் இன முரண்பாட்டைப்பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ளவும், விசுவாசத்துடன் நீதியின் வழியில் பொறுப்புக்கூறலைத் தைரியமாக முன்னெடுத்துச் செல்லவும் சிங்கள சமுதாயம் செயற்படவேண்டும். இத்தகைய படிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நாம் அனைவரும் உறுதியானதொரு அத்திவாரத்தின்மீது நின்று, அமைதியான நிலைப்பாட்டின்கீழ் பல்லின, பல்மத, ஒற்றுமைகொண்ட சமூகத்தைக் கட்டியெழுப்பமுடியும்.

**தற்போதைய அரசு பற்றி உங்களது மதிப்பீடு என்ன?**

அரசையும், அரசியல்வாதிகளையும்பற்றி நாம் பேசும்போது அவர்கள் அனைவருமே உண்மை, நீதி, சமாதானம் போன்றவற்றில் உண்மையான அக்கறை கொண்டவர்களாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடாது. சுயநலமும், கட்சி அரசியலும் கொடிகட்டிப் பறந்துகொண்டிருக்கின்றன. முன்னைய அர்சுகளுடன் ஒப்பிடும்போது தற்போதைய அரசு, கடந்தகாலத்தில் ஒன்றுக்கொன்று விரோதமாக இருந்த இரு கட்சிகளின் கூட்டிணைவில் உருவாகியதாகும். இதனால் மிதவாதத்தன்மை கொண்ட நிலையில் உண்மையைக் கண்டறிவதற்கு ஓரளவு சந்தர்ப்பம் உள்ளது.

மகிந்தவின் அரசுடன் ஒப்பிடும்போது இந்த அரசுக்கு, சிங்கள மயப்படுத்துவதன் மூலமோ பௌத்த மயப்படுத்துவதன் மூலமோ தமிழர்களை வேருடன் களைய வேண்டுமென்ற நோக்கம் கிடையாது. தமிழர்களாகிய நாமும் சுயநலம்\அல்லது கட்சி அரசியலில் இருந்து விடுபட்டவர்கள் அல்ல. எனினும் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்க்கட்சியாக இருந்துகொண்டு (முக்கியமான கூட்டிணைப்பு) அரசுடன் ஒத்துழைத்துச் செல்வது சரியான பாதையாகத் தெரிகிறது.

புதிய அரசு மகிந்த அரசினதும், சிங்களத் தீவிரவாதிகளினதும் சவால்களுக்கு முகம்கொடுக்கத் தயாராக உள்ளது. எனவே, அவர்கள் தென்பகுதியின் சவால்களுக்கு முகம் கொடுக்கவும் எமது தேவைகளை வென்றெடுப்பதற்கும் எம்மாலான முழு ஒத்துழைப்பை வழங்கவேண்டிய அவசியம் இருக்கின்றது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலாகலமாக இடம்பெற்ற யாழ் திருமறைக்கலா மன்றத்தின் பொன்விழா

திருமறைக் கலாமன்றத்தின் பொன்விழாவையொட்டி மூவின மக்களும் கலந்துகொண்ட நடைபவனி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இருந்து நகரின் முக்கிய வீதி வழியாக திருமறைக்கலாமன்றத்தின் அரங்கைச் சென்றடைய மன்றத்தின் பொன்விழா கோலாகலமாக ஆரம்பமானது. கடந்த 03.10.2015 தொடக்கம் 04.10.2015 ஆகிய இரண்டு தினங்கள் இடம்பெற்ற இந்த விழா தமிழ் மக்களின் கலைகளை மட்டுமன்றி நாட்டின் மூவின மக்களின் கலைப் பாரம்பரியங்களையும் வெளிப்படுத்தும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

யாழ் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். இந்து சமயத்துக்கான பரதம் போன்ற கலைகளையும் ஏனைய மக்களின் கலைகளையும் உலகெங்கும் எடுத்துச்சென்று பெருமைப்படுத்திய திருமறைக்கலாமன்றம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக எல்லா மக்களையும் ஒன்றுபடுத்திய பெருமையையும் தனதாக்கிக்கொண்டது. போர் நிகழ்ந்த பிரதேசத்தில் மக்கள் அதன் தாக்கங்களில் இருந்து தம்மை விடுவிக்கக்கூடியதான புதிய கலைகளைக் காட்சிப்படுத்தி அளப்பரிய தொண்டாற்றியுள்ளது. இதற்குக் காரணமாக விளங்கிய அதன் இயக்குனர் மரிய சேவியர் அடிகளார் பாராட்டுக்குரியவர் என ஆதீன முதல்வர் தனது ஆசியுரையில் கூறினார்.

தனமல் வேல சரவணானந்த தேரர் வாழ்த்துரை வழங்கினார். யாழ். குருமுதல்வர் அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் அங்கு உரையாற்றுகையில், அனைத்து மதங்களையும் மதித்து கலைச்சேவையினூடாக போர்ச்சூழலில் இருண்டு கிடந்த யாழ்ப்பாணத்துக்கு வெளிச்சமூட்டி நம்பிக்கையை அளித்தவர் திருமறைக் கலாமன்றத்தின் இயக்குனர் மரிய சேவியர் அடிகளார். இந்த மன்றத்தை 1965இல் ஆரம்பித்து, கலைப்பணியூடாக இறை பணியை முன்னெடுத்து கடந்த ஐம்பது ஆண்டுகளில் ஒரு பெரிய விருட்சமாக உலகெங்கும் எமது கலைப்பண்பாட்டு சிறப்புக்களை எடுத்துச்சென்ற ஒரேயொரு நிறுவனமாக தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்த்த அடிகளார் தென்பகுதிக் கலைகளதும் கலைஞர்களதும் வளர்ச்சிக்கும் தொண்டாற்றியுள்ளார். நேரத்தை அனுசரிக்கும் பண்புள்ள ஒரேயொரு நிறுவனமாக இந்த மண்ணில் இயங்குவது திருமறைக்கலாமன்றம் மட்டுமே என்றார்.

பேராசிரியர் சிவலிங்கராஜா தனது உரையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களதும் கலைப்பாரம்பரியங்களை உலகம் தெரிந்துகொள்ளச் செய்தலில் மரிய சேவியர் அடிகளாரும் அவருடன் இணைந்து செயற்படும் கலைஞர்களும் முக்கியமானவர்கள் என்பது மறுக்கமுடியாதது. தூய சிந்தனையோடு தொண்டு செய்பவர்கள் தோற்றுப்போனதாக இல்லை. திருமறைக்கலாமன்றம் தூய சிந்தனையோடு துணிந்து நின்று கலைப்பணி ஆற்றுகின்றது எனவும், கடந்த முப்பது வருடங்களுக்கு முன்னர் இயக்குனர் மரிய சேவியர் அடிகளாரைக்கண்டேன். அன்றைக்கே அவரைக் காதலித்தேன் என்று அடிகளார்மீதுள்ள மரியாதையை பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா எடுத்தியம்பினார்.

முதல்நாள் நிகழ்வில் உரையாற்றிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் இயலைவிட இசை, நாடகம் என்பவற்றை இணைத்து கலைகளின் நறுமணங்களை அறியவும் நுகரவும் வழிகாட்டியது திருமறைக்கலாமன்றம். நாடகங்களில் புதிய புதிய உத்திகளைக் கையாளுவதும் அதற்கான அணிசெய் கலைஞர்களின் ஒத்துழைப்பை நல்முறையில் பெற்றுக்கொள்வதும் சிறப்பாக உள்ளது. எமது கலைகளை வளர்ப்பதுடன் அவை தொடர்பான நூல்கள் சஞ்சிகைகளையும் வெளியிட்டு வருகின்றது. எமது கலைகள் நாடுகடந்து நகர வைத்திருக்கிறது. ஏனைய மதங்களில் காணப்படும் கலைப்பொக்கிஷங்களையும் உள்வாங்கி இடம்பெறும் கலை வடிவங்கள் குறித்து கிறிஸ்தவர்கள் கொதித்துப்போன வேளைகளில் நடுநிலையில் நின்று எவ்வாறு அவற்றை இணைத்துக்கொள்ளலாம் என்பதை எடுத்துக்காட்டியும் ஆலோசித்தும் ஐம்பது வருடங்களாக இலங்கை மற்றும் பிற நாடுகளுக்கும் தனது பணியைச் செய்யும் மரிய சேவியர் அடிகளாருக்கும் திருமறைக்கலா மன்றத்துக்கும் இறைவனின் ஆசிகிட்டும். தமிழ்த் தூதாக எமது மொழியை உலகுக்கு எடுத்துச்சென்றவர் தனிநாயகம் அடிகளார். கலைத்தூதாக எமது கலைகளை எடுத்துச் செல்கிறார் மரிய சேவியர் அடிகளார். இது எமக்குப் பெருமை சேர்க்கிறது என பேராசிரியர் சண்முகதாஸ் ஐம்பதாவது ஆண்டு நிறைவை வாழ்த்திக்கொண்டார்.

இந்நாட்டில் இனங்களுக்கிடையில் ஐக்கியத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்த, கலைகளைப் பலமாக்கியவர். கலை என்ற வடிவத்தின் ஊடகத் தமது முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டிருப்பதும் சிறப்பானதென்ற கருத்தை மேலதிக அரச அதிபர் க. முரளிதரன் (காணி) வழங்கினார்.

திருமறைக்கலாமன்றம் நாட்டின் 18 மாவட்டங்களில் இருபது கிளைகளைக் கொண்டுள்ளது. கலைகளினூடாக நாட்டின் ஒற்றுமைக்கு வித்திடத்துணிந்த மரிய சேவியர் அடிகளாரின் பணியும் திருமறைக்கலாமன்றத்தின் பங்கும் இன்றைய தேவை என்பதை ஒப்புக்கொண்ட திருமதி சஞ்சீவினி முனசிங்க அதன் பணிகளில் தன்னையும் இணைத்துக்கொண்டமை குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். திருமறைக்கலாமன்ற ஆளுநர் சபையில் அவரும் ஓர் உறுப்பினராவார். திருமதி அஜித்தா உதயங்கனி ரட்ணநாயக்க கண்டி திருமறைக்கலாமன்றத்தின் இணைப்பாளராவார்.

இரண்டு நாள் நிகழ்வுகளிலும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சொலமன் சூ சிறில், அருட்தந்தை செ. அன்புராசா, திருமதி ஜெனோவா அற்புதம், கலைஞர் வேல் ஆனந்தன் ஆகியோர் உரையாற்றினார்கள். திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குனர் யோ. யோன்சன் ராஜ்குமார் திருமறைக் கலாமன்றத்தின் உதயம் குறித்தும், பலத்த சிரமங்களின் மத்தியில் அதன் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்த மரிய சேவியர் அடிகளார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் குறித்தும் பேசினார். கலைஞர்கள், தொண்டர்கள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் வழங்கிய ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்து விரிவான உரை ஒன்றை நிகழ்த்தினார்.

தென்னிலங்கையிலிருந்து வருகைதந்த இளம் கலைஞர்களினதும், குடாநாட்டில் உள்ள கலைஞர்களினதும் கலை நிகழ்வுகள் அனைத்தும் பார்வையாளர்களினதும் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டன. ஏற்கனவே மேடையேற்றப்பட்ட நாடகங்களின் காட்சிகளும் திரையிடப்பட்டன. திருமதி. சஞ்சீவினி ரணசிங்க கௌரவிக்கப்பட்டார்.

தன்னுடன் மன்றத்துக்காகக் கைகொடுத்துவந்த கலைஞர்களின் திறமைகளையும் உட்சாகத்தையும் எட்டத்தில் இருந்தபடியே பார்வையாளர்களுடன் ரசித்துக்கொண்டிருந்தார் இயக்குனர் மரிய சேவியர் அடிகளார். மன்றத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு மனம் நிறைந்த விழாவாக அமைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# மடுத்திருத்தல தூய ஜோன்மேரி வியான்னி தியான இல்லத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள்

## புரட்டாதி - கார்த்திகை - 2015

**01) புரட்டாதி 9 – 12 : புனித வளன் பணியாளர் சபை அருட்சகோதரிகளுக்கான தியானம்**

இத்தியானமானது மேலே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் இடம்பெற்றது. இத்தியானத்தினை புனித வளன் பணியாளர் சபையைச் சேர்ந்த இரு அருட்சகோதரிகள் மேற்கொண்டனர். இவர்களுக்கான மறை உரைகள் மற்றும் வழிபாடுகளை இத்தியான நிலைய இயக்குனர் அருட்தந்தை அ. இராயப்பு அடிகளார் நடாத்தினார்.

**02) ஐப்பசி 6 – 10 : அன்புக்கன்னியர் சபை அருட்சகோதரி ஒருவருக்கான தியானம்**

அன்புக்கன்னியர்சபை அருட்சகோதரி அன்சலின் அவர்கள் தனது தியானத்தினை மேலே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் மேற்கொண்டார். இத்தியானத்திற்கான மறை உரைஞராக மடுத்தியான இல்ல இயக்குனர் அருட்திரு. அ. இராயப்பு அடிகளார் செயற்பட்டார். அமைதியான சூழலில் தனது தியானத்தினை நிறைவாக மேற்கொள்ள மடு அன்னை வழங்கிய வாய்ப்புக்கு மடு அன்னை ஊடாக இறைவனுக்கு நன்றிகூறிக்கொண்டார்.

**03) ஐப்பசி 12 – 13 : மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான மாதாந்தத் தியானம்**

மேற்படித் தியானமானது மேலே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் இடம்பெற்றது. 12ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வு 13ந் திகதி பி.ப 2.00 மணியளவில் நிறைவடைந்தது. இத்தியானத்தினை திருகோணமலை மறைமாவட்டத்தில் இயங்கிவரும் "டிவைன்" இல்ல இயக்குனர் அருட்திரு போல் றொபின்சன் அடிகளார் சிறப்பாக நடாத்தினார். 57 அருட்தந்தையர்கள் இத்தியானத்தில் பங்கெடுத்தனர்.

**04) ஐப்பசி 17 – 18 கழுத்துறைப் பங்கு மக்களுக்கான தியானம்**

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் கழுத்துறைப் பங்கு மக்களுக்கான தியானமானது 17ந் திகதி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி 18ந் திகதி பிற்பகல் 2.00 மணிவரை இடம்பெற்றது. ஏறத்தாழ 1,200 உறுப்பினர்கள் பங்கெடுத்த இத்தியானத்தினை கழுத்துறைப் பங்குத் தந்தை அருட்திரு றாமநாயக்க அடிகளார் ஒழுங்கமைத்திருந்தார். சிங்கள மொழியில் இடம்பெற்ற இந்நிகழ்வினை கொழும்பு உயர் மறைமாவட்டக் குருவானவர் ஒருவரும், தற்பொழுது மடுத்திருத்தலத்தில் சிங்கள மொழி நிகழ்வுகளை நடாத்துபவருமான கண்டி மறைமாவட்டக் குரு அருட்திரு சேவியர் குரூஸ் அடிகளாரும் இணைந்து நடாத்தினர். தியான உறுப்பினர்களுக்கான தங்குமிட வசதிகள் மடுத்திருத்தல வீடுகளில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. உரைகள் மற்றும் வழிபாடுள் யாவும் தியான நிலையத்தின் மேல்மாடி மண்டபத்தில் இடம்பெற்றன.

**05) ஐப்பசி 18 – 23 அருட்சகோதரர்களுக்கான தியானம்**

இத்தியானமானது 18ந் திகதி ஞாயிறு மாலை 6.00 மணி முதல் 23ந் திகதி பி.ப 1.00 மணி வரை நடைபெற்றது. ஆறு மாத காலம் தனது தியாக்கோன் பணிகளை நிறைவுசெய்துகொண்டு குருவாகத் திருப்பொழிவு செய்யப்படவிருந்த வங்காலைப் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரன் மு. வினோதன் பிரான்சீஸ் குலாஸ் (இறைமீட்பர் சபை) அவர்களும், தியாக்கோன்களாக உயர்த்தப்படவிருந்த தோட்டவெளிப்பங்கின் ஜோசப்வாஸ் நகரைச் சேர்ந்த அருட்சகோதரன் ம. பிறாங் டவ் (திருவுளப்பணியாளர் சபை) அவர்களும் மற்றும் செட்டிகுளம் பங்கின் முதலியார்குளம் கிராமத்தைச் சேர்ந்த அருட்சகோதரன் அமல்றாஜ் (அமலமரித் தியாகிகள் சபை) அவர்களும் இத்தியானத்தில் பங்கெடுத்தனர்.

அருட்திரு. அ. இராயப்பு அடிகளாரினால் நெறிப்படுத்தப்பட்ட இத்தியானமானது இம்மூன்று அருட்சகோதரர்களது எதிர்கால வாழ்வுக்கும் பணிகளுக்கும் மெருகூட்டுவதாய் அமைந்திருந்தது.

**06) ஐப்பசி 23 – 25 யாழ்ப்பாணம், களனி பல்கலைக்கழக மாணவர்களுக்கான உறவுப்பாலக் கருத்தமர்வு**

எமது தாய்நாட்டின் இரு இனங்களுக்கிடையேயும் நல்லதொரு சமாதான சூழலை உருவாக்க பல அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளில் ஒன்றாக யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு களனி பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையேயான உறவுப்பாலக் கருத்தமர்வானது மேற்குறிப்பிட்ட தினங்களில் இடம்பெற்றது.

யாழ் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் 25 உறுப்பினர்களும், களனி பல்கலைக்கழக சிங்கள மாணவர்கள் 28 உறுப்பினர்களும் பங்குகொண்ட இந்நிகழ்வினை யாழ் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரீகத்துறைத் தலைவரும், பல்கலைக்கழகப் பேராசிரியருமாகிய அருட்தந்தை விக்ரர் பிலேந்திரன் அடிகளார் ஒழுங்கமைத்திருந்திருந்தார். இந்நிகழ்வின் பிரதான வளவாளராக களனிப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திரு. சேர்லி பெர்னாண்டோ அவர்கள் செயற்பட்டார்.

**07) ஐப்பசி 26 – 27 : கொழும்பு தூய யோசப்வாஸ் அமைப்பின் நிர்வாகக் குழுவினருக்கான கூட்டம்**

கொழும்பில் இயங்கிவரும் தூய ஜோசப்வாஸ் அமைப்பின் நிர்வாகக் குழுவினருக்கான விசேட கூட்டமொன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பங்கெடுக்கவென நிர்வாக உறுப்பினர்கள் 27 பேர் வருகை தந்திருந்தனர். இலங்கை நாட்டின் புனிதரான தூய ஜோசப்வாஸ் அடிகளாரின் பாதுகாவலில் இயங்கிவரும் இவ்வமைப்பின் தற்கால மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் பற்றிய சிறப்புரைகள், கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. 26ந் திகதி காமை 9.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வானது 27ந் திகதி காலை 10.00 மணியளவில் நிறைவுபெற்றது.

**08) ஐப்பசி 27: இரணைப்பாலைப் பங்கு நிகழ்வு.**

யாழ் மறைமாவட்டத்தின் கிளிநொச்சி மறைக்கோட்டத்தின் இரணைப்பாலைப் பங்கின் மரியாயின் சேனை மற்றும் மாதா கூட்டத்தினருக்கான தியானம் இடம்பெற்றது. காலை 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிவரை இடம்பெற்ற இத்தியானமானது இரணைப்பாலப் பங்குத்தந்தை அருட்திரு அருட்செல்வன் அடிகளாரினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. தியான உரைகள் பங்குத்தந்தை அருட்செல்வன் மற்றும் மடுத்திருத்தலத்தில் பணிபுரியும் அருட்திரு சேவியர் குரூஸ் ஆகியோரால் கொடுக்கப்பட்டன.

**09) ஐப்பசி 30 – 31 : திருக்குடும்பச் சபையின் பொதுநிலையினருக்கான கருத்தமர்வு**

மேற்படிக் கருத்தமர்வானது 30ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி 31ந் திகதி பி.ப.1.30 மணியளவில் நிறைவடைந்தது. 450 உறுப்பினர்கள் மட்டில் பங்கெடுத்த இந்நிகழ்வினைத் திருக்குடும்ப சபையின் யாழ் மாகாணத் தலைவி அருட்சகோதரி கிறிஸ்ரா அவர்களின் வழிகாட்டலில் இச்சபையின் ஆலோசகர் அருட்சகோதரி அருள் அவர்களின் தலைமையில் ஏனைய அலோசகர்கள் மற்றும் இச்சபையில் முக்கிய பங்கு வகிக்கும் அருட்சகோதரிகளும் இணைந்து நடாத்தினர். இச்சபையில் அங்கத்தவர்களாக இணைந்திருக்கும் குருக்கள் சிலரும் இந்நிகழ்வில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

**10) கார்த்திகை 10 – 18 : செபமாலைத் தாசர் சபைக் குருக்களுக்கான வருடாந்தத் தியானம்**

இத்தியானமானது 10ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி 18ஆம் திகதி பி.ப. 1.30 மணியளவில் நிறைவுபெற்றது. 13 அருட்தந்தையர்கள் பங்குபற்றிய இத்தியானத்தினை அமலமரித் தியாகிகள் சபையின் முன்னைநாள் யாழ் மாகாணத் தலைவர் அருட்தந்தை போல் நட்சத்திரம் (அமதி) அடிகளார் நடாத்தினார்.

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் கவிதைகள்



## மார்கழி மலர்

கார் எனும் காலம் தோன்றும்
காண் மரம் செடிகளெல்லாம்
பேர் தரு பூக்கள் தன்னைப்
பெற்றிடா மலடாய் ஆகும்.
ஊரது தானும் நீண்ட
உறக்கத்தில் ஆழ்ந்து போகும்
நீரது பூமி யெல்லாம்
நின்றொரு கடலேயாகும்.

ஆயினும் இந்தக் காலம்
அவனியே வியக்கும் வண்ணம்
தூயதோர் மலரும் பூக்கும்
துலங்கிடும் நிலவைப் போல
தாயவள் மரியாள் என்னும்
தளிர்க் கொடி தந்த புஸ்பம்
வாயினாற் சொல்ல வொண்ணா
வடிவது வார்த்தையில்லை!

பின்பதை யேசு என்னும்
பெயரினால் மக்களெல்லாம்
அன்புடன் அழைக்கலானார்
அதற்கு முன் ஏதுமில்லை
மண்ணினில் அதனைப் போல
மலரொன்று பூத்ததில்லை
விண்ணகம் தானும் மெத்த
வியப்புடன் அதனைப் பார்க்கும்.

மலரதன் வாசம் எங்கும்
மனங்களை ஈர்த்துக் கொள்ளும்
புலரிளம் காலை போல
பொழுதது மாலை தானும்
தலையது நிமிர்ந்து நிற்கும்
தானது கவிழ்தல் இல்லை
விலை மதிப்பில்லாச் செல்வம்
விழியெல்லாம் நிறையுமம்மா!

மார்கழி மலராம் யேசு
மன்னவன் பிறந்தானென்று
ஓருடு வானில் தோன்றி
உலகது அறிய நிற்கும்
சீர்மிகு பாடல் கேட்கும்
செவியினில் தேனாய்ப் பாயும்
பேரது அறியா ஆயர்
பிள்ளைமுன் பணிவாரம்மா!

*- கவிஞர் வாகரைவாணன்,*
*மட்டக்களப்பு.*

## பாலன் இயேசு

பாலாய் பனித்துளியாய்!
வெண் பனியாய் பஞ்சுப் பொதியாய்
நஞ்சு நெஞ்சை மிஞ்சு வெல்லும்
கொஞ்சும் சிரிப்பால்
கோதவரும் கோமகனே!

நொறுங்கிய உள்ளத்திற்கும்
இறுகிய இல்லத்திற்கும்
தவள வரும் தயாபரனே!
இதமாய், பதமாய், சுகமாய்,
இதயமதில் இசை மீட்ட
இன்புறவரும் இதய தேவனே!

இல்லங்கள் இனிமை பெற
உள்ளங்கள் உவகை தர
மண்ணில் மலர்ந்திட்ட மாபரனே!
அவனியில் அவதரித்த ஆரமுதே!
பாவியை மீட்க வந்த பரிசுத்தனே!
வந்தனங்கள் பல தந்து
உம்மை வாழ்த்தி வரவேற்கிறோம்!

*- டேவிட் நவநீதி,*
*பேராதெனிய வீதி, கண்டி.*

## பாலகனே வரவேண்டும்

பண்பாடுகள் கட்டவிழ்ந்து
பாரம்பரியம் பரிதவிக்கும் இவ்வேளையில்
பரிவுகொண்டு எமை மீட்க
பாலகனே வரவேண்டும்.

காலநிலைச் சீர்கேட்டால்
கடினமாகிய எம் வாழ்வை
காத்து வழிநடத்த
பாலகனே வரவேண்டும்

மாட்டுக்கொட்டிலில் அல்ல
எம் மனங்களில் பிறந்திட
காத்திருக்கின்றோம் - உமை
எதிர் பார்த்திருக்கின்றோம்.

*செ. டியான்,*
*வஞ்சியன்குளம், வங்காலை*

## மரியன்னை தந்த பாலா

ஊரெல்லாம் மகிழ்ந்துபொங்க நீலம் குழைத்த
அழகுவானில் புதுமீனும் ஒளியைக் கொட்ட
மார்கழியின் பனிபொழிய மாட்டுக் குடிலில்
மனிதபவம் வேரறுத்து உலகை மீட்கத்
தேரழகு மரியன்னை தந்த பாலா!
தெய்வமைந்தா! யேசுநாதா! உம்மை மறந்து
சீர்கெட்ட ஈனரையா தேடி வந்தீர்!
சிட்டுமுகம் தூக்கியெம்மைப் பாரும் ஐயா!

பொல்லாத பசிக்குணவு தருவார் இல்லை!
பொறாமையால் மனஅமைதி அடைந்தார் இல்லை!
இல்லாத ஒன்றினுக்கே உருவமைத்து
இனவாதம் மதவாதம் உரக்கப் பேசிக்
கல்லாத மூடரையே குழப்பி வைத்துக்
கொக்கரிப்போர் இங்குளரே! வேதந்தானும்
சொல்லாத நெறியை யேசு நத்தார் அதனால்
சிரந்தாழ்த்தி அவரடியை வணங்கி வாழ்வோம்!

*- கவிஞர் மு. சிங்கராயர், பாசையூர்*

## மாட்டுத் தொழுவத்தில் மட்டும் பிறப்பார்

பாலைவனத்தில் துளிர்க்கும் பூவும்
பாறை பிளந்து ஓடும் நதியும்
கருமுகில்கள் மோதிச் சொரியும் மழையும்
சில்லென்று வீசும் குளிர்காற்றும்
இறைமகன் பிறப்பை உரைத்திடுமே.

உறவுகள் உதிர்ந்து உண்மைகள் மறந்து
சுயநலவெறியின் உச்சியில் நின்று
தனித்தனித் தீவாய் மனிதர்கள் பிரிந்து
வழமையான வாழ்த்துக்கள் கூறி
கைகள் குலுக்கி முத்தங்கள் கொடுத்து
முகம் மலர்ந்து வரவேற்று
உண்டு களித்து மகிழ்ந்திடும்போது
ஆண்டுதோறும் இறைமகன் இயேசு
மாட்டுத் தொழுவத்தில் "மட்டும்" தான் பிறப்பார்.

*- திருமதி. எம். எம். ஜோஜ் கெனடி,*
*வ/நெளுக்குளம் கலைமகள் ம.வி.*

## வேண்டுகோள்

மேலோனே...
உன்னிடம் ஒரு வேண்டுகோள்!
வருவது "நீ" என
வாசல்கள்தோறும் சொல்லிவிடு
இன்றேல் விடிவெள்ளி வாங்கும்
வேடிக்கையில்
வேந்தன் உனக்கும்
விலை பேசுவார்கள்.
பட்டாசு, பலகாரம், பட்டாடை அமளியில்
பாலகன் உன்னை முகம் பார்க்க மாட்டார்கள்.

கொண்டாட்டம், கும்மாளம்,
களியாட்டம் காரணமாய்
குழந்தையே உன்குரல் கேட்க மாட்டார்கள்.
தேடியே வந்து நீ தேவை தீர்த்தாலும்
தேவனே உன்னைத் "தெரியாது" என்பார்கள்.

காரில் வருவோர் உனக்குக் கை கூப்ப மாட்டார்
தேரில் வருவோர் உன்னைத் திரும்பியும் பார்க்கார்
விண்ணிலிருந்து வருகிறாய் விடியலை வழங்க
விளக்கே உன்னை விற்றுவிட முன்னர்
சொல்லிவிடு பரமனே வருவது நிஜமாய்
"நீ" தான் என்பதை!

*- ஜெயப்பிருந்தா மோசஸ்*
*அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்*

## இணைவோம் நத்தார் பலியில்

நல்லமனம் கொண்ட கிறிஸ்தவராய்
நத்தார் தினத்தைக் கொண்டாட
அன்பை ஆடையாய் அணிந்திடுவோம்
பண்பைப் பாசையாய் தெரிந்திடுவோம்.

பகிர்வைச் சேவையாய் செய்திடுவோம்
பரிவுகொண்டு வாழ்ந்திடுவோம்
இரக்கத்தை இதயத்தில் இருத்திடுவோம்
மன்னிக்கும் மனிதம் பேணிடுவோம்.

அர்பண உள்ளம் கொண்டோராய்
அரும்பணி பலதும் செய்திடுவோம்
ஒப்புரவுடனே உறவாடி
பிறர் நலம் காத்திட விரைந்திடுவோம்.

வஞ்சகம் பொறாமை சூனியம் யாவையும்
சுட்டுப் பொசுக்கி எரித்திடுவோம்
ஆன்மீகம் என்பதே ஆண்டவனின்
ஆலயம் என்பதை அறிந்திடுவோம்.

ஏழைகள், அனாதைகள் வாழ்வு
ஏற்றம் காண உழைத்திடுவோம்
புனிதம் நிறைந்த ஆன்மாவுடன்
இணைவோம் நத்தார் திருப்பலியில்!

*- லூட்ஸ் லூஜினி,*
*(திருக்குடும்ப கன்னியர் இல்லம், மன்னார்)*
*உயிர்த்தராசன்குளம், முருங்கன்.*

## உவகையுடன் பிறந்திடுவீர்

அள்ளி எடுத்த நினைவுகளை
சொல்லில் வடித்த தேனமுதாய்
மார்கழியில் உதித்திட்ட
இறைமகனே வருக!

மனுக்குலத்தை மீட்டிடவே
மனிதனாய் பிறந்திட்டீர்
ஏழையின் கோலம் பூண்டு
எம்மிடையே அவதரித்தீர்.

உத்தமராய் நாம் வாழ
ஊழ்வினைகள் நாம் வெல்ல
உள்ளமதில் இல்லமதில்
உவகையுடன் பிறந்திடுவீர்!

*- செ. நிலோசியன்,*
*சாளம்பன், ஆண்டான்குளம்*

## பாலனைத் தொழ வாரும்

இராகம் - தோடி தாளம் - ஆதி

*பல்லவி*

கண்டு தொழ வாரும் - பாலனை
கண்டு தொழ வாரும்!

*அனுபல்லவி*

தஞ்சம் வேறில்லைப் - புதல்வா
தரணிக் கொளி தருவாய் (கண்டு)

*சரணம்*

பண்டு பழி யாவும் - அழியப்
பாலகனாய் வந்துதித்தாய்
மண்டலம் புகழும் - ஏழைக்
குடிசையில் வாழ் மணியே (கண்டு)

அருளைத் தேடாமல் - உன்றன்
அடிமை யாகாமல்
இருளைத் தேடி நின்றேன் - வீணாய்ப்
பொழுதைப் போக்கி விட்டேன் (கண்டு)

செய் பிழை யெல்லாம் - எண்ணிச்
சிந்தை தளர்கின்றேன்
உய்வழி காணாமல் - இந்த
உலகில் வாடுகின்றேன். (கண்டு)

*- பி. ஏ. சி. ஆனந்தராசா*

## வந்துதித்தார் நம் யேசு

பெத்தலேகம் மேட்டினிலே
மாடடையும் தொழுவத்திலே
பிஞ்சு ஒன்று உதித்தது
பெத்தலேகம் மகிழ்ந்தது
திருவிழா நடந்தது
விண்ணகம் மகிழ்ந்திட
பெருவிழாக் கண்டது.

கான மழைச் சாரலிலே
கன்னிமரி மடியினிலே
அருந்தவப் புதல்வனாய்
அவதரித்தார் நம் இயேசு!

தூதர்கள் கீதம் பாடிட
ஆயர்களும் கண்டு மகிழ்ந்திட
அன்பனாய் புவியினில்
அவதரித்தார் நம் இயேசு!

வானில் தோன்றிய விண்ணொளி
நடத்தியே சென்றது ஞானியரை
ஏரோதின் காதினில்
இச்செய்தி எட்டியது
இறைவாக்கினர் சொன்னபடி
எல்லாம் நடந்தது.

ஞானிகள் மூவரும்
மீண்டுமே செல்ல
விண்ணொளி அங்கே
மீண்டும் உதித்தது.
மாடடைத் தொழுவத்தில்
வந்துமே நின்றிட
மாந்தர்கள் கூடியே
நின்று மகிழ்ந்தனர்.

சின்னஞ்சிறிய பாலகன் உதட்டினில்
தேன் சிந்தும் கவிதைகள் பலகோடி
சிந்தும் சிரிப்பைக் கண்டு
எம் சிந்தை குளிருதிங்கே!

பாவிகளின் அடைக்கலமாய்
பரமனின் திருவுருவாய்
பாசத்தைப் பொழியவே
வந்துதித்தார் நம் யேசு!

விண்ணாளும் மன்னவராய்
அன்னை மரியின் மடியில்
அன்பாகத் தவழ்ந்தவரே
நாடெல்லாம் செழிக்க
எம் வாழ்வெல்லாம் இனிக்க
எளியோர்கள் மகிழ்ந்திட
ஏழைகள் நெஞ்சினில் பிறந்துவிடு.

பாலகனே உன்வரவைப்
பாரெல்லாம் போற்றுகின்றோம்
பாவலரும் பாலகரும்
பாடியே வாழ்த்துகின்றோம்!

- எஸ். பெனிற்ரா,
மருங்கோடி அமைதியம்,
பள்ளமடு.

## நாம் என்ன செய்கிறோம்?

வார்த்தை கருவாகி
வாழ்வுக்குப் பொருளாகி
வரலாறு உருவாகி
மனுவுரு திருவாகி
முதலும் முடிவும்
முழுவதும் அவராகி
வாழும் வழியாகி
வழிக்கு ஒளியாகி
கருவறை புனிதமாகி
கல்லறை மீட்பதாகி
காவிய நாயகன்
அவதரித்த நேரம்!

மாட்டுத் தொழுவம் இடையர் கூட்டம்
நடுங்கும் குளிர் நாதியற்ற கோலம்
யுத்தத்தின் மைந்தன் மீட்பின் அரசன்
இரண்டாயிரம் ஆண்டினைக்
கடந்த வரலாறு

தங்கமும் வெள்ளியும்
செம்பவளத் தொட்டிலும்
தேவகுமாரனை வரவேற்க
மானிடத்தின் வேஷம்.

வழி இழந்தவன் ஒளி கேட்க
செவி இழந்தவன் ஒலி கேட்க
வழி இழந்தவன் வகை கேட்க
நாம் இங்கு என்ன செய்கிறோம்?

*திருமதி எம். எம். ஜெயக் கெனடி,*
*வ/நெளுக்குளம் கலைமகள் ம.வி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தின் திருமுகம்

## திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டுள்ள திருமடலின் தமிழாக்கம்

அருட்பணியாளர் பி. ஜே. ஜெபரெட்னம் எழுதிய இரக்கத்தின் யூபிலி ஆண்டு பற்றிய விளக்கக் கட்டுரை இவ்விதழில் இடம்பெறுகின்றது. அடுத்த இதழில் இருந்து இரக்கத்தின் யூபிலி ஆண்டு தொடர்பாக திருத்தந்தை வெளியிட்ட 'இரக்கத்தின் திருமுகம்' (Misericordiae Vultus) என்ற திருமடலின் தமிழாக்கம் இடம்பெறும். (பதிப்பாசிரியர்)

### இரக்கத்தின் யூபிலி ஆண்டு பற்றிய விளக்கம்

இரக்கத்தின் யூபிலி ஆண்டு பற்றி திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டுள்ள திருமடலின் தமிழாக்கத்தைத் தருவதற்கு முன்னதாக இவ் யூபிலி ஆண்டுபற்றிய சில விளக்கங்களை அறிந்துகொள்வது பொருத்தமானதென எண்ணுகிறோம்.




**இரக்கத்தின் யூபிலி ஆண்டு என்பது என்ன?**

கடந்த மார்ச் மாதம் 15ம் திகதி எமது திருத்தந்தை தனது பணியை ஏற்ற இரண்டாவது ஆண்டு நிறைவு நாளாகும். அன்றைய தினம் உரோமையிலுள்ள புனித பேதுருவானவர் பேராலயத்தில் திருத்தந்தை திருப்பலி நிறைவேற்றுகையில் முக்கியமான அறிவித்தல் ஒன்றை வெளியிட்டார். அது இரக்கத்தின் யூபிலி ஆண்டு பற்றியதாகும். இவ்வாண்டு டிசம்பர் மாதம் 08ம் திகதியிலிருந்து அதாவது, மரியன்னையின் மாசில்லாத உற்பவ திருநாளிலிருந்து 2016ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி கொண்டாடப்படவிருக்கும் கிறிஸ்து அரசர் பெருவிழா வரையிலான ஓராண்டு காலப்பகுதியை நாம் இரக்கத்தின் யூபிலி ஆண்டாக அனுசரிக்கவேண்டும் என்பதே திருத்தந்தையின் அறிவித்தலாகும்.

**Extra-ordinary Jubilee Year of Mercy**

ஆங்கிலத்தில் இது Extra-ordinary Jubilee Year of Mercy என்று அழைக்கப்படுகின்றது. Extra-ordinary என்றால் அசாதாரண அல்லது விஷேசமான என்று பொருள்படுவதால் இதனை அசாதாரண அல்லது விஷேசமான இரக்கத்தின் யூபிலி ஆண்டு என்றுதான் அழைக்கலாம். இந்த அசாதாரணம் அல்லது விஷேசம் என்பது எதற்காக என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டுமென்றால் யூபிலி ஆண்டுகள் பற்றிய ஒரு சுருக்கமான வரலாற்று அறிவு எமக்குத் தேவையாகும்.

**திருச்சபையின் வரலாற்றில் யூபிலி ஆண்டுகள்**

கத்தோலிக்க திருச்சபையில் யூபிலி ஆண்டைப் பிரகடனப்படுத்தி அனுசரிக்கும் வழக்கத்தை திருத்தந்தை 8ம் பொனிபஸ் அவர்கள் 1300ம் ஆண்டு ஆரம்பித்துவைத்தார். திருத்தந்தை 8ம் பொனிபஸின் எண்ணம் ஒவ்வொரு 50 ஆண்டுகளுக்கொருமுறை யூபிலி ஆண்டு அனுசரிக்கப்பட வேண்டுமென்பதாகும். ஆயினும் 50 ஆண்டுகளுக்கொருமுறை யூபிலி ஆண்டுகள் வருவதால் சிலருக்கு ஒரு யூபிலி ஆண்டிலும் பங்குபற்றாத நிலை ஏற்படலாம் என்பதால் எல்லாத் தலைமுறையினருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் 1475ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு 25 வருடத்துக்கொருமுறை யூபிலி ஆண்டை அனுசரிக்கும் வழக்கத்தை திருத்தந்தை 2ம் பவுல் அறிமுகப்படுத்தினார். இதன்படி, 1475ம் ஆண்டிலிருந்து இன்றுவரை 25 ஆண்டுகளுக்கொருமுறை யூபிலி ஆண்டை அனுசரிக்கும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது (சில அரசியல் காரணங்களினால் 1800ம் மற்றும் 1850ம் ஆண்டுகளில் யூபிலி ஆண்டுகள் அனுசரிக்கப்படவில்லை).

இவ்வகையில், கடந்த 2000ம் ஆண்டு புதிய மில்லேனிய ஆரம்பத்தின்போது எமது முன்னால் திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் அவர்களால் யூபிலி ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டு அனுசரிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் நோக்கும்போது எமது அடுத்த யூபிலி ஆண்டு 2025ம் ஆண்டுதான் அனுசரிக்கப்படவேண்டும். ஆனால் 2015ல் எவ்வாறு யூபிலி ஆண்டு வரமுடியும் என்ற கேள்வியைக் கேட்கும்போதுதான் இந்த அசாதாரணம் அல்லது விஷேசம் என்ற பிரச்சினைக்கு விடை கிடைக்கிறது.

திருச்சபையின் வாழ்வில் சில மிக முக்கியமான நிகழ்வுகள் வருகிறபோது அவற்றைச் சிறப்பிக்கும்முகமாக ஒரு யூபிலி ஆண்டை அறிவிக்கும் உரிமை திருத்தந்தைக்கு உண்டு. அந்த உரிமையைப் பயன்படுத்தித்தான் திருத்தந்தை 2015ல் யூபிலி ஆண்டை பிரகடனப்படுத்தியிருக்கிறார். அப்படியென்றால், இவ்வருடம் திருச்சபை சந்திக்கின்ற அந்த முக்கியமான நிகழ்வு என்ன? இவ்வருடம் திருச்சபையின் வாழ்வின் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய 2ம் வத்திக்கான் சங்கம் நிறைவுபெற்ற 50வது ஆண்டாகும். 1965ல் திருத்தந்தை 6ம் பவுலால் நிறைவேற்றிவைக்கப்பட்ட 2ம் வத்திக்கான் சங்கத்தின் 50 ஆண்டுகள் நிறைவைச் சிறப்பிக்கும் முகமாகத்தான் திருத்தந்தை இவ்வருடம் இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டை பிரகடனம் செய்துள்ளார். இது சாதாரணமாக 25 ஆண்டுகளுக் கொருமுறை வருகின்ற யூபிலி ஆண்டாக அல்லாமல் இடையிலே வருவதால்தான் இதனை 'அசாதாரண யூபிலி ஆண்டு' அல்லது 'விஷேச யூபிலி' ஆண்டு என்று அழைக்கின்றோம்.

**யூபிலி ஆண்டுகள் ஏன்?**

சாதாரணமாகவோ அல்லது அசாதாரணமாகவோ ஏன் யூபிலி ஆண்டுகள் பிரகடனப்படுத்தப்பட்டு அனுசரிக்கப்படுகின்றன என்பதையும் நாம் அறியவேண்டும்.

யூபிலி ஆண்டு என்பது இறைவன் தருகின்ற ஒரு உன்னத கொடையாகும். ஏனெனில் யூபிலி ஆண்டை சிரத்தையோடு அனுசரிக்கும் விசுவாசிகளுக்கு அவர்களின் கடந்தகாலப் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, குற்ற உணர்வுகள் நீங்கப்பெற்று முழுமையான விடுதலை அடைந்தவர்களாக புதுவாழ்வுக்குள் நுழைய ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. எல்லாவற்றையும் தூய்மைப்படுத்தும் ஆண்டு யூபிலி ஆண்டு. இது வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட விசுவாசமாகும். லேவியர் புத்தகம் 25: 8-13 பகுதியில் ஒரு யூபிலி ஆண்டின் நோக்கத்தையும் பலன்களையும் நாம் காண்கிறோம்:

"தொடர்ந்து வரும் ஏழு ஓய்வு ஆண்டுகளை ஏழேழு ஆண்டுகளாக ஏழுமுறை எண்ணிக்கையிட்டு அவை நாற்பத்தொன்பது ஆண்டுகள் ஆகும். ஏழாம் மாதம் பத்தாம் நாள் எக்காள ஒலி எழட்டும். பாவக் கழுவாய் நிறைவேற்றும் அந்த நாளில் உங்கள் நாடெங்கும் எக்காளம் முழங்கச் செய்யுங்கள். ஐம்பதாம் ஆண்டைத் தூயதாக்கி, இந்நாட்டில் வாழ்வோருக்கெல்லாம் தன்னுரிமை அறிவியுங்கள். அது உங்கள் யூபிலி ஆண்டு. அந்த ஆண்டில் நீங்கள் உங்கள் நிலப்பகுதிக்கும் உங்கள் இனத்தாரிடமும் திரும்ப வேண்டும். ஐம்பதாம் ஆண்டு உங்களுக்கு யூபிலி ஆண்டு. அந்த ஆண்டு பயிரிட வேண்டாம். தானாய் விளைந்ததை அறுக்க வேண்டாம். கிளைநறுக்காத திராட்சைச் செடியினின்று கனி சேர்க்கவும் வேண்டாம். ஏனெனில் அந்த ஆண்டு யூபிலி ஆண்டு அது உங்களுக்குத் தூயது. நிலத்தினின்று அவ்வப்போது கிடைக்கும் பலனை உண்ணுங்கள். அந்த யூபிலி ஆண்டில் அவரவர் தம் காணியாட்சிக்கும் திரும்பிச் செல்லவேண்டும்."

லேவியர் புத்தகத்தில், யூபிலி ஆண்டின் முழுமையான பயனை அனுபவிக்கவேண்டுமென்றால் மக்கள் என்ன செய்யவேண்டும் என்ற அறிவுரைகள் தெளிவாகக் கொடுக்கப்படுகின்றன. அவ்வாறே திருத்தந்தையர்களும் யூபிலி ஆண்டுகளைப் பிரகடனம் செய்யும்போது அவ்வாண்டை எவ்வாறு பயன்படுத்திப் பூரண பலனைப் பெறுவது என்பதை விளக்கி திருமடல்களை எழுதி இறைமக்களுக்கு விளக்குவார்கள்.

இவ்வகையில், திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்துள்ள இரக்கத்தின் யூபிலி ஆண்டுபற்றிய விளக்கத்தையும், அவ் ஆண்டை நாம் எவ்வாறு பயன்படுத்தி முழுப்பயனைப் பெற்று எம்மைத் தூயவர்களாக்கிக் கொள்ளலாம் என்பது பற்றியும் விளக்குவதே "இரக்கத்தின் திருமுகம்" என்னும் திருமடலாகும். (அடுத்த இதிழில் இத்திருமடலின் தமிழாக்கத்தைப் பார்ப்போம்)

# மன்னார் வைத்தியசாலைத்தரப்பின் அசமந்தத்தால் தொடர் இறப்புக்கள் வங்காலை மக்கள் போராட்டம்

மன்னார் பொது வைத்தியசாலைத் தரப்பினரின் அசமந்தப்போக்கால் தொடர்ச்சியாக இறப்புக்கள் ஏற்படுகின்றன என்று குற்றஞ்சாட்டி வங்காலை கிராம மக்கள் மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் 16ஆம் திகதி திங்கட்கிழமை வங்காலை கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வங்காலைக் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கிராம மக்களும் இணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வங்காலையைச் சேர்ந்த பத்திநாதன் ஜேன்போல் சோசை (வயது 20) என்ற இளைஞன் கடந்த ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி மன்னாரில் இருந்து வங்காலை நோக்கி தனியார் பஸ்ஸில் பயணித்தபோது தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். சம்பவதினம் கடமையில் இருந்த வைத்தியர் குறித்த இளைஞனுக்கு உரிய முறையில் சிகிச்சை வழங்காது தலையில் ஏற்பட்ட காயத்துக்கு மருந்திட்டு விடுதியில் சேர்ப்பித்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

எனினும் குறித்த இளைஞனின் உடல்நிலை மிக மோசமாகக் காணப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக வேறு மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல வேண்டியநிலை ஏற்பட்டபோதும் சுமார் 6 மணி நேர தாமதத்தின்பின் இரவு 10.45 மணிக்கு வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, பின் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த இளைஞன் யாழ் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பயனின்றி கடந்த நவம்பர் மாதம் 5ஆம் திகதி யாழ். போதனாவைத்தியசாலையில் உயிரிழந்தார்.

குறித்த இளைஞனின் சாவுக்கு சம்பவதினம் மன்னார் பொது வைத்தியசாலையில் கடமையில் இருந்த வைத்தியர் மற்றும் பணியாளர்கள் காரணம் என்று தெரிவித்தே குறித்த கிராம மக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

"வைத்தியசாலையில் ஊழியர்களே கருணை அடிப்படையிலாவது எங்களைக் கவனியுங்கள்", "அரசே, வைத்தியசாலை நிர்வாகத்தைச் சீர்படுத்து", "வைத்தியர்களே, பொது மக்களின் வரிப்பணமே உங்கள் வேதனம்", "பணியாளர்களே, நோயாளர்களுடன் கண்ணியமாக நடந்துகொள்ளுங்கள்", "அரசே, அம்புலன்ஸ் இல்லாத வைத்தியசாலையை மூடு", "கடமை நேரத்தில் விழிப்பாய் இரு" போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

மன்னார் பொது வைத்தியசாலையை தரப்பினரின் அசமந்தப்போக்கால் இதுவரை 3 இறப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினார்கள்.

கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்ட மக்களுக்கு ஆதரவு தெரிவித்து தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டார். கிராம மக்கள் தமது கோரிக்கை அடங்கிய மனுவை நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளித்ததோடு, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமும் கையளித்தனர்.


**மன்னா விநியோகஸ்தர்களே!**

**உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!**

**- மன்னா நிர்வாகம் -**


# சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலை கோரி

# மன்னாரில் பேரணி

நீண்ட காலமாக சிறையில் வாடும் தமிழ்க் கைதிகளை விடுவிக்காது, அவர்களுக்கு எதிராக எந்தச் சட்ட நடவடிக்கையும் எடுக்காத நிலையில் தொடர்ந்து சிறையில் வாடும் தமிழ்க்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி, அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் சிறையில் வாடும் தங்கள் பிள்ளைகள், கணவர்மாரை உடன் விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி மன்னாரில் கடந்த நவம்பர் மாதம் 10ஆம் திகதி மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி. செபமாலை அடிகளாரின் தலைமையில் பேரணி ஒன்று இடம்பெற்றது.

இப்பேரணியில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுவின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், சிறைக்கைதிகளுக்காக வாதாடிவரும் சிரேஷ்ட சட்டத்தரணியும், வவுனியா செஞ்சிலுவைச் சங்கத் தலைவருமான அன்ரன் புனிதநாயகம், வடமாகாண சபை அமைச்சர் பா. டெனிஸ்வரன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், தமிழரசுக் கட்சி இளைஞர் அணிச் செயலாளர் சிவகரன், மன்னார் மறை மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் அருட்பணி. எஸ். ஜெயபாலன் குரூஸ் மற்றும் பெருந்தொகையான மதகுருக்கள், சிறையில் அரசியல் கைதிகளாக இருப்போரின் உறவினர்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் இப்பேரணியில் கலந்துகொண்டனர்.

இப்பேரணியில் கலந்துகொண்டோர் மன்னார் புனித செபஸ்தியார் தேவாலயத்திலிருந்து புறப்பட்டுச் சென்று மன்னார் நகரத்தின் ஊடாக மன்னார் மாவட்டச் செயலகத்தின்முன் வீதியில் நின்று தங்கள் கோரிக்கையை பதாதைகள் மூலம் வெளிப்படுத்தி நின்றனர். இவர்கள் ஏந்தியிருந்த பதாதைகளில் "பொய் வாக்குறுதியைக் கொடுத்து ஏமாற்றாதே, "தமிழ் மக்களை வஞ்சிக்காதே," போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.161

## யோனா - செப்பனியா வரை

உங்கள் விடைகளை 2016 ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 01 | | | | | | | | 10 |
| | | | | 02 | | | | | |
| 14 | | | 12 | | 09 | | | | |
| | | | | 08 | 19 | | | 11 | |
| 03 | | | | | | | | | |
| | | | | | | 16 | 18 | | |
| | | | | | | ❖ | | | |
| | 04 | 15 | 17 | | | | | | 13 |
| 07 | | | ❖ | | 05 | | | | |
| | | | | 06 | | | | | 20 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### இடமிருந்து வலம்

1. ஆனால் ஆண்டவர் தம் புனித ...................... வீற்றிருக்கின்றார்.
2. அது ............... காலம்போல் இருக்கும்.
3. ............ என் தலையைச் சுற்றிக்கொண்டது.
4. உன் ................. கையினின்றும் ஆண்டவர் உன்னை மீட்டருள்வார்.
5. மனிதரையும் விலங்குகளையும் .........................
6. ...................... காவல் மாடமே!
7. நகரின் கீழ்ப்பகுதியில் குடியிருப்போரே! ............... அழுங்கள்.
8. நான் ..................... மாடத்தில் நிற்பேன்.
9. உன் தேர்களைச் ................. சாம்பலாக்குவேன்.

### வலமிருந்து இடம்

2. இப்பொழுதே அவர்களுக்குத் ..........................
6. ..................... நேர்மையானவர் எவருமே இல்லை.
8. ...................... உங்களைக் கவ்விக்கொள்ளும்.
10. இனி ஒருபோதும் எனது .............. செருக்கு அடையமாட்டாய்.
12. அது பரபரப்பும் கொடுமையும் உடைய ..................
13. நேர்மையாய் நடப்போரிடம் அவர் ............... பேசமாட்டாரோ?

### மேலிருந்து கீழ்

1. தீயைப்போல் அவரது .................. கொட்டுகின்றது.
10. ஆதலால் .............. வலுவற்று பயனற்றுப் போகின்றது.
11. நீ நிறுத்தியிருக்கும் கம்பங்களைப் பிடுங்கி .......................
14. .................. யாவும் தம் தெய்வத்தின் பெயரை வழிபடும்.
18. வெறுமை! பாழ்! .................! உள்ளம் சோர்ந்துவிட்டது.
19. ...................... உண்ணக் கொடுத்தவரிடம் அமைதி உண்டாகுக! என உரக்கச் சொல்கின்றார்கள்.

### கீழிருந்து மேல்

4. திராட்சை பறித்து முடிந்தபின் ...................... பறிக்கச் சென்றவனைப் போலானேன்.
6. லெபனோனின் .................. வாடிப்போகின்றன.
8. ................... இதை அறிவிக்க வேண்டாம்.
11. செங்கல் அறுக்கச் சட்டங்களை ...........................
14. ................. சீயோனே, நீ எழுந்து புணையடி.
15. உன் .............ப் பொருள்கள்முன் இனி நீ தலை வணங்கி நிற்கமாட்டாய்.
16. அது வளர்ந்து யோனாவின் தலைக்கு ............... தந்து அவரது மனச்சோர்வை நீக்கியது.
17. ஆண்டவராகிய என் தலைவரே என் ......................
18. உறுதியாக எனக்கு நீ ................ நடப்பாய்.
19. .................. யால் வாரி இழுக்கின்றார்கள்.
20. மானிடர்மேல் ........................ வரச் செய்வேன்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 159 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
S. நிகிதா,
வஞ்சியன்குளம்,
நானாட்டான்.



**இரண்டாம் பரிசு:**
நீ. நிதுஷனா,
அந்தோனியார் புரம்,
மன்னார்.

**மூன்றாம் பரிசு:**
இ. நவின்ராஜ்,
பாலையடிப்புதுக்குளம்,
வட்டக்கண்டல்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 159ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. அ. கில்டன், பாப்பாமோட்டை, திருக்கேதிஸ்வரம்.
2. எஸ். யோண் லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
3. M. J. லெம்பேட், கன்னியர்மட வீதி, மன்னார்.
4. இ. ராஜித், வட்டக்கண்டல், மன்னார்.
5. நீ. நிர்மலா, அந்தோனியார்புரம், மன்னார்.
6. ம. டினுஷா மேரி, பெற்றா, மன்னார்.
7. J. அக்ஸயன், பெரிய பண்டிவிரிச்சான்.
8. ஆ. றூபன் ஜீசஸ் டலிமா, 5ம் வட்டாரம், வங்காலை.
9. இ. நீலவேணி, வட்டக்கண்டல், மன்னார்.
10. றா. மேரி ராஜ்மி டயஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
11. கு. கிருஷாந், காந்தான்குளம், நானாட்டான்.
12. அ. பிரியதர்சினி சில்வா, மடுக்கோவில், மடு.
13. ம. நிதர்சன், பெற்றா, மன்னார்.
14. F. கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
15. யோ. ஆன் நிருஜன் லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
16. சி. மேரி தர்மினி, அச்சுவேலிதோப்பு, யாழ்ப்பாணம்.
17. கே. துளசிகா, பாண்டியங்குளம், நட்டாங்கண்டல்.
18. செ. ஞானச்சந்திரா, செட்டிகுளம், வவுனியா.
19. ரூ. ரூப சாலினி, உமனகரி, நானாட்டான்.
20. டொ. டர்லினி றொக்சி, சிறுத்தோப்பு.
21. சி. வினசன் யோட்ஸ், மடுக்கோவில், மடு
22. A. M. பரியதர்ஷினி, வட்டாரம்- 02, புங்குடுதீவு.
23. சி. வி. வே.டிலைக்சனா, தொழில்நுட்பக்கல்லூரி, மன்னார்.
24. ச. டிலைக்சனா, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்.
25. D. V. அனுஷியா, நானாட்டான், மன்னார்.
26. ஜெ. மானுசா அருளினி, கல்பிட்டிறோட், மாம்புரி.
27. ரூ. ரூப சயன்ஷி, உமனகரி, நானாட்டான்.
28. யே. றொணாஸ்ட், இசைமலைத்தாழ்வு, முருங்கன்.
29. பி. லவோன்சினி, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
30. ஜெ. இமல்டா வினோதனி, கல்பிட்டிவீதி, மாம்புரி.
31. சி. கயாழினி, அச்சுவேலித்தோப்பு, யாழ்ப்பாணம்.
32. ம. தன்சிகா, சிதம்பரபுரம், வவுனியா.
33. K. நளாயின் தேவி, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல்.
34. கு. ஆன் சுஸ்மிதா, காத்தான்குளம், நானாட்டான்.
35. அ. இராசநாயகம் சில்வா, மடுக்கோவில், மடு.
36. இ. பற்றிக் கனிசீயஸ், பெரிய பண்டிவிரிச்சான், மடு.
37. அ. பொன்கலன் பற்றிமா, மன்னார்.
38. J. ஜெனோன்சி லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
39. த. நியோஜினி லக்சனா, செ.கட்டையடம்பன், முருங்கன்.
40. வி. றுக்சாயினி, சூரிய கட்டைக்காடு, நானாட்டான்.
41. எம்.எச். ஜறின் எட்வேட், சூ. பி. குளம், வவுனியா.
42. சு. கிருஷா, சிறுத்தோப்பு, பேசாலை.
43. டா. யோசேப்பின், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
44. கத்தரின் சேவியர், பெரியகடை, மன்னார்.
45. கிறிஸ்னி ஜெராட், பெற்றா, மன்னார்.
46. ஜெ. டிலுஜன், புதுக்காடு, தேவன்பிட்டி.
47. தேவிகா பத்மராஜா, பெற்றா, மன்னார்.
48. கமலா கிறிஸ்தோப்பர், பெற்றா, மன்னார்.
49. S. M. குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்., வங்காலை.
50. செ. அனுசியா கூஞ்ஞ, அரிப்பு மேற்கு, சிலாவத்துறை.

## வத்திக்கான் தூய பேதுரு .....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

"எல்லாம் வல்ல இறைவா, இரக்கமும் மன்னிப்பும் நிறைந்தவரே, நற்செய்தியின் மகிழ்வில் சகோதர சகோதரிகளை அன்புகூரவும், அருளின் ஆண்டில் வாழவும் எங்களுக்கு வரம் தாரும். தூய ஆவியாரைத் தொடர்ந்து எம்மில் பொழிந்தருளும்" என்று செபித்து அமல அன்னையின் உதவியை நாடினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பின்னர் "நீதியின் கதவுகள் எனக்குத் திறக்கட்டும்" என்று சொல்லி, மரபுப்படி தன் இரு கரங்களாலும் புனிதக்கதவை மூன்று முறை தள்ளித் திறந்தார். பின்னர் அவ்விடத்தில் நின்று சிறிது நேரம் செபித்தார். பின்னர் இவர் பசிலிக்கா உள்ளே போய் நிற்க, திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களும் புனிதக் கதவு வழியாகச் சென்றார். பின்னர் கர்தினால்களும் ஆயர்களும், மற்றவர்களும் புனிதக்கதவு வழியாகச் சென்றனர். பசிலிக்காவில் தூய பேதுரு கல்லறைப் பீடத்தின் முன்பாக வைக்கப்பட்டிருந்த பெரிய சிலுவை முன்னின்று தலைவணங்கிச் செபித்து தனது அப்போஸ்தலிக்க ஆசீரையும் திருத்தந்தை பிரான்சிஸ் அளித்தார்.

இறுதியில் "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராக இருப்பதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவராக இருங்கள். அமைதியில் செல்லுங்கள்" என்று தியாக்கோன் ஒருவர் கூறினார். அத்துடன் புனிதக்கதவு திறக்கும் திருவழிபாடு நிறைவடைந்தது.

அதன் பின்னர் இத்தாலிய அரசுத் தலைவர் ஜார்ஜோ மத்தரெல்லா உட்பட இத்திருப்பலியில் கலந்துகொண்ட நாடுகளின் பிரதிநிதிகள் குழு புனிதக் கதவு வழியாகச் சென்று செபித்தனர்.

அன்றைய தினம் காலைத் திருப்பலிக்குப்பின்னர் பகல் 12 மணிக்கு மூவேளை செப உரை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ். புனிதக்கதவு திருவழிபாட்டில் கலந்துகொண்ட திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களுக்கு நன்றி சொல்லியதோடு அனைத்து விசுவாசிகளும் அவரை வாழ்த்துமாறு கேட்டுக்கொண்டார்.

2015ஆம் ஆண்டு 08ம் தேதி டிசம்பர் தொடங்கியுள்ள இரக்கத்தின் யூபிலி ஆண்டு 2016ம் ஆண்டு நவம்பர் 20ஆம் தேதி நிறைவடையும். இந்த இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டுக் காலத்தில் கருணைச் செயல்களில் ஈடுபடுவோம். நம் வானகத் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் (லூக் 6:36) நாமும் இரக்கமுள்ளவர்களாய் வாழ்வோம்.

## திருச்சிலுவைக் கன்னியர்களின்.....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

"நாம் நம்பிக்கையின் விதைப்பாளர்கள்" என்ற 2013ஆம் ஆண்டு பொது அமர்வுக் கருப்பொருளையே இலங்கை அருட்சகோதரிகளுக்கான அழைப்பாக இந்தக் குழுவினர் முன்வைத்து வலியுறுத்தினர்.

இக்குழுவினர் நவம்பர் 7ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 6ஆம் திகதி வரை இலங்கையில் தமது சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தனர். தற்போதைய மேனிலை முதல்வர் இந்தியாவின் கேரளா மாநிலத்தைச் சேர்ந்தவர். ஆசிய ஆலோசகர் அருட்சகோதரி இம்மாக்குலேற் ஜோசவ் அவர்கள் இலங்கையின் முன்னாள் மாகாணத்தலைவி ஆவார். இவர் வைத்தியராகவும் பணியாற்றினார்.

## குருத்துவ வாழ்வில் ....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

தற்போது கிளிநொச்சியில் உள்ள கனகபுரம் என்ற இடத்தில் ஒப்ரக் (Obtec) என்று அறியப்படும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கல்வி நிலையம் ஒன்றை நடாத்திவருகின்றார். இவருடைய குருத்துவ யூபிலி விழாத் திருப்பலி டிசம்பர் மாதம் 19ஆம் திகதி கிளிநொச்சி கனகபுரம் இலக்கம் 76இல் அமைந்துள்ள ஒப்ரெக் நிறுவனத்தில் காலை 10.00 மணிக்கு இடம்பெறும்.

## அருட்சகோதரி றொசாறியோ .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

அச்சுவேலியில் உள்ள இலங்கை மாதா கன்னியர் இல்லத்தில் வசித்துவந்த இவர் அன்றைய தினம் காலையில் தனது வழமையான தனது செயற்பாடுகளை மேற்கொண்ட நிலையில், திடீரென தலைச்சுற்று ஏற்பட்டு மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக அவர் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அன்னாரின் பூதவுடல் புனித தெரேசாள் மகளிர் கல்லூரி மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் நவம்பர் 10ஆம் திகதி 2.30 மணிக்கு யாழ். கொஞ்சேஞ்தி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவர் கடந்த 2000ஆம் ஆண்டில் இருந்து இறக்கும்வரை பாடசாலை அதிபராகக் கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையினை ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புனித வளனார் சபையின் .......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி மன்னாருக்கு வருகைதந்த இவர்கள் தமது அருட்சகோதரிகளின் பணிகள் பற்றி கலந்துரையாடியதுடன் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை அவர்களை ஆயர் இல்லத்தில் மரியாதையின் நிமித்தம் சந்தித்தனர்.

நவம்பர் 22ஆம் திகதி பங்குமட்டத்தில் இவர்களுக்கான வரவேற்பு உயிலங்குளம் பங்குத்தந்தை அருட்பணியாளர் மரியதாஸ் லியோன் அடிகளார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மேளதாள வாத்தியத்துடன், மலர்மாலை அணிவித்து, பொட்டிட்டு தமிழ் மணம் கமழ இவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை அடிகளாரும் கலந்து சிறப்பித்தார். சபையின் மேனிலை முதல்வர் பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுடைய வருகையால் இச்சபையின் அருட்சகோதரிகளும், நொச்சிக்குள கிராம மக்களும், உயிலங்குளம் பங்கு மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்!

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 03 1965



உதிர்வு 24 12 2014

### திரு. யாக்கோபு திருச்செல்வம்

(தெற்கிலுப்பைக்குளம், வவுனியா)

அம்மாவிற்கு பிள்ளையாய் எட்டு சகோதரங்களுடன் ஐந்தாவது சகோதரனாய் இம்மண்ணில் பிறந்தாய். எவ்வளவு துன்பம் வந்தாலும் எதையும் பொருட்படுத்தாது இப்பூமியில் வாழ்வைக் கொண்டுசென்றாய். எல்லோருக்கும் நல்லவனாய், வல்லவனாய் நீ வாழ்ந்து மற்றவரையும் நீ நல்லவராய் வாழவைத்தாய். திடீரென்று ஓர் செய்தி! பாலகனின் பிறப்பு அன்று உம் உயிர் உம்மைவிட்டுப் பிரிந்தது. பாலகனின் பிறப்பா? உம்முடைய இறப்பா? என்று நினைத்தோர் பலர். என்ன செய்வது? எல்லாம் பாலனின் விருப்பம் என்று எம் மனதைத் தேற்றிக்கொண்டோம். ஒரு வருடம் ஆனாலும் நீர் எம்முடன் வாழ்கின்றீர் என்பதை நினைத்து, உம் பிரிவில் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். ஆண்டவரில் அமைதிகொள்ளும்!

பிரிவால் நினைந்துருகும்:
அன்பு அம்மா, அக்கா குடும்பம் - பிள்ளைகள், அண்ணாமார் குடும்பம் - பிள்ளைகள், தங்கை குடும்பம் - பிள்ளைகள், தொட்டம்மா குடும்பம் மற்றும் நண்பர்கள்.

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 07 1988



உதிர்வு 30 12 2013

### செல்வன். ஜேம்ஸ் பின்ரன் சுதர்சன்

(Manager of Abans - Mannar Branch)

(எழுத்தூர், மன்னார்)

"அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார். அவர்தம் இறக்கைகளின்கீழ் நீர் புகலிடம் காண்பீர்"
(தி.பா 91:4)

ஆண்டுகள் இரண்டு மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரங்கள்!
காலச்சக்கரத்தில்
கணப்பொழுதில் உமையிழந்தோம்.
வாழும் வயதினில் சதிகாரர் உன்னை
எமனுக்கு இரையாக்கிவிட்டனரே!
தனக்கென வாழாது
பிறர்க்கென வாழ்ந்து விதையானீர்.
எப்பொழுதும் உம்மை எண்ணா நேரமில்லை.
எப்பொழுது உமைக்காண்போம் என ஏங்குகிறோம்.
இறை உறவில் நீர் என்றும் துயில்கொள்வீராக!

பிரிவால் நினைந்துருகும்.
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 11 1945



உதிர்வு 20 12 2013

### திருமதி. சூசைதாசன் மெற்றில்டா குரூஸ்

(வங்காலை, மன்னார்)

எம் அன்புத் தெய்வமே அம்மா!
நேரங்கள் ஓடினாலும் காலங்கள் மாறினாலும்
எம்மைவிட்டு நீங்கவில்லையே உம் நினைவுகள்!
யாராலும் ஈடுகொடுக்க முடியவில்லையே உம் இழப்பினை!

ஈராண்டு காலம் போனால் என்ன
எத்தனை ஜென்மம் ஆனால் என்ன
புதிய உறவுகள் வந்தால் என்ன
பழைய உறவுகள் அணைத்தால் என்ன
மாறுமோ உம் பாசம்? மறையுமோ எம் நேசம்?

கண்முன்னே விட்டு நீங்கி கனவாகிப் போனாலும்
மண்விட்டு மறைந்து நீங்கள் மாயமாகிப்போனாலும்
மனம்விட்டு மறையாமல்
எந்நாளும் இருப்பீர்கள் எம் மனங்களில்!

பிரிவால் நினைந்துருகும்:
பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 03 09 1948



உதிர்வு 13 11 2015

### திரு. டோமினிக் மரியாம்பிள்ளை

(திட்ட அலுவலர், வாழ்வுதயம், மன்னார்)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கைகொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11:25-26)

பிறப்பெடுத்த பொறுப்பினை
செவ்வனே ஆற்றிய
சிறப்புடனே சென்றீர்கள் - அப்பா
இறப்பினும் வாழ்பவராய்
இறைபதம் நின்று காத்திடுங்கள் எம்மை!

*பிரிவால் நினைந்துருகும்.*
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*
றெயின்போ வீதி, பெற்றா, மன்னார்.

# பொறுப்புக்கூறல் இல்லாமல் நல்லிணக்கம் சாத்தியமில்லை

10ஆம் பக்கத் தொடர்ச்சி

**தெற்கிலுள்ளவர்கள், "பழைய காயத்தைக் கிண்டுவதில் எந்தப்பயனும் இல்லை" என்று கூறும்போது பொறுப்புக்கூறல் மிக முக்கியமானது என நீங்கள் ஏன் நம்புகிறீர்கள்?**

நல்லிணக்கத்திற்கு பொறுப்புக்கூறலும், உண்மையும், நீதியும் தவிர்க்க முடியாத படிகள். பொறுப்புக்கூறல் இன்றி ஒருவரால் நல்லிணக்கத்தை நோக்கி நடைபோட முடியாது. போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி தேவை. பழைய சம்பவங்களை மூடிமறைத்து அல்லது நடந்த துயரங்களின் உண்மைக்கு முகம்கொடுக்கப் பயந்து நடப்பவர்கள் தப்பிக்கொள்ள முயல்பவர்களாகவே தெரிகிறார்கள். பாப்பரசர் பிரான்சிஸ் தனது இலங்கைப் பயணத்தின்போது பொறுப்புக்கூறல் என்பது பழைய காயங்களைக் கிண்டி வலியை ஏற்படுத்துவது அல்ல, அது நீதியின் பிரகாரம் செய்யவேண்டியவற்றை தைரியமாகச் செய்வதே எனத் தெரிவிக்கின்றார்.

**உலகத் தமிழர் பேரவையின்மீதான தடையை அரசு எப்போது நீக்குமென நினைக்கிறீர்கள்? அது ஒருசில வாரங்களுள் நடக்குமானால் உங்கள் இலங்கைப்பயணம் எப்போது நடக்கும்?**

மகிந்த அரசால் புலம்பெயர்ந்தவர்களின்மீது களங்கத்தை ஏற்படுத்துவதற்கும், அவர்கள் இலங்கை அரசின் விரோதிகள் எனச் சித்திரிப்பதற்குமாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டது. இது நடப்பதற்கு நீண்டகாலத்துக்கு முன்பே புலம்பெயர் தமிழர்கள் இலங்கையைவிட்டு வெளியேறிவிட்டார்கள். எனக்கு இப்போது 81 வயதாகிவிட்டது. எனது வாழ்க்கையும் பணிகளும் இலங்கையின் முன்னைய அரசுகள் எல்லாவற்றாலும் அரசியல்வாதிகளாலும் களங்கப்படுத்தப்பட்டுவிட்டன. இந்த நிலைமையில் முன்னேற்றம் காணப்படும்போது நல்லிணக்கத்துக்கு என்னால் எனது பங்களிப்பைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு வரும்போது நான் இலங்கைக்குத் திரும்பக்கூடும்.

**போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்களது அமைப்பு ஏதாவது வழியில் உதவி செய்துள்ளதா?**

நான் மேலே விவரித்தவாறு உலகத் தமிழர் பேரவை அந்தந்த நாட்டிலுள்ள தேசிய அமைப்புக்களுடன் ஒருங்கிணைந்து முயற்சிகளை மேற்கொள்ளும் ஓர் அமைப்பாகும். நான் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்ட பலருக்கும் - வவுனியாவிலுள்ள பம்மைமடுப் பிரதேசத்திலுள்ள பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் - உதவிவருகிறேன். எமது அமைப்புக்கள் நிதி திரட்டி இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்து வருகின்றன.

**ஆயுதப் போராட்டம் தோல்வியடைந்ததில் இருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் எவை?**

ஆயுதப் போராட்டம் உருவானதற்கான காரணங்கள்:
1. தமிழர்களின் ஜனநாயக, சாத்வீகப் போராட்டத்தைத் தனது படைகளைக்கொண்டு அரசு அடக்க முயற்சித்தமையும் படைகளின் தன்னிச்சையான தான்தோன்றித்தனமான செயற்பாடுகளும்.
2. தமிழ் இளைஞர்களின் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை மறுக்கப்பட்டு மொழி ரீதியாக பாகுபடுத்தப்பட்டு அவர்களது எதிர்காலம் கேள்விக் குறியாகிப்போனமை.
3. இளைஞர்கள்மீதான குழுத்தாக்குதல்கள், குண்டுத்தாக்குதல்கள் போன்ற இம்சைகளால் அவர்கள் எதிர்த்துப் போராடி, தங்களது நிலைமைகளையும், மக்களையும் காப்பதற்காக அயுதம் ஏந்தவேண்டிய நிர்ப்பந்தம்.

எனவே, ஆயுதப் போராட்டத்தின் தோல்வியைப்பற்றி நாங்கள் பேசமுடியாது. அந்தப் போராட்டம் இலங்கை அரசால் மேலும் இருபது நாடுகளையும் சேர்த்துக்கொண்டு அடக்குமுறைகள் மூலமும், மனிதாபிமானமற்ற முறையிலும் கொடூரமான முறையில் அடக்கிஒடுக்கப்பட்டது. அரசுகளும் சர்வதேச சமூகங்களும் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தைப்பற்றி விமர்சித்தனவேதவிர, அதற்கான மூலகாரணத்தை அறிந்துகொள்ள முயற்சிக்கவில்லை. கடந்தகால உண்மைகளின் அடிப்படையில் சென்றாலே நாம் எதிர்காலத்தில் இருண்ட மூலைகளை விடுத்து ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கமுடியும்.

**ஆட்சி மாறுவதற்குமுன் தமிழர் பேரவையைச் சேர்ந்த சுரேன், "முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தால் அவர் சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்படுவார்" என்று கூறியிருக்கின்றார். அந்த எண்ணம் இன்றும் இருக்கிறதா?**

சுரேன் மற்றவர்களிடம் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் போது சொன்னவைபற்றி நான் கருத்துக்கூற விரும்பவில்லை. எதிர்கால சாத்தியங்கள்பற்றி மற்றவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களுக்கு எதிர்க்கருத்துக்கூற அவர்களுக்குச் சுதந்திரம் உண்டு.

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

கட்டணம் : கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



"இறைவா என்னைக் காத்தருளும்,
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்"
(தி.பா. 6:01)

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
இறைவனடி சேர்ந்து ஓராண்டு மறைந்தாலும்
உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றும் அகலாது.

நித்தமும் எம் நினைவில் .....
நிஜத்தில் இறைவனிடம் கலந்திட்ட
உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

### திரு. டோமினிக் பிரான்சிஸ்பிள்ளை
(நவசோதி)
(மன்னார் - பிரான்ஸ்)

மலர்வு : 03.09.1953
உதிர்வு : 13.12.2014

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, மகன்மார், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



"என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன்" (யோவான். 6:39)

நிறைந்து நிற்கும் நினைவுகள்...
உங்கள் உயிர்ச் சொட்டுகளின் குமுறல் ...
ஓராண்டு கரைந்தன... நினைவுகளல்ல....
நொடி கடந்தாலும் வலிக்கிறது வாழ்க்கைவரை...
அந்த மென்சிரிப்பு, மெலிதான புன்னகை,
அதிகமில்லா பேச்சு
இனி இல்லையென அறிந்தும்
எதிர்பார்க்கும் மனசு ...... ???
வாழ்வின் வசந்தங்களை எமக்குக் காட்டி
வராமலே போனது உமது உயிர்....!
எமது வாழ்வடங்கிப் போகும்
கடைசிக் கணங்களிலும்
உங்கள் நினைவுகள் மட்டும்
நிறைந்து நிற்கும் ஐயா!

### திரு. அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பிள்ளை
(மாளிகைப்பிட்டி, முருங்கன்)

மலர்வு : 17.01.1944
உதிர்வு : 02.11.2014

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்

## 41ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 05 08 2004
உதிர்வு 20 10 2015



### செல்வி. ராஜிசதுஷ்ரிக்கா
மாணவி, புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரி - கண்டி.
(கட்டையடம்பன், மடுறோட்)

நாட்கள் வாரங்களாகி மாதமொன்றும் ஆனதம்மா
ஆனாலும் ஆறவில்லை எம் மனவேதனை - மகளே!
துயரமென்னும் துன்ப அலையில் துடிக்கின்றோம்
உன் பாசமுகமும் நேசநினைவும் நீங்கவில்லை - மகளே!
அழுகின்றோம் அனுதினமும் உனைநினைத்து!

ஈடில்லா உன் இறையன்பும், கள்ளமில்லா உன் சிரிப்பும்,
கலகலக்கும் உன் பேச்சும், துள்ளிவரும் உன் நடையும்
எப்போ காண்போம் என ஏங்கித் தவிக்கின்றோம் - மகளே!
ஆண்டவரின் சந்நிதியில் அமைதியுடன் துயில்கொள்வீர்!

பிரிவால் நினைந்துருகும்.
பாசமிகு அப்பா, அம்மா, தம்பி, உற்றார் உறவினர்கள்.

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 04 1949
உதிர்வு 26 12 2013



### திருமதி. தாவிது அந்தோனியா (பிலோமினா)
(சிறுத்தோப்பு, பேசாலை)

இவர் திரு. ஜே. தாவிது (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வ. சந்தியோகு, ச. செபஸ்தியம்மா தம்பதிகளின் (கொவ்வங்குளம் - நானாட்டான்) அன்பு மகளும், திருமதி. எஸ். குமாரத்தி, காலஞ்சென்ற எஸ். சவிரியம்மா, திரு. ச. யேசுதாசன், திருமதி. ஜி. ராஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதிகளான எஸ். பி. சுகந்தி, எச். எம். வசந்தி, எஸ். இ. ஜெயந்தி, ஏ. கே. ஆனந்தி, எம். சகிலா ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு. எஸ். சகாயநாதன், திரு. பி. கென்றி அருமைநாதன், திரு. வை. செலஸ்ரின், திரு. எஸ். அருள்சீலன், திரு. ஏ. மைக்கல் சாள்ஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.
இவரின் ஆன்மா ஆண்டவரிடம் அமைதியடைய மன்றாடுவோமாக.
பிரிவால் நினைந்துருகும்.
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 12 1938
உதிர்வு 20 12 2014



### திரு. முத்தையா சுப்பிரமணியம் (லுபினாஸ்)
(சின்னக்கடை, மன்னார்)

மார்கழி திங்களில் மெய்விட்டுப் பிரிந்தது உம் உயிர்,
இன்றுடன் ஈராறு திங்கள்கள் எம் துயர்,
நீர் விண்தொட்ட இந்நாளில் நாம் மண்ணிட்ட நினைவு
நிழலாய்த் தொடர எம் உளம் கலங்கி நிற்குதையா.

பொறுமை எனும் பண்பே உம் திறமை ஆதலால் அவ்வழியில் நாம் கொண்டோம் பொறுமை அமைதியுடன் நீர் காட்டிய அன்புடமை அதுவே எமக்களித்த அறிவுடமை.

மறுக்க நினைக்கவில்லை ஆதலால் உம்மை மறக்க முடியவில்லை. நீர் விதைத்திட்ட விதைகள் ஒன்றும் விருட்சமாகாமல் இல்லை
நீர் வித்திட்ட முத்துக்கள் எம்மால் உம் பிரிவை ஏற்க முடியவில்லை.

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 20ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 04 1925
உதிர்வு 19 12 1995



### திரு. பா. அந்தோனிப்பிள்ளை
(இளைப்பாறிய அதிபர்)
(சூரியகட்டைக்காடு, நானாட்டான்)

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்." (2திமொ.4:7,8)

ஆண்டுகள் இருபது உதிர்ந்தாலும் உங்கள் நினைவு மாறாதையா! வழிகாட்டி வாழவைத்து நெறியூட்டி, நேரிய வாழ்வைக் கற்றுத்தந்து, இனிய கல்விமானாய் வாழ்ந்து புகழ் பெற்றீர்! நித்தியன் வீட்டிலே நீடு நிலைபெற இறைவனை எந்நாளும் வேண்டுகின்றோம்.
பிரிவால் நினைந்துருகும்,
அன்பு மனைவி, பாசமுள்ள பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 08 1938
உதிர்வு 14 12 2014



### திருமதி. யோசவ் இசபேல்
(முதலைகுத்தி, உயிலங்குளம்)

அன்பின் இறைவா! இவ்வுலகில் எம்மை நிறைவாக அன்புசெய்து எம்மோடு வாழ்ந்த பாசமிகு எமது தாயை கனிவுடன் நோக்கியருளும். உமது பேரின்ப இல்லத்தின் கதவுகளைத் திறந்து அவரை ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையோடு வேண்டுகின்றோம். இறைவா, நீர் எமக்கு நன்மைகளையன்றி தீமைகள் எவற்றையும் வரவிடமாட்டீர் என்ற நம்பிக்கையோடு எமது தாயை உமது பாதத்தில் ஒப்படைத்துள்ளோம்!
பிரிவால் நினைந்துருகும்.
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
தகவல் : அருட்சகோ. *J.* அகஸ்ரின் (டிலாசால் சபை)

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 08 1961
உதிர்வு 20 12 2013



### திருமதி. பிரகாசம் கிறேஸ்
உபதபால் அதிபர்
(பெரிய கட்டைக்காடு, நானாட்டான்)

இன்னுயிர் தந்து ஈன்றெடுத்த தாயே!
தன்னுயிர் கொடுத்து எமை வளர்த்த உத்தமியே!
இவ்வுலகு விட்டுப்பிரிந்து நீங்கள் இரண்டு ஆண்டு ஓடினாலும் உங்கள் நினைவு இழக்கவில்லை அம்மா நாம் மறக்கவில்லை.

தாயைப்போல தரணியில் யாரம்மா? - நீங்கள்
தந்த நல்லன்பு மறக்குமோ அம்மா?
தந்தையாம் இறை திருவடியில் அமர்ந்து
உங்கள் தனையற்காய் வேண்டுவீர் தாயே!

பிரிவால் நினைந்துருகும்,
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org